www.padippakam.com

16 - 31 அக்டோபர் 1997 ☐ ரூ. 3.50

பஞ்சாயத்துக்களில் தொடரும் சாதிய அடக்குமுறை

# புதிய ஜனநாயகம்



## மு.க.வின் மூளையாக குற்றப்பிரிவு போலீசு

படிப்பகம்

www.padippakam.com

## கொலைகார அதிகாரிகளுக்கு எதிரான மக்கள் போராட்டம்

திருப்பூரில் சாயப்பட்டறைகளால் நிலத்தடி நீரே நஞ்சாகிப் போனது. குடிக்க, குளிக்க, துவைக்க என அனைத்திற்கும் தண்ணீரை விலை கொடுத்துதான் வாங்க வேண்டும். இதனால் தண்ணீர் வியாபாரம் கொள்ளை லாபம் தரும் தொழிலாக மாறிவிட்டது. இதில் கொடி கட்டிப் பறக்கும் கும்பல், லஞ்சம் கொடுத்து காயலாங் கடைக்குப் போக வேண்டியவற்றைக் கூட தண்ணீர் லாரி என ஓட்டுகின்றனர்.. இல்லை இல்லை... பறக்கின்றனர். எத்தனை தடவை ஓடுகிறதோ அத்தனை லாபம் என்பதால் கண் மண் தெரியாமல் லாரிகள் பறக்கின்றன.

இதனால் சாலை விபத்தும், சாவும் சர்வ சாதாரணம். கடந்த ஆகஸ்ட் 21-ஆம் தேதி பரபரப்பான காலை வேளையில் மக்கள் கூட்டத்தில் ஒரு தண்ணீர் லாரி, கட்டுப்பாட்டை இழந்து புகுந்தது. இரு பள்ளிச் சிறுமிகள் உடனே பலியாகினர். பலரும் கடும் காயமுற்றனர்.

அச்சமயத்தில் இரு திருடர்கள் புகுந்து, உதவுவது போல அடிபட்டுத் துடித்த ஒரு பெண்ணின் நகைகளை திருடினர். ஆத்திரமடைந்த மக்கள் திருடர்களை அடித்துத் துவைத்தனர். அப்போது வந்த போலீசு திருடர்களைப் பாதுகாத்து மக்கள் மீது தடியடி நடத்தவே, மக்களின் கோபம் போலீசு மீதும், மாவட்ட வருவாய் அதிகாரி மீதும் திரும்பியது.

லாரியும், அதிகாரிகள் ஜீப்பும் தீயிடப்பட்டன. போலீசு துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலியானார். உண்மையிலே விபத்துக்குக் காரணம் தண்ணீர் லாரிகளுக்கு முறைகேடாக அனுமதி வழங்கிய அதிகாரிகள் தான். மக்களின் தன்னெழுச்சியான போராட்டம் அவர்களைக் குறிவைத்துத் தாக்கியது வரவேற்கத்தக்கது.

தகவல்: புதிய ஜனநாயக வாசகர் வட்டம்,
நம்பியழகன் பாளையம்,
மற்றும் முருகேசன், திருப்பூர்.

## போலீசு உதவியுடன் மரங்கள் கொள்ளை

கோத்தகிரி பேரூராட்சியில் ரூ. 1.5 லட்சம் மதிப்புள்ள மரங்கள் வெட்டிக் கொள்ளையடிக்கப்பட்டன. அரவேனுவைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர் நடராஜனுக்கு ஏலம் விடாமலேயே மரங்களை வெட்ட அனுமதி கொடுக்கப்பட்டது. இதற்காக கணிசமான தொகை லஞ்சமாக பேரூராட்சி அதிகாரிகள், தலைவர், வார்டு உறுப்பினர்களுக்குத் தரப்பட்டது.

இதை அம்பலப்படுத்தியும், குற்றவாளிகளைத் தண்டிக்கும்படியும் ம.க.இ.க. சார்பில் கோத்தகிரியில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. குற்றவாளிகளோ சுவரொட்டிகளை உடனே கிழித்து, ம.க.இ.க. என ஏதுமில்லை; இது வேண்டாதவர்களின் வேலை எனப் பிரச்சாரம் செய்தனர். நடவடிக்கை எதுவும் எடுக்காததால், குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரி பேரூராட்சி அலுவலகம் முன்பு ம.க.இ.க. சார்பாக ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டது.

இதற்கு போலீசிடம் அனுமதி கேட்டபோது, உதவி ஆய்வாளர் தர்மராஜன், 'யாரைக் கேட்டு சுவரொட்டி ஒட்டினாய்?' எனத் தொடங்கி போலீசு பாணியில் எகிறினார்.

மரங்களைக் கொள்ளையிட்டவனையும், துணை புரிந்தவர்களையும் கைது செய் என பிரசுரம் வெளியிட்டு, தர்மராஜனின் சட்ட விரோதச் செயல்களையும் தோலுரித்தனர் ம.க.இ.க. தோழர்கள்.

திட்டமிட்டபடி தொடர் முழக்கப் போராட்டம் வெற்றிகரமாக நடந்தது. கோவை ம.க.இ.க. செயலர் மணிவண்ணன் சிறப்புரையாற்றினார். 30 பேர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். தொடர்ந்து மழைத்தூறல் இருந்தும், ஒலிபெருக்கி மறுப்பு, பந்தல் போடத் தடை என போலீசின் அடக்குமுறையை மீறியும் தோழர்களின் தொடர் முழக்கங்கள் நாள் முழுதும் மலைகளில் எதிரொலித்தது; மக்களை அமைப்பை நோக்கி ஈர்த்தது.

தகவல்: ம.க.இ.க.,
கோவை மற்றும் நீலகிரி

# ஆவடி கனரக வாகனத் தொழிற்சங்கங்களின் துரோகம் அதிகாரிகளுக்கு சலாம்; தொழிலாளிக்கு மிரட்டல்

சென்னையில் உள்ள ஆவடி கனரகத் தொழிற்சாலையில் இராணுவத்திற்கான டி 72, விஜயந்தா டாங்குகள் தயாரிக்கப்படுகின்றன. மைய அரசுக்குச் சொந்தமான இவ்வாலை, நவீன தொழில் நுட்ப வசதியுடன், மிகத் திறமையாக இயக்கப்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலையில் இருந்து இந்திய இராணுவத்துக்குத் தேவையான டாங்குகளை வாங்கும் பொழுது, இராணுவ அதிகாரிகள் "கமிஷன்" அடிக்க முடியாது. எனவே, அவர்கள் இத்தொழிற்சாலையை முடக்கி விடச் சூழ்ச்சி செய்து வருகின்றனர்.

இச்சூழ்ச்சியின் ஒரு பகுதியாகவும், புதிய பொருளாதாரக் கொள்கையின் ஒரு பகுதியாகவும் தொழிலாளர்களைக் குறைப்பது, வேலைப் பளுவை அதிகரிப்பது என முடிவெடுத்தனர். அதன் முதற் கட்டமாக பீஸ் ரேட் உற்பத்தி முறையை சில கூடங்களில் அறிமுகப்படுத்த, மூன்றாவது மட்ட அளவில் பேசி முடிவெடுத்தனர்.

இந்த தொழிற்சாலையில் உள்ள ஜே.ஏ.சி.எம். என்ற தொழிலாளர் சங்கக் கூட்டமைப்பில் போலிகளின் தலைமையில் இயங்கும் ஏ.ஐ.டி.இ.எஃப். மற்றும் எல்.பி.எஃப், பி.எம்.எஸ்., ஐ.என்.டி.யு.சி., எஸ்.சி/எஸ்.டி. தொழிற்சங்கங்கள் இணைந்து செயல்படுகின்றன. கூட்டமைப்பின் செயலாளர் டி. பஞ்சாட்சரம் ஏ.ஐ.டி.இ.எஃப்.ஐயும், தலைவர் சுப்பிரமணி ஐ.என்.டி.யு.சி.யையும் சேர்ந்தவர்கள்.

ஜூலை 1-இல் நிர்வாகம் பீஸ் ரேட் உற்பத்தியை அறிமுகப்படுத்துகிறோம் என அறிவித்தது. இது தொழிலாளிக்கு விரோதமானது என எதிர்க்காமல், தங்களைக் கலந்து பேசி அறிவிக்கவில்லை என்று மட்டுமே ஜே.ஏ.சி.எம். எதிர்த்தது.

நிர்வாகம் உடனே அவர்களிடம் ஆலோசனை கேட்டது. ஜே.ஏ.சி.எம்.மோ, ஒரு கூடத்திற்கு இரு தொழிலாளியைத் தேர்வு செய்து, பிற தொழிற்சாலைகளுக்கு அனுப்பி விவரங்கள், அனுபவங்களைத் தொகுப்பது என முடிவெடுத்தது. அப்படி சென்று வந்த தொழிலாளிகள், பீஸ் ரேட் உற்பத்தியை இங்கு நடைமுறைப்படுத்த முடியாது என அறிக்கை தந்தனர்.

இதற்கு முக்கிய காரணம், எந்த ஆண்டும் உதிரி பாகங்கள் மொத்தமாக வந்ததில்லை என்பது தான். ஒரு டாங்க் செய்ய 43,000 உதிரி பாகங்கள் தேவை. இதில் 10 சதவீதம் இறக்குமதி செய்யப்படுகிறது. 40% தனியாரிடமிருந்து பெறப்படுகிறது.

உதிரி பாகங்கள் ஒரே நேரத்தில் கிடைக்காததால், வேலை பாதியில் நிற்கும். பொருள் வந்ததும்தான் வேலை முடியும். அதிகாரிகளே பினாமி பெயரில் ஆலை வைத்துக் கொண்டு உதிரிபாகம் தயாரிக்கின்றனர். இதில் தரக்குறைவானதும் வாங்கப்படுகிறது. இதுதான் பாதுகாப்புத் துறையின் லட்சணம்.

ஆனால் கூட்டமைப்பு தலைமையோ, அறிக்கை தந்த தொழிலாளிகளை பொது மேலாளரிடம் பேச அழைத்துச் சென்ற போது, விவாதிக்கக் கூடாது என்று கூறிவிட்டது. தொழிலாளியை வைத்துக் கொண்டே துரோகமிழைத்தது.

இதற்கு தொழிலாளரிடையே எதிர்ப்பு பெருகியது. 22.08.97 அன்று அதிகாரிகள் எதிரிலேயே பீஸ் ரேட் உற்பத்தியை எதிர்க்கிற சிலரை களை எடுத்தால், அறிமுகப்படுத்தலாம் எனப் பேசினார் பஞ்சாட்சரம். மறுநாளே 40, 50 கைக்கூலிகளுடன் வந்து, 'எந்தக் கொம்பனாக இருந்தாலும் வேலை செய்ய முடியாது எனக் கூறமுடியாது. மீறினால், சங்கமோ, கூட்டமைப்போ உதவாது' என நேரடியாகவே மிரட்டினார் பஞ்சாட்சரம்.

இதற்கு போலி கம்யூனிஸ்ட்டு சங்கங்கள் உட்பட எல்லோருமே உடந்தைதான். இவர்களின் துரோகத்தனத்தைப் புரிந்து கொண்டு, புரட்சிகர தொழிற்சங்கத்தைக் கட்டியமைப்பதுதான் தீர்வு.

• குமார், பு.ஜ.முகவர், சென்னை.



படிப்பகம்

www.padippakam.com


புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

தொகுதி: 12

இதழ்: 22 - 23

1 - 31 அக் '97

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# போலீசு அராஜகம் ஜெயா வழியில் கருணாநிதி ஆட்சி

தமிழக முதல்வர் கருணாநிதி மிகச் சிறந்த அரசியல் வித்தகர், ராஜதந்திரி, சாணக்கியன், நிர்வாகச் சூரப்புலி என்றெல்லாம் துதிபாடி வந்த பத்திரிகைகளும் 'நடுநிலை' அரசியல் விமர்சகர்களும் தி.மு.க. அரசின் பலமுனைத் தோல்விகளைத் தொடர்ந்து மெதுவாக முணுமுணுக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டமாகட்டும், தொழிலாளர் போராட்டமாகட்டும், போலீசு அட்டூழியங்களாகட்டும் - எதுவானாலும் பாசிச ஜெயாவின் பாதையில்தான் கருணாநிதி அடியொற்றிச் செல்கிறார். போராடும் மக்கள் மீது மிருகத்தனமாக போலீசு அடக்குமுறையை ஏவிவிடுவது, சங்கங்களை உடைத்து விசுவாச கருங்காலி சங்கங்களை உருவாக்குவது, குற்றப் புலனாய்வுத் துறை போலீசார் அளிக்கும் அறிக்கைகளையே வேதமாகக் கொண்டு எதிர்த்தரப்பினரைச் சாடுவது என்பதாக ஜெயா வழியில்தான் அவர் செல்கிறார்.

திரைப்பட கருப்புப்பண முதலாளிகளுக்கும் அவர்களை நத்திப் பிழைக்கும் 'படைப்பாளி'களுக்கும் ஆதரவு கொடுத்துவரும் கருணாநிதி, போராடும் திரைப்படத் தொழிலாளர்கள் (ஃபெப்சி) மீது அடுக்கடுக்கான பல பொய் வழக்குகளைச் சோடித்துக் கைது செய்தார். 'படைப்பாளி' சங்கத்துக்கு அடியாளாகப் போலீசை அனுப்பி, படப்பிடிப்பு நடத்த உதவுகிறார். பட்டினியால் பரிதவிக்கும் திரைப்படத் தொழிலாளர் குடும்பங்கள் அடுத்தடுத்து தற்கொலை செய்து கொண்டு மாண்டதை ஜெயலலிதா ஓர் அறிக்கையில் குறிப்பிட்டதும், ஆத்திரமடைந்த கருணாநிதி சி.பி.சி.ஐ.டி. போலீசை ஏவி ஜெயாவிடம் விசாரணை நடத்தி பட்டினிச் சாவுகளே நடக்கவில்லை என்று நிரூபிக்க கீழ்த்தரமான முயற்சிகளில் இறங்கினார். ஜெயா ஆட்சியில் ஃபெப்சி சங்கத்துக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தை மீண்டும் கைப்பற்ற முயற்சித்து, தொழிலாளர்கள் மறியலில் இறங்கியதும் அம்முயற்சியைக் கைவிட்டார்.

மேலவளவு படுகொலையைக் கண்டித்து கடந்த ஆகஸ்ட் 6-ம் தேதியன்று சென்னையில் தாழ்த்தப்பட்டோர் கூட்டமைப்புகள் நடத்திய பேரணியை கருணாநிதி வன்மத்தோடு ஒடுக்கினார். ரகசியப் போலீசாரின் அறிக்கையை வைத்து, ஏதோ படையெடுப்பு நடக்கப் போவதைப் போல பீதி கிளப்பினார். ஏறத்தாழ 5000 பேர் பங்கேற்ற ஊர்வலத்துக்கு 10,000-க்கும் மேற்பட்ட போலீசைக் குவித்தும், வெளியூர்களிலிருந்து ஊர்வலத்துக்கு வந்த வாகனங்களை வழிமறித்து தடுத்து நிறுத்தியும், ஊர்வலத்தை "வீடியோ" படமெடுத்தும் அச்சுறுத்தினார். சில தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளைத் தமக்குச் சாதகமாகவும், 'கிருஷ்ணசாமி தலைமைக்கு எதிராகவும் பிளவுபடுத்திக் குளிர்காய முயற்சிக்கிறார்.

டீசல் மானியம் கோரி அண்மையில் மீனவர்கள் போராடியபோது, சில சமூக விரோதிகளால் போராட்டம் திசை விலகிச் சென்றதும், அதையே சாக்காக வைத்து மீனவர்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலைப் போலீசார் கட்டவிழ்த்து விட்டனர். 14 நாட்களாக வேலை நிறுத்தம் செய்து பட்டினியோடு போராடிய மீனவர்களைப் பார்த்து, "நியாயமான கோரிக்கைகளுக்காக அவர்கள் போராடவில்லை; அ.தி.மு.க.வினர் திட்டமிட்டு நடத்திய வன்முறை" என்று சாடியதோடு, போராட்டம் தொடர்ந்தால் குண்டுகள் பாயும் என்று போலீசைக் கொண்டு மிரட்டுகிறார். மாநில அரசு டீசல் மானியம் தர ஒப்புக் கொண்டாலும் மத்திய அரசு மறுப்பதை எதிர்த்து மீனவர்கள் போராட்டத்தைத் தொடர முற்பட்டபோது, சில மீனவ சங்கங்களைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு போராட்டத்தைக் கைவிடச் செய்தார்.

போராட்டங்களின்பால் கருணாநிதி அரசின் அணுகுமுறைக்கும் அடக்குமுறைக்கும் இவை சில சான்றுகள்தான். கருணாநிதி முன்போல் இல்லை; எவ்வளவோ மாறிவிட்டார் என்றார்கள். உண்மைதான்; கருணாநிதி பாசிச ஜெயா வழியில் மாறிவிட்டார். 70-களில் இரும்புக் கரம் கொண்டு அவர் போராட்டங்களை ஒடுக்கிய அதேவழிக்கு மாறிவிட்டார். அதோடு, பாசிச எம்.ஜி.ஆர். - ஜெயா கும்பலால் பாசிச கிரிமினல் முறையில் பயிற்றுவித்து வளர்க்கப்பட்ட போலீசு கும்பலையே பெரிதும் நம்பி ஆட்சி நடத்துகிறார். அண்மையில் காஞ்சிபுரம், செய்யாறு ஆகிய பகுதிகளில் நடந்த பாலியல் பலாத்காரம், கொட்டடிக் கொலைகளை மூடி மறைத்து, அப்படியொரு சம்பவமே நடக்கவில்லை என்று குற்றப் புலனாய்வு போலீசு அறிக்கையைக் காட்டி திடலடியாக மறுக்கிறார். போலீசு பிரிவைக் கொண்டே போலீசுத்துறையின் அதிக்கிரமங்கள் மீது வீசாரணை நடத்தியும், பாதிக்கப்பட்டோரையும், சாட்சிகளையும் மிரட்டிப் பணிய வைத்து வாக்குமூலம் பெறும் அதன் 'திறமை'யை வியந்தும் போலீசுக்குப் புனிதப் போர்வை போர்த்துகிறார்.

கருணாநிதி பதவிக்கு வந்தபோது முக்கியமாக இரு விடயங்களைக் குறிப்பிட்டார். ஒன்று, "பத்திரிகைகள் எதிர்க்கட்சிகளைப் போல செயல்படவேண்டும்; அவை சுட்டிக் காட்டும் புகார்களின் மீது உரிய நடவடிக்கை எடுப்பேன்" என்றார். இரண்டு, "முந்தைய ஜெயாவின் ஆட்சியில் போலீசுத் துறை ஆட்சியாளர்களின் கைப்பாவையாகிவிட்டது. அதைச் சீரமைத்து அரசியல் தலையீடின்றி செயல்பட ஆவண செய்வேன்" என்றார். இரண்டுமே இன்று பொய்த்துப் போய்விட்டது. சந்தன மரக்கடத்தலில் தி.மு.க. பிரமுகர்களுக்குத் தொடர்பு உள்ளதை "இந்து" நாளேடு அம்பலப்படுத்தியதும் ஆத்திரத்தில் எரித்து விழுந்த கருணாநிதி எச்சரிக்கையும் விடுத்தார். 'சூத்திர' ஆட்சியைக் கவிழ்க்க பத்திரிகைகள் சதி செய்வதாகக் குற்றம் சாட்டினார். அடுத்து, எந்த போலீசுத் துறை பாசிச ஜெயா கும்பலுக்கு விசுவாசமாகச் செயல்பட்டதோ அதை அப்படியே தமக்குச் சாதகமாக சேவை செய்யுமாறு மாற்றிக் கொண்டுள்ளார். தமிழக அரசின் கண்ணும் காதும் மூக்கும் மூளையுமாக போலீசுத் துறையை மாற்றிக் கொண்டதோடு, அதன் வழிகாட்டுதலிலேயே ஆட்சியைத் தொடர்கிறார்.

www.padippakam.com

# வெறிக்கூத்தாடும் தமிழக போலீசு



நாய் வாலைக் கூட நிமிர்த்தி விடலாம். ஆனால் 'சட்டத்தின் காவலர்'களான காவல் துறையின் சட்ட விரோத அத்துமீறல்களை காரியங்களை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது.

கடந்த பார்ப்பன பாசிச ஜெ. ஆட்சியின் 5 ஆண்டுகளில் 80 கொட்டடிக் கொலைகளை (இவை வெளியே தெரிந்தவை) நடத்திய தமிழக காவல் துறை, இந்த 14 மாத கால திமுக ஆட்சியில் 15 கொட்டடிக் கொலைகளை நடத்தி முடித்துள்ளது. கணக்கில் வராமல் அமுக்கப்பட்டவை எவ்வளவோ தெரியாது.

• ஆவடி காவல்துறை எல்லைக்குட்பட்ட அன்னனூரில் சட்ட விரோதமாகப் புகுந்த முத்தாதிப் பேட்டை காவலர்கள் ஜெயராமன் உட்பட ஆறு பேரைக் கைது செய்தனர். இழவு வீட்டில் இரவில் கண் முழிக்க சீட்டாடியது இவர்கள் குற்றம். 22.7.97-இல் கைதானவர்களை பல நாட்களாக நீதிபதி முன் நிறுத்தவில்லை. சட்ட விரோதமாக அடைத்து வைத்திருந்ததோடு, ஜெயராமனை அடித்து சித்திரவதை செய்து 3.8.97-ல் கொன்றது. மாரடைப்பில் இறந்ததாக இப்போது கதைக்கிறது.

• ஆண்டிமடத்தில் ஆயுதங்களைப் பறிகொடுத்த காவல் துறை, அதன் பின் நடத்திய அட்டூழியங்கள் அநேகம். தமிழ்நாடு விடுதலைப் படை இராமசாமி குழுவைச் சேர்ந்த குமார் என்பவரின் தந்தை சடையனை விசாரணைக்கு என அழைத்துச் சென்று, கொன்று, காவல்நிலைய வளாக மரத்திலேயே தொங்க விட்டது. இது தற்கொலை எனச் சாதிக்கிறது போலீசு கிரிமினல் கும்பல்.

• சென்னையில் ஆகஸ்ட் 25-ம் தேதி ஜெ.ஜெ. நகர் காவல் நிலையத்தில் செல்வராஜ் என்பவரை அடித்துக் கொன்றனர். அதேநாளில் பேசின் பிரிட்ஜ் காவல் நிலையத்தில் ரமேஷ் என்ற 16 வயது சிறுவனை விலங்கு மாட்டி, சுற்றி வளைத்துத் தாக்கிப் படுகொலை செய்தது. இதை மறைக்க பிணத்தை ரயில் தண்டவாளத்தில் வைத்து தலை, உடல் என வேறாக்கியது.

• செப்டம்பர் 5-ஆம் தேதி குடித்துக் கும்மாளமிட்ட சிவகங்கை காவலர்கள், காவல் நிலையத்திலேயே 4 திமுகவினரை, கத்தி, அரிவாளால் தாக்கி, உயிருக்கு ஆபத்தான நிலையில் தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். திமுக நகரச் செயலாளர், நகர இளைஞரணிச் செயலாளர், இரு திமுக தொண்டர்கள் - நால்வருமே காவல் துறையினர் குடித்து விட்டு தகராறு செய்து, தாக்கியதை புகார் செய்ய காவல் நிலையம் சென்றவர்கள்.

• பத்மினி வழக்கில் தண்டனை வழங்கப்பட்டு, அந்த மை உலருமுன் செப்டம்பர் 7-ஆம் தேதி காஞ்சிபுரத்தில் காமாட்சி என்பவர் காவல் நிலையம் சென்ற போது காந்தி, மணிமாறன் என்ற இரு உதவி ஆய்வாளர்கள் அவரை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றனர். அவர் தப்பி ஓடி வந்து விட்டார்.

அவரது அண்ணன் முருகனை கைது செய்து காவல் நிலையத்தில் வைத்துத் தாக்கிய காவல் துறையினர், தாங்கள் தேடிய முருகன் வேறு ஆள் என இந்த முருகனை பிறகு விரட்டிவிட்டனர்.

• இவை நடந்து முடிந்த பின் செப்டம்பர் 10-ஆம் தேதி காவல்துறை அதிகாரிகள் கூட்டத்தைக் கூட்டினார் கருணாநிதி. 'காவல் துறையினர் மனிதாபிமானத்துடன் மக்கள் பிரச்சினைகளை அணுக வேண்டும்' என்றார். 'காவல் நிலையச் சாவுகளுக்கு உயர் அதிகாரிகளும் பொறுப்பு; அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார். ''உண்மையை வரவழைப்பதற்காக கைதியை அடித்தால் கூட அந்தப் போலீசு அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என கருணாநிதி வலியுறுத்தினார்.

• இவற்றுக்கு பதிலடி தருவதைப் போல செப்டம்பர் 12-ஆம் தேதி இரவு செய்யாறு காவல் நிலையத்தில் மோகன் என்ற கூலித் தொழிலாளி அரை மணி நேரத்தில் அடித்துக் கொல்லப் பட்டார்.

• செப்டம்பர் 16-ஆம் தேதி தஞ்சை மாவட்டம் குரும்பூண்டியில் 16 வயது பெண் செல்லம் என்பவரை, நாகராஜ் என்ற போலீசு மூக்குமுட்டக் குடித்து விட்டு கையைப் பிடித்து இழுத்துள்ளான். பயந்து போன செல்லம் அருகில் உள்ள கடைகளில் தஞ்சம் புகுந்து தப்பினார்.

பிறகு தனது தாய்மாமனுடன் சைக்கிளில் சென்ற செல்லத்தை பைக்கில் வந்து மறித்து கடத்திச் செல்ல முயன்றான் போலீசு நாகராஜ். இதைக் கேள்விப்பட்ட மக்கள் கூடி நாகராஜை அடித்து உதைத்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

• திருச்சி புவாக்குடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் நள்ளிரவில் இரண்டு வீடுகளைத் தட்டி, கதவைத் திறந்த பெண்களை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்று பிடிபட்டான். ஏற்கனவே இதேபோன்ற குற்றத்திற்குள்ளாகி தற்காலிக பணி நீக்கத்திலிருந்து 3 நாள் முன்புதான் இக்காவல் நிலையத்தில் திரும்ப பணிக்கு சேர்ந்தவன் இந்த உதவி ஆய்வாளர்.

இங்கு பட்டியலிடப்பட்டவை ஆகஸ்ட், செப்டம்பரில்

[கடிகாரச் சுற்றுப்படி] போலீசுக் கொட்டடியில் கொலை செய்யப்பட்ட சென்னையைச் சேர்ந்த சிறுவன் ரமேஷ்; செய்யாறு கூலித் தொழிலாளி மோகன்; ஆண்டிமடம் சடையன்; சிவகங்கை போலீசாரால் வெட்டப்பட்ட தி.மு.க. தொண்டர் காயம்பு மற்றும் நகர தி.மு.க. செயலர் அழகர்சாமி.








படிப்பகம்

www.padippakam.com



நடந்தவை. சென்னைப் பதிப்பு தினசரிகளில் வந்தவை. இன்னும் தென் பகுதிகளில் எவ்வளவு நடந்தனவோ தெரியாது.

காவல் நிலையம் என்றாலே கொலைக்களமாகவும், பாலியல் பலாத்காரம் செய்யும் கும்பல்களின் கூடாரமாகவும் மாறிவிட்டன.

கருணாநிதி முதல்வராகப் பதவி ஏற்றதுமே காவல் துறையில் 75 சதவீதம் கெட்டுவிட்டது எனக் கூறினார். இன்று அது 100 சதவீதமாக மாறிக் கொண்டுள்ளது.

அதிகாரம் இருக்கிறது என்பதற்காக நினைத்தபடி யாரையும் காவல் துறையினர் கைது செய்ய முடியாது எனத் தீர்ப்பு வழங்கியுள்ளது உச்சநீதி மன்றம். மேலும், போலீசார் ஒருவரைக் கைது செய்யும் பொழுது கண்டிப்பாக பின்பற்ற வேண்டியவைகளாக உள்ள விதிகளைத் தான் உச்ச நீதிமன்றம் 11 கட்டளைகளாகக் கூறுகிறது. விதி விலக்கின்றி நாட்டின் எந்த மூலையிலும் எந்த போலீசும் இதைக் கடைப்பிடிப்பதில்லை. இத்தீர்ப்பின் ஒரு சிறப்பம்சம் என்னவென்றால் இதைக் கடைப்பிடிக்காத காவல் துறையினர் உச்சநீதி மன்றத்தை அவமதித்த குற்றம் புரிந்தவர்களாவார்கள். அதன்படியும் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என எச்சரித்துள்ளது உச்சநீதி மன்றம்.

ஏற்கனவே உச்சநீதி மன்றத்தின் பல தீர்ப்புகளில், காவல் துறையினரைச் சட்டப்பூர்வ கிரிமினல் கும்பல் எனக் கடுமையாகச் சாடியுள்ளனர் நீதிபதிகள்.

இத்தனைக்கும் பின்னரும்கூட காவல் துறையின் அத்து மீறல்களும், கொட்டடிக் கொலைகளும், பாலியல் வன்முறைகளும் குறையாமல் அதிகரிக்கத்தான் செய்கின்றன. இதற்குக் காரணம் என்ன?

குடிநீருக்காக மனுக் கொடுத்து சலித்த மக்கள் சாலை மறியல் செய்தால் அங்கு போலீசை ஏவி தடியடியும் துப்பாக்கிச் சூடும் நடத்திக் கொல்லுகின்றனர்.

சாலை வசதி, சாக்கடை வசதி, கழிப்பிட வசதி, சுகாதார வசதி, மருத்துவ வசதி, பேருந்து வசதி என மக்களின் அடிப்படை தேவைகளைச் செய்து தர மறுக்கிறது இந்த வக்கற்ற அரசு.

கேடு கெட்ட இந்த அரசுக்கெதிராக, தங்களின் அடிப்படைத் தேவைகளை வலியுறுத்திப் போராடும் மக்கள் மீது போலீசை ஏவுகிறது அரசு. தடிபடி நடத்தி மக்களின் மண்டைகளைப் பிளந்து இரத்த வெள்ளத்தில் மூழ்கடிப்பதிலிருந்து துப்பாக்கிச் சூடு நடத்தி அப்பாவிகள் உயிரைப் பறிப்பது வரை அனைத்து அடக்குமுறைகளையும் அரங்கேற்றுகிறது போலீசு.

ஆம். மக்களை ஒடுக்குவதற்காக மட்டுமே பயிற்றுவிக்கப்பட்டு, ஊட்டி வளர்க்கப்படும் கொடூரமான அடக்குமுறைக் கருவிகள் தான் இந்தப் போலீசும் இராணுவமும். விசாரணை என்ற பெயரில் மக்களுக்காகப் போராடும் முன்னணியாளர்களை கைது செய்து, கொன்று, எரித்து, மறைப்பதற்கு போலீசுக்கு கற்றுத் தந்தது நீங்கள் தானே! மக்களுக்காகப் போராடும் பெண்கள் மீது பாலியல் வன்முறையை ஏவி இழிவுபடுத்த, ஒடுக்க அவர்களைப் பயிற்றுவித்தது நீங்கள் தானே! போராடுகின்ற தொழிலாளி, விவசாயி, மீனவப் பெண்களை இழிவுபடுத்த போலீசை ஊக்குவித்ததும் நீங்கள்தானே! ஆலையை மூடி ஆயிரக்கணக்கான தொழிலாளிகளின் வயிற்றிலடித்த முதலாளி மீது தடியடி, துப்பாக்கி சூடு நடத்தியதாக கேள்விப்பட்டதுண்டா? அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச கூலியைத் தர மறுத்த பண்ணையாரைக் கைது செய்ததாக வரலாறு உண்டா? பொதுத்துறை ஊழியர்களின் போராட்டத்திற்கு காரணம் என அதிகாரிகளைச் சிறையிலிட்டதுண்டா?

இல்லை. மக்களை ஒடுக்கத்தான் போலீசு. இதை மூடி மறைத்து, சட்டம் - ஒழுங்கைப் பாதுகாக்க, குற்றங்களைத் தடுக்க போலீசு என நம் காதில் பூ சுற்றுகிறார்கள். இதை மட்டும் செய்வதற்கில்லை போலீசு. மாறாக அரசின், ஆட்சியாளர்களின், முதலாளிகளின், நிலப்பிரபுக்களின், அதிகாரிகளின் நலன்களைக் காப்பதுதான் போலீசின் மிகப் பெரும் பணி. இவர்களுக்காக மக்களை ஒடுக்க உருவானதுதான் போலீசு.

இப்படி மக்களை ஒடுக்குவதற்காகவே வளர்க்கப்படும் போலீசு பொது மக்களின் நண்பனாக ஆவது எப்படி?

இன்னும் எத்தனை உச்சநீதி மன்றத் தீர்ப்புகள் வந்தாலும், முதல்வர், போலீசு அதிகாரிகள் கூறினாலும் மக்களின் நண்பனாக போலீசு ஒரு போதும் ஆக முடியாது. இவர்கள் ஜெனரல் டயரின் வாரிசுகள்.

## பத்மினி பாலியல் வன்முறை வழக்கு
## போலீசு திமிர் அடங்கவில்லை

சிதம்பரம் பத்மினி வழக்கில் அவரது கணவர் நந்த கோபால் காவல் நிலையத்தில் அடித்தே கொல்லப்பட்டதை ஆதாரமில்லை என முதலிலேயே கை கழுவி விட்டது போலீசு. பத்மினி பாலியல் வன்முறைக்கு ஆளானதை மறைக்க முடியவில்லை. அவர் உயிருடனிருக்கிறாரே!

இந்த கொலைகார - காமுகர்களை புகைப்படம் கூட பிடித்து விடக்கூடாது என டி.எஸ்.பியும், ஆயுதக் காவலர்களும் நடத்திய அராஜகங்களுக்கு, அவர்களும் தண்டிக்கப்பட வேண்டும். அந்த அளவு அக்கிரமம் செய்தனர். ஒரு நிருபரின் புகைப்பட கருவியை உடைத்தனர்.

இன்று ஜெயா, ராவ் செய்வதைப் போல வழக்கை இழுத்தடிக்க எல்லா வழியிலும் முயன்றனர் குற்றவாளிகளான போலீசார். இவை அனைத்தையும் மீறி 4.9.97-ல் தீர்ப்பு வந்தது.

ஒரே குற்றம் செய்த அதிகாரிகளுக்கு 3 ஆண்டு சிறையும் அபராதமும். போலீசுக்கோ 10 ஆண்டு சிறையும் அபராதமும். நியாயப்படி பார்த்தால் அதிகாரிகளுக்கு போலீசை விட கூடுதல் தண்டனை தர வேண்டும்.



பத்மினி வழக்கில் தண்டிக்கப்பட்ட தனது சகாக்களின் முகங்களை மறைத்துக் கூட்டி வரும் தமிழகப் போலீசார்

இவர்களுடன் கூலிப்படையினரும் சேர்ந்தே இவற்றை அரங்கேற்றினர். அந்த அளவு இணை பிரியாநட்பும் கூட்டும்.

இத்தனைக்கும் பிறகு சித்திக் என்கிற நீதிபதி 4 காவலர்களுக்கு தண்டனையை நிறுத்தி பிணை வழங்கினார். சிறப்பு புலனாய்வுப் பிரிவும், பெண்கள் - சிவில் உரிமை அமைப்புகளும் எதிர் மனு செய்து வாதாடவே பிணை ரத்தானது.

காஞ்சிபுரம் போலீசு மிருகங்களின் காமவெறிக்குப் பலியாகாமல் தப்பித்த அபலை காமாட்சி





படிப்பகம்

www.padippakam.com



# டயானா-தெரசா: ஏகாதிபத்திய நரகத்தின் இரு தேவதைகள்



ஏகாதிபத்திய உலகின் தொண்டுள்ளம் கொண்ட கனவுக் கன்னியாகக் காட்டப்பட்ட டயானாவும், டயானாவின் ஆதர்ச கன்னியாஸ்திரீயான 'அன்னை' தெரசாவும் அடுத்தடுத்து மாண்டு போய் விட்டார்கள். ''அவர்கள் நாம் வாழும் காலத்தின் இரு தேவதைகள்'' என்று ஏகாதிபத்திய உலகம் அஞ்சலி செலுத்தி அரற்றுகிறது.

டயானா — அரண்மனை ஆடம்பர வாழ்வும் களிவெறியாட்டமும் கொண்டிருந்த இளவரசி. கணவர் வேல்ஸ் இளவரசருடன் ஏற்பட்ட மணமுறிவைத் தொடர்ந்து, பழமைவாத சலிப்பூட்டும் அரண்மனை வாழ்விலிருந்து வெளியே வந்து, ஆடம்பர விளம்பரத்துடன் சமூக நலனில் அக்கறை உள்ளவராகத் தன்னைக் காட்டிக் கொண்டார், டயானா. ''எய்ட்ஸ் நோயாளிகள், கண்ணி வெடிகளை அகற்றுதல் முதலானவற்றுக்காக தனது விலை மதிப்பற்ற ஆடைகளை ஏலம் விட்டு நிதி திரட்டினார்; பாதிக்கப்பட்டோரை நேரில் சென்று சந்தித்து ஆறுதல் கூறினார்'' என்று அவரது சமூகத் தொண்டுகளைப் பட்டியலிட்டு ''மக்களின் இதயங்களில் வாழ்ந்த இளவரசி'' என்று பத்திரிகை உலகம் பாராட்டுகிறது.

மேட்டுக்குடிப் பெண்களுக்கு 'சமூக சேவை' என்பதும் ஒரு பொழுது போக்கு. சினிமா நடிகைகள்கூடச் சேரிகளுக்கும், அனாதை இல்லங்களுக்கும் சென்று சேவை செய்வதும், நகரங்களில் எக்ஸ்னோரா அமைப்புகளில் தொண்டாற்றுவதுமாக காலம் மாறிவிட்டது. உலக அழகி ஐஸ்வர்யா ராய் கண்தானம் பற்றி தொலைக்காட்சி துண்டுப் படத்தில் அறிவுறுத்துவதோடு, தனது கண்களையும் தானமாகத் தருவதற்கும் ஏற்பாடு செய்துள்ளார். இதே போலத்தான் டயானாவும் 'சமூகத் தொண்டாற்றினார்'. அரச குடும்பத்தைச் சேர்ந்த, அழகும் கவர்ச்சியும் கொண்ட செல்வச் சீமாட்டியான டயானா 'சமூக சேவை' செய்ததும், அது பிரபலமாகி, அவரது தலைக்குப் பின்னே பத்திரிகைகள் ஓர் ஒளிவட்டத்தை உருவாக்கின.

எய்ட்ஸ், கண்ணி வெடிகளுக்கு எதிராக 'சமூக சேவை' செய்த அவர், அதற்கென திட்டமோ, அமைப்போ கொண்டிருக்கவில்லை. இவற்றுக்குக் காரணமான ஏகாதிபத்தியவாதிகள், யுத்த வெறியர்களை எதிர்க்கவுமில்லை. இன்னும் சொல்லப் போனால், இத்தகைய ஏகாதிபத்திய கனதனவான்களிடமிருந்துதான் தனது 'சமூக சேவை'க்கு நன்கொடை திரட்டினார்.

கோட்டீஸ்வர புதுக்காதலன் டோடியுடன் உல்லாசப் பயணம் சென்று திரும்பும் போது கார் விபத்தில் டயானா பாரீசு நகரில் பலியாகிப் போனார். பத்திரிகை புகைப்படக்காரர்கள் அவரை விடாமல் துரத்தியதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சிலர் குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால் அதே கிசுகிசு பத்திரிகைகள்தான் டயானாவின் ஒவ்வொரு அசைவையும் செய்தியாக வெளியிட்டு பரபரப்பூட்டி அவரைப் பிரபலப்படுத்தின. சமூகப் பிரச்சினைகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, மக்களின் கீழ்த்தரமான ரசனைக்குத் தீனிபோடும் கிசுகிசு - பரபரப்பு செய்திகளை வெளியிட்டு கொழுத்த லாபம் கண்ட இம்மஞ்சள் பத்திரிகைகளை அன்று யாரும் எதிர்க்கவில்லை; இன்றும் இத்தகைய பத்திரிகைகளைத் தடைசெய்யக் கோரவுமில்லை.

★☆★

'அன்னை' தெரசா — அல்பேனியாவிலிருந்து சமூக சேவை செய்ய, கத்தோலிக்க திருச்சபையின் கன்னியாஸ்திரீயாக கல்கத்தாவுக்கு வந்தவர். பெரு நோயாளிகள், நிராதரவான முதியோர், அனாதைக் குழந்தைகளுக்காக ஓர் இல்லத்தைத் தொடங்கி நடத்தி, 'தன்னலமற்ற சமூக சேவைக்காக' நோபல் பரிசு பெற்றவர். ஏழை நாடுகளின் ஏழைகளுக்கு இளைப்பாறுதல் தருவதற்காகவே பிறப்பெடுத்ததாகக் கூறும் இம்மூதாட்டி மரணமடைந்ததும், உலக நாடுகள் அவரது தொண்டுள்ளத்துக்குத் தலை வணங்கி அஞ்சலி செலுத்துகின்றன.

ஆனால் ரோமன் கத்தோலிக்க திருச்சபை தனது அரசியல் நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வதற்கான ஆயுதமாகச் செயல்பட்டவர்தான் 'அன்னை' தெரசா. ஏழை நாடுகளைச் சூறையாடும் ஏகாதிபத்தியங்களின் குற்றவுணர்வுகளுக்கு ஏற்படுத்தியிருக்கும் வடிகால்தான் 'அன்னை' தெரசா. நிலவுகின்ற சுரண்டல் அமைப்பை பாதுகாப்பதே தெரசாவின் கொள்கை. அதற்கு ஆபத்து ஏற்படும் போது, கடைந்தெடுத்த பாசிச பிற்போக்குவாதிகளையும் ஆதரிக்க தெரசா தயங்கியதில்லை. இந்த உண்மைகளை கிறிஸ்டோபர் ஹிட்சென்ஸ் என்ற பிரிட்டிஷ் பத்திரிகையாளரும், பிரிட்டனில் குடியேறிய பாகிஸ்தானிய பத்திரிகையாளரான தாரிக் அலியும், ''நரகத்தின் தேவதை'' என்ற தமது தொலைக்காட்சி குறும்படத்தின் மூலம் ஏற்கனவே அம்பலப்படுத்தியுள்ளனர். பிரிட்டிஷ் தொலைக்காட்சியிலேயே இக்குறும்படம் ஒளிபரப்பப்பட்டது.

உலகின் மிகக் கொடிய சர்வாதிகாரியும், கொள்ளையனுமாகிய ஹெய்தி நாட்டின் அதிபர் டுவாலியரிடமிருந்து 1980-இல் தெரசா ஓர் உயரிய விருதைப் பெற்றார். ''ஏழை குடிமக்கள் தங்கள் நாட்டு அதிபருடன் சகஜமாகப் பழகுவதை இங்குதான் பார்க்கிறேன்'' என்று தெரசா அவனுக்குப் புகழ்மாலை சூட்டினார். அடுத்த சில ஆண்டுகளிலேயே மக்களின் பெரும் போராட்டத்தால் உயிருக்கு அஞ்சி, கொள்ளையடித்த பணத்தோடு பிரான்சில் தஞ்சம் புகுந்தான், 'அன்னை' தெரசாவின் நற்சான்றிதழ் பெற்ற இச்சர்வாதிகாரி.

தன்னுடைய கைகளால் சுதந்திரத்தின் பதக்கத்தை தெரசாவுக்கு அணிவித்தார், அன்றைய அமெரிக்க அதிபரும் போர்வெறியனுமாகிய ரீகன். ரீகன் - புஷ்ஷின் கைகள்தான் மத்திய அமெரிக்காவிலும், ஈராக்கிலும் படுகொலைப் பயங்கரங்களை நடத்தின என்பதை தெரசா அறியாமல் இல்லை. அமெரிக்கக் கூலிப்படைகளின் பயங்கரவாதத் தாக்குதலால் கொலைக்களமாகிக் கிடந்த எல்சால்வடாருக்கு தெரசா சென்றார். குவாதிமாலாவுக்குச் சென்றார். அங்கெல்லாம் அமெரிக்காவின் முயற்சியால் 'அமைதி' நிலவுவதாக அறிக்கை விட்டார்.

ஏகாதிபத்தியங்களுக்கும் இராணுவ சர்வாதிகாரிகளுக்கும் மட்டுமல்ல; கத்தோலிக்க தலைமைக் குருபீடமான வாடிகனுக்கும் கூட தெரசா உண்மையான பிரதிநிதியாகச் செயல்பட்டார். கருத்தடை, கருச்சிதைவு, பெண்ணுரிமை ஆகியவற்றுக்கு எதிரா்க கத்தோலிக்க மதபீடம் கொண்டிருந்த பிற்போக்குக் கொள்கைகளையே தெரசா நியாயப்படுத்தினார். வீடற்ற மக்களின் பிரதிநியாக தன்னைக் காட்டிக் கொண்டு பிரிட்டனுக்கு வந்த தெரசா, அப்பிரச்சினையை விடுத்து, கருச்சிதைவை எதிர்க்கும் மசோதாவுக்கு ஆதரவைத் தேடி அன்றைய பிரிட்டிஷ் பிரதமர் தாட்சரிடம் தூது சென்றார். நிகரகுவாவில் கம்யூனிஸ்டுகள் தலைமையிலான ஏகாதிபத்திய எதிர்ப்பு



படிப்பகம்

www.padippakam.com

கூட்டணி ஆட்சிக்கு எதிராக நின்ற கத்தோலிக்க மதவெறி பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக, அந்நாட்டுக்குச் சென்றார் தெரசா. சோவியத் ஒன்றியத்தில் போலி சோசலிசத்தை வீழ்த்தி, திருச்சபைகளை உயிர்ப்பிக்க வாடிகனின் தூதராக அவர் ஆர்மேனியா சென்று வந்தார். அமெரிக்க மக்களின் சேமிப்புப் பணத்தை கோடிக்கணக்கில் சூறையாடி, நிதிமோசடிக் குற்றம் நிரூபிக்கப்பட்டு சிறையிடப்பட்ட கீட்டிங் என்பவனது விமானத்தையே தெரசா தனது வெளிநாட்டுப் பயணங்களில் அதிகம் பயன்படுத்தினார் - காரணம், கீட்டிங் ஒரு கத்தோலிக்க மதவெறியன்!

அதே சமயம், தாழ்த்தப்பட்ட கிறித்துவர்களைப் பொருத்தவரை அவரது அணுகுமுறை வேறாக இருந்தது. ஈராண்டுகளுக்கு முன்பு தாழ்த்தப்பட்ட கிறித்துவர்களுக்கு இட ஒதுக்கீடு கோரி போராட்டங்கள் பெருகிய போது, போப்பாண்டவரின் பிரதிநிதியாக பாதிரியார் லூர்துசாமி, இது பற்றி விவாதிக்க 'அன்னை' தெரசாவுக்கு அழைப்பு விடுத்தார். இதற்கு உடன்பட்ட தெரசா, பிறகு பின் வாங்கி, இப்பிரச்சினையிலிருந்து ஒதுங்கிக் கொண்டார். தமக்கு ஆதரவாக நிற்பார் என்று தெரசா மீது நம்பிக்கை வைத்திருந்த தலித் கிறித்துவர்கள் இதனால் ஏமாற்றமும் எரிச்சலும் அடைந்தனர். சில தலித்துகள் அவரது 'கருணை' இல்லத்திலிருந்து வெளியேறி, தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

தெரசாவுக்குக் கிடைத்த நன்கொடைகளைக் கொண்டு அவர் ஓர் ஐந்து நட்சத்திர மருத்துவமனையை ஏழைகளுக்காக கட்டியிருக்க முடியும். ஆனால், அதற்கு அவர் ஒரு போதும் முயற்சித்ததில்லை. 'பாவப்பட்ட' நோயாளிகள் ஆண்டவனுக்குப் பதிலாக விஞ்ஞானிகள் மீது நம்பிக்கை வைத்துவிடுவார்கள் என்ற அச்சம்தான் காரணம். அதனால்தான், இன்னும் மருந்து கண்டறியப்படாத எய்ட்ஸ் நோயாளிகளுக்கு அண்மைக் காலமாக கூடுதலாக அடைக்கலம் அளித்தார்.

“நீங்கள் ஏன் எயிட்ஸ் நோயாளிகளுக்கு அடைக்கலம் தருகிறீர்கள்?” என்று இங்கிலாந்து வந்த தெரசாவிடம் பத்திரிகையாளர்கள் கேட்ட போது, “எயிட்ஸ்-க்கு மருந்தில்லை. இருப்பினும் எயிட்ஸ் நோயாளிகளை எங்களுடன் வைத்துக் கொள்கிறோம். எங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு அன்பைச் செலுத்துகிறோம். அவர்கள் மிக அழகாக மரணமடைவார்கள்” என்று பதிலுரைத்தார் தெரசா.

'அழகான' சாவுக்கு அடைக்கலம் தருவதும், நோயாளிகளைப் பரமண்டலத்துக்கு விரைவாக அனுப்பி வைப்பதும்தான் அவரது சமூக சேவையின் நோக்கம் என்பதை இது மெய்ப்பித்துக் காட்டுகிறது. இதை, சில ஆண்டுகளுக்கு முன்பாகவே பிரிட்டிஷ் மருத்துவப் பத்திரிகையான “லான்சர்” அம்பலப்படுத்திக் காட்டியது. கழுவப்படாத ஊசிக்குழல்களும் ஊசிகளும் தெரசாவின் கருணை இல்லத்தில் பயன்படுத்தப் படுவதையும், சுகாதாரமற்ற சூழ்நிலையும், பயிற்சி பெறாத தாதிகளும் உள்ளதை அது விமர்சித்துச் சாடியது. அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ள நோயாளிக்கு ஆத்ம சரீர சுகம் அளிக்கும் பிரார்த்தனையே மருந்தாக உள்ளதை அது குற்றம் சாட்டியது.

இதையே, தனது வேலையை உதறிவிட்டு தெரசாவிடம் சமூகசேவை செய்த பீட்டர் டெய்லர் என்ற பிரிட்டிஷ் விமானியும் உறுதிப்படுத்துகிறார். பம்பாயிலுள்ள தெரசாவின் “ஆஷாதான்” எனும் அனாதைக் குழந்தைகள் இல்லத்தில் பணியாற்றிய அவர், சிறிது காலத்திலேயே வெறுப்புற்று வெளியேறி, பிரபல பிரிட்டிஷ் நாளேடான “கார்டியன்”-ல் இக்கருணை இல்லங்களின் யோக்கியதையை அம்பலப்படுத்தித் தொடர் கட்டுரைகளை எழுதினார்.



“ஏழ்மை என்பது இறைவன் எங்களுக்குக் கொடுத்த வரம்; ஏழ்மை ஒழிக்கப்பட்டு விட்டால் எங்களுக்கு வேலையில்லாமல் போய் விடும்”
- நிர்மலா

இவ்வில்லங்களில் குழந்தைகள் சரிவர கவனிக்கப்படாததையும், குழந்தைகளைத் தாதியர்கள் அடிப்பதையும் வேதனையுடன் குறிப்பிடும் அவர், பிரார்த்தனைக்கான மணி அடித்ததும் அனைவரும் குழந்தைகளை விட்டுவிட்டு ஓடி விடுவதைக் கண்டு வெறுப்படைந்தார். “குழந்தைகளும் நோயாளிகளும் வேதனையால் துடிக்கும் போது, அவர்களைத் தவிக்கவிட்டு பிரார்த்தனை செய்வதை என்னால் சகிக்க முடியவில்லை. 'இங்கு, சேவை செய்வதை வாழ்க்கைத் தொழிலாகக் கொள்ளக்கூடாது; பிரார்த்தனையே நமது வாழ்க்கைத் தொழில்' என்று அன்னை தெரசாவே என்னிடம் கூறியபோது நான் மனமுடைந்து போனேன்” என்கிறார் அவர்.

★★★

தொழுநோயாளிகளுக்கு கருணையும் உதவியும்; தொழுநோய் பிடித்த சுரண்டல் சமூகத்துக்கும் கருணையும் உதவியும்! சாவு வியாபாரிகளிடமும் சர்வாதிகாரிகளிடமும் நன்கொடை வசூல்; கொள்ளையர்களிடம் வசூலித்த பணத்தில், பறிகொடுத்த மக்களுக்கு பிரார்த்தனை, நல்லொழுக்க போதனை என்று 'சமூகத் தொண்டாற்றிய' தெரசாவின் மறுபக்கத்தை வசதியாக மறைத்துவிட்டு, “தொண்டு செய்து பழுத்தபழம்” என்று பத்திரிகைகள் துதிபாடுகின்றன. வறுமை நிறைந்த சமுதாயத்தில் தொண்டு செய்யும் மனமும், பொதுவாழ்வுப் பணியும் தான் மனித வாழ்வின் அடையாளங்கள் என்பதை டயானா, தெரசாவின் மரணங்கள் மெய்ப்பித்துள்ளதாக ஈரவணக்கம் செலுத்துகின்றன.

அடிப்படை மாற்றங்கள் ஏற்படாத ஏழ்மை நிறைந்த இந்திய சமுதாயத்தில் புண்ணுக்குப் புனுகு தடவும் தெரசாக்கள் ஆளும் வர்க்கங்களுக்குத் தேவைப்படுகிறார்கள். குமுறிக் கொண்டிருக்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் தமது எதிரியை இனங்காண்பதற்குள், இவர்கள் வடிகாலாகச் செயல்பட்டு சீற்றத்தைத் தணிக்கிறார்கள். எனவேதான் சுரண்டும் வர்க்கங்களும் அவர்களின் அரசும் இவர்களைப் போற்றி ஆராதிக்கின்றன.

மனித உறவுகளை முதலாளித்துவம் வெறும் பண உறவாக மாற்றிவிட்ட பிறகு, அரசுகள் சமூகப் பொறுப்பற்று, மேலும் மேலும் மக்களிடமிருந்து அந்நியப்பட்டு போன பிறகு, அன்பு - சகோதரத்துவம் - பாசத்திற்காக சமுதாயம் ஏங்கித் தவிக்கிறது. பற்றுக்கோடாக தெரசாக்களைக் காணும் போது சமுதாயம் தெய்வமாக வழிபடுகிறது. தனக்கென ஒரு சித்தாந்தத்தை வகுத்துக் கொள்ள இயலாத விவசாயிகள் நிறைந்த பின்தங்கிய இந்தியச் சமுதாயம் தெரசாவை மட்டுமல்ல; பாசிச எம்.ஜி.ஆரைக் கூட வள்ளலாகப் போற்றுகிறது. பாசிச இந்திராவை அன்னையாக்குகிறது; பாசிச ஜெயாவை அம்மாவாக்கித் துதிக்கின்றது!

வறுமையும் ஏற்றத்தாழ்வுகளும் ஒழித்துக் கட்டப்பட்ட சமுதாயத்தில், வறுமைப் புண்களைத் தோற்றுவிக்கும் கிருமிகளை ஒழித்துக்கட்டும் ஆரோக்கியமான சமுதாயத்தில் தெரசாக்கள் தேவையில்லாமல் போய்விடுவார்கள். எனவேதான் “ஏழ்மை என்பது இறைவன் எங்களுக்குக் கொடுத்த வரம்; ஏழ்மை ஒழிக்கப்பட்டுவிட்டால் எங்களுக்கு வேலையில்லாமல் போய் விடும்” என்று தெரசா மரணத்துக்குப் பிறகு, அவரது சமூக சேவை அமைப்புக்குப் பொறுப்பேற்றுள்ள நிர்மலா வெளிப்படையாகவே கூறுகிறார்.

நாளும் அவதாரமெடுக்கும் கருணா மூர்த்திகளுக்கு ஏழ்மைதான் மூலதனம். அது ஒழிக்கப்படும்போது இத்தகைய தேவதைகளுக்கு நரகத்தில்தான் இடமிருக்கும். புண்ணுக்குப் புனுகு தடவும் தெரசாக்களைவிட, புண்ணைத் தோற்றுவிக்கும் கிருமிகளை ஒழித்துக் கட்டும் சமுதாய மருத்துவர்கள் தான் உண்மையான சமூக சேவகர்கள் என்பது மெய்யாகும்.

அதனால்தான், அன்று ரஷியாவின் “கருணைமிகு பேரரசரான பீட்டர் சிறுதுளி என்றால், புரட்சியாளர் லெனின் பெரு வெள்ளம்” என்று சக்கரவர்த்தி பீட்டரின் வாழ்க்கையை நாவலாக எழுதிய அலெக்சி டால்ஸ்டாய் குறிப்பிடுகிறார். இந்தியாவிலும் அத்தகைய புரட்சி வெள்ளம் பெருகும்; அதன் சீற்றத்தில் 'தேவதைகள்' அடித்துச் செல்லப்படுவார்கள்!

● குமார்


படிப்பகம்

www.padippakam.com

# ரயில்வே தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் ஊழல் திமிங்கலங்கள்

மக்கள் வரிப்பணத்தில் கோடி கோடியாக கொள்ளையடித்து உல்லாச உலாவரும் ஓட்டுப் பொறுக்கிகளை பார்த்திருக்கிறோம். புதிய பொருளாதாரக் கொள்கை என்றதும் ஹர்சத் மேத்தாவின் பங்குச் சந்தை பேர ஊழல் முதல் சுக்ராம் ஊழல் வரை பளிச்சென நினைவிற்கு வரும்.

ஆனால் தொழிலாளர்களுக்காக உள்ள ரயில்வே கூட்டுறவு சங்கத்தில், தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதன் இயக்குனர்களே லட்சக் கணக்கில் கொள்ளையடிக்கும் அக்கிரமம் புதிது. ஆனால் உண்மை.

மொத்தம் 63,000 உறுப்பினர்களைக் கொண்டு 4 கோடிக்கும் கூடுதலான பங்கு மூலதனத்துடன் செயல்பட்டு வருவது திருச்சியில் உள்ள தென்னிந்திய இரயில்வே தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கம்.

ராஜீவின் புதிய பொருளாதாரக் கொள்கையால் நுகர்வோர் கடன் என்கிற புதுவகை கடன் 1989-ல் உருவானது. அதற்குமுன் இருந்த கடன்கள் தொழிலாளர்களுக்கு அவசரத்திற்கு உதவின. மிக குறைந்த வட்டி. இவற்றில் ஏதும் ஊழல் செய்ய முடியவில்லை. இச்சங்கத்தில் 200 பேர் வேலை செய்கின்றனர். அவர்களை வேலையில் சேர்ப்பதில் மட்டும் இயக்குனர்கள் கொள்ளையடித்தனர்.

நுகர்வோர் கடன் மூலம் பல ஆடம்பரப் பொருட்கள் கடனுக்கு வழங்கப்பட்டன. அதிகபட்ச கடன் ரூ. 15,000 அதற்கு வட்டி 27% பணத்தை நேரடியாக தருவதில்லை. பொருள் வாங்கி ரசீது கொடுத்தாலும் பணம் கிடையாது. மாறாக சென்னை தி.நகர் பனகல் பூங்கா அருகிலுள்ள கிருஷ்ணா எலெக்ட்ரானிக்ஸ் என்ற தனியார் நிறுனத்துடன் கூட்டுறவு சங்கம் ஒரு ஒப்பந்தம் செய்துள்ளது.

இதன்படி உறுப்பினர்களுக்கான பொருட்களை கிருஷ்ணா எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனம் தரும். இதற்கான தொகையை கூட்டுறவு சங்கமே தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்து தவணை முறையில் கொடுக்கும். இதில் தான் கிருஷ்ணா எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனமும் கூட்டுறவு சங்க இயக்குனர்களும் லட்சக் கணக்கில் தொழிலாளர்கள் பணத்தை குறையாடுகின்றனர்.

1. முதலில் 9.5 சதவீத வட்டிக்கு பொருட்கள் தந்த கிருஷ்ணா எலெக்ட்ரானிக்ஸ், 14 சதவீதமாக வட்டியை உயர்த்திய பின்னும் திரும்பத் திரும்ப இந்நிறுவனத்துடனே ஒப்பந்தம் போடப்படுகிறது. பிற தனியார் நிறுவனங்கள் 12% வட்டிக்கு தர தயாராயிருந்தும் அவற்றுடன் ஒப்பந்தமில்லை. அரசு வங்கியும் 12% வட்டிக்கு பணம் தர தயாராயிருந்தும் இயக்குனர்கள் ஒப்பந்தம் போட மறுத்துவிட்டனர்.

2. கிருஷ்ணா எலெக்ட்ரானிக்ஸ்-சில் நிதி நெருக்கடி ஏற்பட்டால் கூட்டுறவு சங்கமே நிதி ஆதாரங்களை ஏற்படுத்தித் தரும் என ஒரு ஒப்பந்த விதி உள்ளது. இதன்படி கூட்டுறவு சங்கமே 15% வட்டிக்கு பல லட்சங்கள் கடன் தந்துள்ளது. மேலும் வங்கிகள், பிற நிதி நிறுவனங்களிலிருந்து கூட்டுறவு சங்கமே ஜாமீனாக இருந்து கடன் பெற்றுத் தருகிறது.

இந்த சில ஆண்டுகளில் கிருஷ்ணா எலெக்ட்ரானிக்ஸ் ரூ. 50 கோடிக்கும் மேலாக பொருட்களை வினியோகித்துள்ளது.

3. மொத்தமாக பணம் கொடுத்து பொருள் வாங்குவதால் சலுகை விலையில் கிருஷ்ணா எலெக்ட்ரானிக்ஸ்க்கு பொருள் கிடைக்கிறது. அதை தொழிலாளிக்கு சந்தை விலைக்கு தருவதால் கணிசமான லாபம்.

4. நிறுவனங்கள் தமது விளம்பரத்திற்காக பொருட்களுடன் வழங்கும் இலவசப் பொருட்கள் போன்ற சலுகைகள் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை. மேலும் விழாக்கால தள்ளுபடி போன்றவற்றையும் தொழிலாளர்களுக்கு தருவதில்லை. இதிலும் கணிசமான லாபம் சம்பாதிக்கிறது.

5. பொருள் வாங்கும் ஒவ்வொரு தொழிலாளியிடமிருந்தும் டாக்குமெண்ட் கட்டணம் என ரூ. 200/- வாங்குகிறது கிருஷ்ணா எலக்ட்ரானிக்ஸ். ஆனால் இந்த வேலை எதையும் இத்தனியார் நிறுவனம் செய்வதில்லை. அதை கூட்டுறவு சங்க ஊழியர்களே செய்கின்றனர். இதனால் கிருஷ்ணா எலெக்ட்ரானிக்ஸ்-க்கு இரட்டை லாபம். ரூ. 2000 மட்டுமின்றி டாக்குமெண்ட் செலவு இல்லாததுடன் அதற்கான ஆள் கூலியும் லாபம்.

இப்படி பலவழிகளிலும் ஆண்டுக்கு கோடிக் கணக்கில் லாபம் சம்பாதிக்கும் கிருஷ்ணா எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனம் கூட்டுறவு சங்க இயக்குனர்களுக்கு சில இலட்சங்களை வாரியிறைத்து தொடர்ந்து ஒப்பந்தம் போட்டு வருகிறது.

பல தொழிலாளிகள் அவசர பணத் தேவைக்காக இந்த நுகர் பொருள் கடன் வாங்குகின்றனர். அவர்களிடம் பொருள் வாங்கிய அதே இடத்தில் ஏறக்குறைய பாதி விலைக்கு பணத்தைக் கொடுத்து, பொருளை வாங்கி, அங்கேயே கூடுதல் விலைக்கு தனியாருக்கு விற்கும் தரகர்கள் கூட்டம் உண்டு. இத்தரகர்கள் கூட்டுறவு சங்க இயக்குனர்களான தண்டாயுதம், அமராவதி ஆகியோரின் கையாட்களும், பினாமிகளுமாவர். சில கூட்டுறவு சங்க ஊழியர்களும் இதே தரகு வேலை செய்கின்றனர்.

உண்மையிலேயே வீட்டுக்குப் பொருள் வாங்குவோரையும் இந்தத் தரகு - அடியாள் கும்பல் மிரட்டி, குறைந்த விலை கொடுத்து பொருளை பிடுங்கிக் கொள்ளும்.

ஆக தொழிலாளிக்காக உருவான சங்கம் அத்தொழிலாளிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குனர்கள், கிருஷ்ணா எலெக்ட்ரானிக்ஸ்-சின் கைக் கூலிகளாக இலட்சக்கணக்கில் கொள்ளையடிப்பதற்கான சங்கமாக மாறியுள்ளது.

16 பேர் இயக்குனர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டதில் ராஜா சிரிதர், சந்திரசேகர், அமராவதி, தண்டாயுதம், முரளி, இரோஜேந்திரன், பழனிவேல், குருசந்திரன், சண்முகம் ஆகியோரே ஆளும் அணியாகவும் இதில் ஐவர் நிர்வாகக் குழுவிலும் உள்ளனர். சசிகுமரன், அசோகன், நாகராஜன், பானுமதி, மலர்மணி, கல்யாண சுந்தரம் ஆகியோர் சிறுபான்மை எதிரணியாக உள்ளனர். நிர்வாக குழு முடிவே இறுதியானது. இந்த இரு அணி போட்டியில்தான் மேலே





படிப்பகம்

www.padippakam.com

கண்ட ஊழல் சிறிது வெளிப்பட்டது.

இந்த நிர்வாக குழு இயக்குனர்களுக்கும், கிருஷ்ணா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திற்கும் இணைப்புப் பாலமாக செயல்பட்டு வந்தவர் கூட்டுறவு சங்க தலைமை அலுவலராக இருந்த சாமி ஐயா என்பவர். தற்போது பணி ஓய்வு பெற்ற இவர், பணிக்காலத்தில் அடித்த கொள்ளையைக் கொண்டு 'ராக் சிட்டி பெனிபிட் பண்ட்' என்ற நிதி நிறுவனத்தைத் தொடங்கி நடத்தி வருகிறார். இது தற்போது ரயில்வே கூட்டுறவு சங்கத்திற்கே பல லட்சம் கடனாக கொடுத்துள்ளது என்றால் அடித்த கொள்ளையின் அளவைப் புரிந்து கொள்ளுங்கள். இந்த சாமி ஐயா கள்ளர் பேரவை தலைவராகவும் இருந்தார்.

கூட்டுறவு சங்க ஊழியர் ஆவதற்கு இயக்குனர்களுக்கு லட்சக்கணக்கில் லஞ்சம் தந்து அடியாட்களும் கிரிமினல்களும் வேலைக்கு சேர்ந்துள்ளனர். இவர்கள் இயக்குனர்களின் வேலைகளைச் செய்து, சங்க வேலைகளைச் செய்வதில்லை. இதனால் உறுப்பினர்களின் கணக்குகள் சரியாக இருக்குமா என்ற பெருத்த சந்தேகம் எழுந்துள்ளது.

1995-ம் ஆண்டு சங்க வெள்ளி விழா ஆண்டு. எனவே சங்க உறுப்பினர்களுக்கு பை வழங்க முடிவு செய்தனர். சில எதிரணியினரையும் சேர்த்து பை வாங்க கமிட்டி அமைக்கப்பட்டது.

அதிலும் லட்சக்கணக்கில் ஊழல். இதில் எதிரணியைச் சேர்ந்த சி.ஐ.டி.யு. சங்கத்தைச் சார்ந்த இயக்குனர் சசிகுமார்தான் பை கமிட்டி தலைவர். எனவே சி.ஐ.டி.யு. விசாரணை கோர மறுக்கிறது.

மேலும் சி.ஐ.டி.யு.வின் வழமையான நடவடிக்கைப்படி, சில முக்கிய முடிவு எடுக்க வேண்டிய கூட்டங்களுக்கு சி.ஐ.டி.யு. சார்பான சங்க இயக்குனர்கள் வராமலிருந்து ஆளும் அணியான மஸ்தூர் சங்கம், எம்ப்ளாயீஸ் சங்கங்களுக்கு ஆதரவு தருவது வெளிப்படையானது.

இந்த இயக்குனர்கள் சாதாரண ரயில்வே ஊழியர்கள், சில ஆயிரங்கள் சம்பளம் வாங்குபவர்கள்தான். ஆனால் மஸ்தூர் சங்கம், எம்ப்ளாயீஸ் சங்கம், சி.ஐ.டி.யு. போன்றவை ஒரே நபர்களை திரும்பத் திரும்ப இயக்குனருக்கு நிறுத்துகின்றன. அவர்களும் ஊழலில் ஊறித் திளைத்து, தேர்தலுக்கு பல லட்சங்களை வாரியிறைக்கின்றனர். சில ஆயிரம் சம்பளம் பெறுபவர்கள் பல லட்சங்களை இயக்குனர் தேர்தலில் செலவழிப்பதே இதை அம்பலப்படுத்துகின்றன.

பழம் பெருச்சாலிகளான இந்த பிழைப்புவாத தொழிற்சங்கங்களைப் புறக்கணித்து, புரட்சிகர தொழிற்சங்கங்களை கட்டியமைக்காத வரை ஊழலை ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் பெரும்பாலான தொழிலாளிகள் நமக்கெதற்கு வம்பு என ஒதுங்கிச் செல்லும் வரை புரட்சிகர தொழிற்சங்கங்களைக் கட்டியமைப்பது சாத்தியமில்லை. ஊழலை ஒழிப்பதும் பகற்கனவாகவே இருக்கும்.

தமிழ் நம்பி,
வாதாபி,
திருச்சி.

# பஞ்சாயத்துக்களில் தொடரும் சாதிய அடக்குமுறை

பஞ்சாயத்துத் தலைவர்களாக, உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோர், கிராமங்களில் உள்ள சாதி ஆதிக்க சக்திகளின் கட்டளைக்கும், சாதி ஆதிக்கத்திற்கும் அடிபணிய மறுக்கும் பொழுது என்ன நடக்கும் என்பதை மேலவளவுப் படுகொலை நாடு முழுவதும் வெளிச்சம் போட்டுக் காட்டியது. பஞ்சாயத்துத் தலைவர் / உறுப்பினர் பதவிகள் பெயரளவிற்கே அதிகாரம் கொண்டவை என்றாலும், அதில் கூட சுயமரியாதையும், சுயமாக சிந்திக்கும் திறனும் கொண்ட தாழ்த்தப்பட்டோர் அமருவதை மேல்சாதி வெறியர்கள் விரும்புவதில்லை என்பதுதான் மேலவளவுப் படுகொலையின் சமூகப் பின்னணி.

இந்தப் பிரச்சினை மேலவளவோடு மட்டும் முடிந்துவிடவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர் / உறுப்பினர்களைச் சட்டபூர்வமாக இயங்க விடாமல் தடுத்து, அவர்களைத் தங்கள் பினாமிகளாகச் செயல்படுமாறு நிர்பந்திப்பது, அதற்கு அடிபணியாதவர்களை பல்வேறு வழிகளிலும் மிரட்டுவது, அவர்களைப் புறக்கணித்து விட்டு சட்டவிரோதமாக பஞ்சாயத்தைக் கூட்டுவது, தலைவர் பதவியையே கைப்பற்றிக் கொள்வது என மேல்சாதி வெறியர்கள் தமிழகத்தின் கிராமப்புறங்களில் கொட்ட மடித்து வருகிறார்கள். இதற்கு ஆதாரமாக நாம் இங்கே சில சம்பவங்களைத் தொகுத்துள்ளோம்.

மேச்சாதி வெறியர்கள் தன்னை இழிவுபடுத்துவதற்கு எதிராகப் போராடி வரும் தச்சம்பட்டு கிராம பஞ்சாயத்து தலைவர் நாகமுத்து.



• தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆயங்குடி கிராம பஞ்சாயத்து தலைவர் செல்வராணி, தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர். செல்வராணியைத் தலைவராகச் சட்டம் தான் ஏற்றுக் கொண்டதே தவிர, அக்கிராமத்திலுள்ள மேல்சாதி வெறியர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. மேல்சாதியைச் சேர்ந்த இராமலிங்கமும், நாகராஜும் தாம் நடைமுறையில் பஞ்சாயத்துத் தலைவராகச் செயல்பட்டனர். "செல்வராணி எதில் கையெழுத்துப் போடலாம்; எதில் போடக் கூடாது, எதைச் செய்ய வேண்டும்; எதைச் செய்யக் கூடாது" என்பதையெல்லாம் இவர்கள்தான் தீர்மானித்தனர். செல்வராணி இவ்விருவரின் கைத்தடியாகச் செயல்படத் தயங்கியபொழுதெல்லாம், மேல் சாதி பலத்தைக் காட்டி மிரட்டிப் பணிய வைக்கப்பட்டார். "உன் லெட்டர் பேடில் கையெழுத்துப் போட்டு கொடுத்து விடு; மற்ற வேலைகளை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" எனக் கூறுமளவிற்கு அம்மேல்சாதி வெறியர்களின் அட்டகாசம் எல்லை மீறிச் சென்ற பொழுது, அம்மிரட்டலுக்கு செல்வராணி அடிபணிய மறுத்து விட்டார்.

"பஞ்சாயத்துத் தலைவியாக இருந்தாலென்ன, ஒரு 'தீண்டத்தகாத கீழ்ச் சாதி' பொம்பளை தங்களை எதிர்ப்பதா?" என வெறி கொண்ட அக்கும்பல், செல்வராணிக்குப் பாடம் புகட்ட வன்முறையை ஏவிவிட்டது. அடியாட்களோடு வந்த நாகராஜும், இராமலிங்கமும் செல்வராணியின் கணவர் பன்னீர் செல்வத்தை, பட்டப் பகலில் நடு ரோட்டில் தாக்கி அவரது வலது காலை முறித்துப் போட்டனர்; தனது கணவனைக் காப்பாற்ற வந்த செல்வராணியின் ரவிக்கையைக் கிழித்து, சேலையை உருவி மானபங்கப்படுத்தினர். பன்னீர் செல்வத்தை மருத்துவமனையில் சேர்க்க, வாடகை வண்டி எடுத்து வரச் சென்றவர்களும் வழி மறிக்கப்பட்டு, தாக்கப்பட்டனர்.

மேல்சாதி வெறியர்களின் வன்முறைத் தாக்குதலைச் சமாளித்து, தனது கணவனை மாட்டு வண்டியில் தூக்கிப் போட்டு தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தார், செல்வராணி. அங்கோ மேல்சாதி வெறியர்களுக்குப் பரிந்து வந்த திருவோணம் தி.மு.க. எம்.எல்.ஏ. இராமச்சந்திரன், தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பன்னீர் செல்வத்தை மருத்துவமனையில் இருந்து வெளியே துரத்தியடித்தார். தன் கணவனைத் தாக்கிய, தன்னை மானப்பங்கப் படுத்திய, தன்னை சட்டபூர்வமாக இயங்க விடாமல் தடுத்துவரும் மேல்சாதி வெறியர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்



படிப்பகம்

www.padippakam.com

கோரி, உள்ளூர் போலீசு நிலையம் தொடங்கி தமிழக முதல்வர் வரை புகார் கொடுத்து விட்டார், செல்வராணி. ஆனால் பலன் என்னவோ பூஜ்யம் தான். இத்துணைக்கும் செல்வராணி தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர். இருந்தாலென்ன, ஓட்டுக்கட்சிகள் சாதி அரசியலைப் புறந்தள்ளி விடுமா என்ன?

• சங்கரபாண்டி, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சிவசைலம் கிராம பஞ்சாயத்து உறுப்பினர். இக் கிராம பஞ்சாயத்தில் சங்கரபாண்டியைத் தவிர பிற ஐந்து உறுப்பினர்களும், பஞ்சாயத்துத் தலைவரும் மேல் சாதியைச் சேர்ந்தவர்கள். இக்கிராமத்திற்குத் தேவையான மின் பொருட்கள் வாங்குவது, தாழ்த்தப்பட்டோருக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தருவது தொடர்பாக பஞ்சாயத்துக் கூட்டத்தில் விவாதம் நடந்த பொழுது, சங்கரபாண்டி பஞ்சாயத்துத் தலைவர் செல்வின் ராஜாவோடு முரண்பட்டார். இதனால் சங்கரபாண்டியை கிராம பஞ்சாயத்தில் இருந்தே ஒதுக்கி வைத்துவிட்டனர் மேல்சாதி உறுப்பினர்கள். பஞ்சாயத்து கூட்டத்திற்கு சங்கரபாண்டி வந்தால், கூட்ட நடவடிக்கைகளை வாயிற்படிக்கு அந்தப்புறம் நின்று கேட்டுக் கொள்ள முடியுமே தவிர, உள்ளே நுழையவோ, கருத்துக் கூறவோ அனுமதி கிடையாது.

• விழுப்புரம் மாவட்டத்திலுள்ள தச்சம்பட்டு கிராமம் தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்ட பஞ்சாயத்து. நாகமுத்து இக்கிராம பஞ்சாயத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஆனாலும், இப்பஞ்சாயத்தின் துணைத் தலைவராக இருக்கும் மேல்சாதியைச் சேர்ந்த தமிழரசியின் கணவர் அண்ணாமலைதான் தனது சாதி மற்றும் கட்சி பலத்தால் பஞ்சாயத்துத் தலைவராக உலா வருகிறார். அண்ணாமலையின் வீட்டில் இருந்த கிராம பஞ்சாயத்திற்குச் சொந்தமான தொலைக்காட்சிப் பெட்டியைப் பஞ்சாயத்தில் ஒப்படைக்கச் சொல்லிய பிறகிலிருந்தே, தலைவர் நாகமுத்துவைப் பழிவாங்கத் தொடங்கிவிட்டார், அண்ணாமலை.



மேல் சாதிக்காரனுக்குப் பினாமியாகச் செயல்பட மறுத்ததால் மானபங்கப்படுத்தப்பட்ட ஆயங்குடி கிராம பஞ்சாயத்து தலைவி செல்வராணியும், தாக்கப்பட்ட அவரது கணவர் பன்னீர் செல்வமும்.

கடந்த டிசம்பர் மாதம் நாகமுத்துவைப் புறக்கணித்து விட்டு, பஞ்சாயத்துக் கூட்டத்தைத் தனது வீட்டிலேயே கூட்டினார், அண்ணாமலை. இக்கூட்டத்திற்குச் சென்ற நாகமுத்துவை, "ஒரு (கீழ்ச்சாதி) பய தலைவரா வந்து கூட்டம் கூட்டினால், நாங்கள் கூட்டத்துக்கு வரணுமா?" என அவமானப்படுத்தினர் மேல் சாதி உறுப்பினர்கள். தன்னை அவமானப்படுத்தியதற்காக அ.தி.மு.க. கிளைச் செயலாளர் அண்ணாமலை, தி.மு.க. கிளைச் செயலாளர் ஏழுமலை மற்றும் வார்டு உறுப்பினர் தண்டபாணி - இம்மூவர் மீதும் நடவடிக்கை எடுக்கக் கோரி போலீசில் புகார் செய்துள்ளார், நாகமுத்து.

• தருமபுரி - திருவண்ணாமலை மாவட்ட எல்லையில் உள்ள நாய்க்கனூர் ஊராட்சி ஒன்றியம் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் ஒரு முறை கூட கூடியதில்லை. இந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர் சிவகாமி, தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்பதுதான் இதற்குக் காரணம். ஊராட்சி ஒன்றியத்தின் ஆறு உறுப்பினர்களுள் நான்கு பேர் மேல்சாதியைச் சேர்ந்தவர்கள். ஊராட்சி ஒன்றியக் கூட்டத்திற்கு, சிவகாமி அழைப்பு விடுத்த பொழுது, அம்மேல்சாதி உறுப்பினர்கள் "உனக்குக் கீழே நாங்கள் உட்காருவதா? உன்னோடு சமமாகப் பேசுவதா? கூட்டத்திற்கு வரமாட்டோம்" என, சாதிவெறியைக் கக்கிச் சென்றனர். தன்னை சாதியைச் சொல்லி அவமானப்படுத்தியதை மேலதிகாரிகளிடம் முறையிட்ட சிவகாமியை, குடும்பத்தோடு கொலை செய்து விடுவோம் என மிரட்டியுமுள்ளனர். இதனால், சிவகாமி நாய்க்கனூரை விட்டு வெளியேறி, தனது தாயார் வீட்டிற்குச் சென்றுவிட்டார். பின் ஊர்ப் பெரியவர்கள் சிவகாமியை சமாதானம் செய்து, திரும்ப அழைத்து வந்தனர்.

ஆனாலும் சாதி பெயரைச் சொல்லி சிவகாமி அவமானப்படுத்தப்படுவது தொடரவே செய்கிறது. நாய்க்கனூர் கிராமம் அடங்கியுள்ள அரூர் தொகுதி எம்.எல்.ஏ. வேடம்மாள் தாழ்த்தப்பட்டவர் என்றாலும், தி.மு.க.வைச் சேர்ந்தவர். சிவகாமி அ.தி.மு.க.வில் உறுப்பினர். கட்சிப் பகை காரணமாக வேடம்மாள், சிவகாமியை நாகரிகம் தெரியாதவர் எனத் தூற்றியுள்ளார். போலீசோ மேல்சாதி உறுப்பினர்களுடன் சமாதானமாகப் போய் விடும்படி சிவகாமியை நிர்பந்திக்கிறது. இதனிடையே, 1997-ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் ஒன்றியக் கூட்டம் நடந்ததாக, வட்டார வளர்ச்சி அதிகாரி முன்னாலேயே சிவகாமியை மிரட்டி கையெழுத்து வாங்கி விட்டனர், மேல்சாதி உறுப்பினர்கள்.

சாதி மோதல்கள் ஏதுமின்றி, வெளிப்புறத்துக்கு அமைதியாகத் தெரியும் கிராமங்களில்கூட, மேல்சாதி ஆதிக்கம் எந்த அளவுக்குப் புரையோடிப் போயிருக்கிறது என்பதை இங்கே நாம் தொகுத்திருக்கும் சம்பவங்கள் புரிய வைத்திருக்கும். இச்சாதி ஆதிக்கத்தின் காரணமாகவே, பஞ்சாயத்துத் தலைவர் பதவி தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கப்பட்ட பாப்பாபட்டி, நாட்டாமங்கலம், கீரிப்பட்டி கிராமங்களில் (உசிலம்பட்டிக்கு அருகேயுள்ள கிராமங்கள் இவை) தலைவர் பதவிக்கான தேர்தலே நடைபெறவில்லை. இப்படி தேர்தலே நடைபெறாத, தேர்தல் நடைபெற்றாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோர் சட்டபூர்வமாக, சுயேச்சையாக இயங்கவிடாமல் தடுக்கப்படும் பல நூறு கிராமங்களை தமிழகமெங்கும் அடையாளம் காண முடியும்.

பஞ்சாயத்து உறுப்பினர்களாக, தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோர், சட்டபூர்வமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டோர் என்பதை மறுத்து, மனமுவந்து தாங்கள் இட்ட பிச்சையாக எண்ணி இறுமாந்து திரிகின்றனர் மேல்சாதி வெறியர்கள். அதனால் தான் கிராமத்து தெருக்களில் இருந்த தீண்டாமையை, பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியம் போன்ற அரசு அலுவலகங்களுக்குள்ளேயும் கடைபிடிக்க துணிவு கொள்கின்றனர். இம்மேல்சாதி வெறியர்களின் அதிகாரத்தையும், மேல்சாதியில் பிறந்து தீண்டாமைக் கொடுமையைக் கண்டும் காணாமல் செல்லும் நடுநிலையாளர்களின் மௌனத்தையும் உடைத்தெறியாமல், தாழ்த்தப்பட்டோர், கிராமங்களில் உண்மையான அதிகாரத்தை அடைந்துவிட முடியாது.

• செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

# அரசு நிலத்தை விழுங்கத் துடிக்கும் பிரிக்கால் போலீசு - அதிகாரிகள் உடந்தை

கோவை பெரியநாயக்கன் பாளையத்திலுள்ள 'பிரிகால்' என்ற நிறுவனத்தின் பின்புறம் சுமார் 7 ஏக்கர் நிலம் (க.ச.எண் 409, 410) உள்ளது. அந்நில உரிமையாளர் காலஞ்சென்ற எம்.வி.என். மருதாசல செட்டியார். இவர் இறக்கும் போது, 'மிகவும் பிற்படுத்தப் பட்ட மக்களின் நலன்களுக்கு எனது நிலம் பயன்படவேண்டும்' என உயில் எழுதி வைத்தார். இதனடிப்படையில் அரசும் நிலத்தைக் கையகப்படுத்தியது.

தற்போது பிரிகால் நிறுவனம் ஜெர்மனியுடன் கூட்டுச் சேர்ந்து தொழிலை விரிவுபடுத்த உள்ளது. இதற்கு நிறுவனத்தை ஒட்டி யுள்ள, அரசு கையகப்படுத்திய நிலத்தை ஆக்கிரமிக்க வெறியுடன் அலைகிறது.

முதற்கட்டமாக மருதாசலத்தின் வளர்ப்பு மகன் நாகையா செட் டியார் மூலம் 'உயில் பொய்யானது. அரசு நிலத்தைக் கையகப்படுத் தியது செல்லாது' என வழக்குப் போட வைத்தது.

அடுத்ததாக, சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஆட்சியர், வட் டாட்சியர் என அனைவருக்கும் பணத்தை வாரியிறைத்து வாய டைத்தது. இதில் வட்டாட்சியர் தேவராசன் பெற்றது மட்டுமே ரூ. 5 லட்சம் எனத் தெரிகிறது. நிறுவனத்தின் சூழ்ச்சிகளையும், துணை போன வட்டாட்சியர் தேவராசையும் கண்டித்து மக்கள் கலை இலக் கியக் கழகம் சுவரெழுத்து, சுவரொட்டிப் பிரச்சாரம் செய்தது.

நிலம் கைக்கு வரும் நேரத்தில் எதிர்ப்பு கிளம்பியது கண்டு ஆத்திரமுற்றது பிரிகால் நிறுவனம். எனினும் தனது நிறுவனத்தி லுள்ள போலி கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு. தொழிற்சங்க தலைவர்களை ம.க.இ.க. மாவட்டச் செயலாளரிடம் அனுப்பி, ஆர்ப்பாட்டத்தை கைவிடும்படி கெஞ்சியது. தோழர்கள் முதலாளியின் மோசடிகளை அம்பலப்படுத்தவே திரும்பிச் சென்று விட்டனர். பிறகு நிறுவனம் தனது 'பவர் ஏஜண்ட்' ரவிச்சந்திரனை ஏவி, ரூ. 5 லட்சத்திற்கு ம.க.இ.க. தோழர்களை விலை பேச முயன்று மூக்குடைபட்டது.

★☆★

இதே பெரியநாயக்கன் பாளையத்திற்கு அருகிலுள்ள மத்தம் பாளையம் கிராமத்தைச் சேர்ந்தவர் துளசியம்மாள். இவருக்கும் இதே ஊரைச் சேர்ந்த பழனிச்சாமி கவுண்டருக்குமிடையே உறவு இருந்துள்ளது. இதனால் பழனிச்சாமியின் மைத்துனன் சிவக்குமார் தலைமையில் சுமார் 10 பேர் சேர்ந்து துளசியம்மாளைக் கும்பலாகப் பாலியல் வன்முறை செய்து, கொடூரமாகச் சித்திரவதை செய்து கொன்றனர். பின் பிணத்தை தனியார் நிலத்தில் எரித்தனர்.

காவல்துறை இன்றுவரை யாரையும் கைது செய்யவில்லை.

இதற்கிடையே காவல்துறை ஆய்வாளர் தண்டபாணியும் கொலையாளிகளும் மேல்சாதி அடிப்படையில் கூட்டுச் சேர்ந்துள் ளனர். வழக்கை கிடப்பில் போட ரூ. 50 ஆயிரம் பேரம் பேசி, முன் பணமாக ரூ. 10 ஆயிரம் பெற்றுள்ளார் தண்டபாணி. கொங்கு வேளாளக் கவுண்டர்கள் ஒன்று சேர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களை மிரட்டியும், பிற சாதியினரிடமும் 'இப்படி ஒரு சம்பவமே நடக்க வில்லை' எனக் கையெழுத்து வாங்கியும் வருகின்றனர்.

★☆★

மேற்கண்ட இரண்டு பிரச்சினைகளுக்காக 7.7.97 அன்று ஆர்ப்பாட்டம் நடத்த ம.க.இ.க. அனுமதி கேட்டது. காவல்துறை அனுமதி தராத நிலையிலும் திட்டமிட்டபடி ஆர்ப்பாட்டம் சிறப் பாக நடந்தது. 150 பேர் கலந்து கொண்டனர்.

மேல்சாதி வெறியர்கள், பிரிகால் நிறுவனம் தூண்டுதலிலும் போலீசு சதியாலும் ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்க இருந்த பகுதித் தோழர் சந்திரன் 4.7.97 'பந்த்'தைக் காரணம் காட்டி முன் னெச்சரிக்கைக் கைது என தண்டபாணியால் சிறையிலடைக்கப் பட்டார். நடந்து முடிந்த ஆர்ப்பாட்டம் இவர்களின் முகத்தில் கரி பூசியது.

ஆகஸ்ட் 15 அன்று ம.க.இ.க. 200 பேரைத் திரட்டிச் சென்று, பிரிகால் நிறுவனம் சட்டவிரோதமாக ஆக்கிரமித்த இடத்தில் குடிசை போட முயன்றனர். அடியாள் தண்டபாணி தலைமையில் போலீசார் வந்து தடை செய்தனர். காலையில் பேசித் தீர்க்க காவல் நிலையம் வரச் சொல்லவே சென்றனர். அங்கு கைது செய்வோம் என மிரட்டல் மட்டுமே நடந்ததால் திரும்பி விட்டனர்.

29.8.97 அன்று மீண்டும் சென்று அந்த இடத்தில் குடிசை போட்டனர். இம்முறை போலீசு மிரட்டல் பலனளிக்காததால், மறு நாள் டி.எஸ்.பி. தலைமையில் மேலும் போலீசைக் குவித்து மிரட்டி யும் மக்கள் உறுதியுடன் நிற்கவே போலீசார் பின் வாங்கினர்.

மாவட்ட ஆட்சியர் சந்தானம் பேசுவதற்கு வந்து அழைக்கவே, 500 பேர் ஊர்வலமாக முழக்கமிட்டு சென்றனர். இன்னும் மூன்று மாதத்தில் வழக்கை முடித்து ஏழைகளுக்கு இடம் கொடுப்பதாக மாவட்ட ஆட்சியர் உறுதி கூறியுள்ளார்.

ஏழை துளசியம்மாளின் கொலைகாரர்களைத் தண்டிக்க, அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டியபோது, அதை ஓட்டுப் பொறுக்கிகள் புறக்கணித்தனர். இன்று பிரிகால் நிறுவனத்திற்கு ஆதரவாக த.மா.கா. கட்சி அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்ட முயல் கிறது.

தகவல் : ம.க.இ.க., கோவை

# அமெரிக்க சேவை நிறுவனத்தின் மோசடி

கேர் (CARE) என்பது ஓர் அமெரிக்க சேவை நிறுவனம். சேவை என்ற பெயரில் மக்களை ஏய்த்து, தனது சுரண்டலை மூடி மறைப்பது ஓர் உத்தி.

இந்த கேர் நிறுவனத்தின் மோசடி, கிரிமி னல் நடவடிக்கையை பி.என். கிருஷ்ண மூர்த்தி சிசிபின் என்ற தனிநபர் 26 ஆண்டு கள் போராடி அம்பலப்படுத்தியுள்ளார்.

இந்த கிருஷ்ணமூர்த்தி என்பவர் அமெ ரிக்க தூதரகத்தின் ஒரு பிரிவான யு.எஸ். எய்ட் (USAID) உதவியுடன் இந்திய ஏழைக் குழந்தைகள், இங்கு கிடைக்கும் உணவில் எப்படி சத்தான உணவு பெறுவது என ஆய்வு செய்தார். தனது ஆய்வினைப் புத்தக மாக எழுதி, படங்களுடன் வடிவமைத்து, இந்திய மொழிகள் பலவற்றில் வெளியிட் டார்.

அப்போது 1970-இல் கேர் நிறுவனம் யு.எஸ்.எய்ட்-உடன் ஓர் ஒப்பந்தம் போட் டது. உடனே கேர், கிருஷ்ணமூர்த்தியிடம் மக்காச்சோளம், சோயா பீன்ஸ், பால் பவுடர் சேர்ந்த அமெரிக்க உணவு பற்றி அவரது புத்த கத்தில் எழுதி வெளியிட உத்தரவிட்டது. அது மக்களுக்கு கிடைக்காத உணவு என்ப தால் கிருஷ்ணமூர்த்தி மறுத்தார்.

உடனே அவரது புத்தகப் பதிப்புரி மையை வெறுமனே தன்னிடம் ஒப்படைத்து விட வேண்டும் என வலியுறுத்தியது கேர் நிறுவனம். கிருஷ்ணமூர்த்தி அதற்கும் மறுத் துவிட்டார்.

அமெரிக்க நிறுவனமான தான் கூற, அதை அற்ப இந்தியன் மறுப்பதா என ஆத்தி ரமடைந்து, கிருஷ்ணமூர்த்தியை யு.எஸ். எய்ட் பிரிவிலிருந்து விரட்டியடித்தது. அவ ரும் பலமுறை அமெரிக்க தூதரகத்திற்கு 'இது முறையற்ற செயல்' என எழுதியும் பய னில்லை.

தற்செயலாக மலையாள மொழியில் இவரது புத்தகத்தை கேர் நிறுவனம் வெளி யிட்டதைப் பார்த்தார் கிருஷ்ணமூர்த்தி. உடனே 1971-இல் டெல்லி மாவட்ட நீதிமன் றத்தில் இரு வழக்கு தொடுத்தார். ஒன்று தனக்கு ஏற்பட்ட இழப்புக்கான சிவில் வழக்கு, மற்றொன்று தனது பதிப்புரிமையை மீறியதற்கான கிரிமினல் வழக்கு. கிரிமினல் வழக்கில் 1997 ஜூலை 5-இல் வெற்றி பெற் றார். இதற்கான தீர்ப்பு ஆகஸ்ட் 1-இல் வழங் கப்பட்டது. வெறும் ரூ. 5000/- அபராதமாக கேர் வழங்க வேண்டும் என்பதுதான் தண் டனை.

ஒரு தனி நபரை தனக்கான ஏவலாளாக மாற்ற முயன்று, தோற்று, மோசடி செய்தது அமெரிக்க தூதரகம். இவர்கள்தான் உலக நீதி யைக் காப்பதாக பீற்றிக் கொள்கின்றனர். வெட்கக் கேடு!

• பாரி



படிப்பகம்

www.padippakam.com



## இந்திய ராணுவத்தின் பயங்கரவாத அட்டூழியம்

மோசடித் தேர்தல் மூலம் ஒரு பொம்மையாட்சி காஷ்மீரில் நிறுவப்பட்ட பின்னரும், அங்கே இந்திய ராணுவம் நடத்திவரும் பயங்கரவாத அட்டூழியங்கள் குறையவில்லை. அண்மையில் நடந்துள்ள ஒரு கொலைவெறித் தாக்குதலை நியாயப்படுத்த முடியாமல் அரசும் ராணுவமும் கையைப் பிசைந்து கொண்டு நிற்கின்றன.



குடியிருப்புகள் மீது குண்டுவீச்சு தாக்குதல்; இந்திய இராணுவத்தின் பயங்கரவாத அட்டூழியம்.

கடந்த செப். 18 அன்று இரவு பாரமுல்லா மாவட்டத்திலுள்ள அரின் எனும் கிராமத்தில் ராணுவம் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டனர். 14 பேர். படுகாயமடைந்தனர். கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலோர் பெண்களும் குழந்தைகளுமாவர். குண்டு வீச்சுத் தாக்குதலில் பல வீடுகள் தரைமட்டமாகிவிட்டன. இக்கிராமத்தில் துணை ராணுவப் படையான எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) குண்டு வீச்சுக்கு முன்பாக தேடுதல் வேட்டை நடத்தியது. எனவே இப்படையினர்தான் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று கிராம மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் எல்லைப் பாதுகாப்புப் படையினரோ தாங்கள் இத்தகைய தாக்குதலை நடத்தவே இல்லை என்று திடலடியாக மறுக்கின்றனர்.

அண்மைக் காலமாக குடியிருப்புப் பகுதிகள் மீது இந்திய ராணுவம் குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தியதில்லை என்பதால், இக்கொடிய தாக்குதலுக்கு எதிராக மக்களது எதிர்ப்பும் நிர்பந்தமும் பெருக்த் தொடங்கியதும், மாநில அரசு வழக்கு பதிவு செய்து நீதி விசாரணைக்கு உத்திரவிட்டுள்ளது. தாக்குதல் நடந்த இடத்தில் கிடைத்த வெடிக்காத குண்டுகளைக் கொண்டு, இது "81 எம்.எம்." அளவுள்ள குண்டுகள் என்று போலீசார் தமது முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்துள்ளனர்.

நிலைமை விபரீதமாகிப் போவதை அறிந்த எல்லைப் பாதுகாப்புப் படையினர், "நாங்கள் மட்டுமின்றி, ராஷ்டிரீய துப்பாக்கிப் படையினரும் இக்கிராமத்தில் முகாமிட்டு தேடுதல் வேட்டை நடத்தினர்; ஒருவேளை அவர்கள் குண்டுவீசியிருக்கலாம்" என்று பழிபோட்டு தப்பிக்க முயற்சித்தனர். ஆனால் ராஷ்டிரீய துப்பாக்கிப் படையினரோ, தங்களது படையில் "81 எம்.எம்." அளவுள்ள குண்டுகளே கிடையாது என்று ஆதாரங்காட்டி மறுக்கின்றனர். இதைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சகத்தின் மூலம் ராணுவத்தினர் இத்தாக்குதலை நடத்தவேயில்லை என்று அறிக்கை வெளியிட வைத்து எல்லைப் பாதுகாப்புப் படை நியாயவானாக நாடகமாடுகிறது. கடைசியில், தீவிரவாதிகளுக்கும் ராணுவத்துக்கும் இடையே நடந்த மோதலில் 11 பேர் கொல்லப்பட்டதாக அரசு கதை கட்டியதை, 'தேசிய' பத்திரிகைகள் அப்படியே வாந்தி எடுத்துள்ளன. இந்திய ராணுவத்தின் அதிக்கிரமங்களை எதிர்த்து முணுமுணுக்கக் கூட வக்கற்றுப் போயுள்ள போலிக் கம்யூனிஸ்டு உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா, காஷ்மீரின் சட்டம் - ஒழுங்கு நிலைமையை மேம்படுத்த சிறீநகருக்குப் பறந்து கொண்டிருக்கிறார்.

## ஆசியாவுக்கு ஓர் ஆப்கான் ஆப்பிரிக்காவுக்கு ஓர் அல்ஜீரியா

ஆப்பிரிக்க கண்டத்தின் வடக்கே மத்திய தரைக் கடலை ஒட்டியுள்ள நாடான அல்ஜீரியாவில் கடந்த ஆகஸ்ட் 29,30 தேதிகளில் நடந்துள்ள கோரமான படுகொலைகளைக் கண்டு உலகமே அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது. இஸ்லாமிய மீட்சி முன்னணி (FIS) எனப்படும் மதவெறி பயங்கரவாதிகள், தலைநகர் அல்ஜீரிஸ், தெற்கே சித்திமௌசா மாவட்டத்திலும் உறங்கிக் கொண்டிருந்த அப்பாவி மக்களை நள்ளிரவில் எழுப்பி, 300-க்கும் மேற்பட்டோரை கழுத்தை அறுத்து படுகொலை செய்துள்ளனர். பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என்றும் பாராமல் மண்வெட்டி, கோடாரி, அரிவாள், கத்தி முதலான கையில் கிடைத்த ஆயுதங்களைக் கொண்டு கழுத்தை வெட்டிச் சாய்த்துள்ளனர். சில இடங்களில் அப்பாவி மக்களை உயிரோடு கொளுத்தி இப்பயங்கரவாத கும்பல் வெறியாட்டம் போட்டுள்ளது.

1992-லிருந்து அரசுக்கு எதிராகப் போராடி வரும் இஸ்லாமிய பயங்கரவாதிகள், அல்ஜீரியாவை இஸ்லாமிய நாடாக்குவதே தமது லட்சியமாக அறிவித்துள்ளனர். 1992-ல் மதவெறி பயங்கரவாதிகள் ஆளும் கும்பலுக்கு பெரும் அச்சுறுத்தலாக வளர்ந்த நிலையில், இவ்வியக்கத்தின் மீது அரசு தடை விதித்தது. தேர்தலில் போட்டியிடவும் தடை விதிக்கப்பட்ட ஆத்திரத்தில் இத்தீவிரவாதிகள் பயங்கரவாத வெறியாட்டங்களைக் கட்டவிழ்த்து விட்டதும், ஆளும் ராணுவ சர்வாதிகார கும்பல் தேர்தலையே ரத்து செய்து, அரசு பயங்கரவாதத்தை ஏவியது. மதவெறி பயங்கரவாதத்துக்கும், அரசு பயங்கரவாதத்துக்கும் இடையில் சிக்கி கடந்த ஐந்தாண்டுகளில் 60,000-க்கும் மேற்பட்ட சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாண்டில் மட்டும் இதுவரை 1500 பேர் பலியாகியுள்ளனர்.

இஸ்லாமிய பயங்கரவாத வெறியாட்டம்; கழுத்தை அறுத்துக் கொல்லப்பட்ட அப்பாவி மக்கள்.



அன்று சோவியத் ஒன்றியம் நீடித்த போது, அல்ஜீரிய ராணுவ சர்வாதிகாரிகள், தங்களை மாபெரும் சோசலிஸ்டுகளாக மார்தட்டிக் கொண்டு மக்களை ஒடுக்கினர். அன்னியக் கடன் சுமை, நாணய மதிப்பு வீழ்ச்சி, வேலையின்மை, விலையேற்றம் காரணமாக எட்டாண்டுகளுக்கு முன்பு மாபெரும் உணவுக் கலகம் அல்ஜீரியாவை உலுக்கியது. சோவியத் ஒன்றிய வீழ்ச்சிக்குப் பிறகு சோசலிச முகமூடியைக் கழற்றி எறிந்து விட்டு, ஆளும் ராணுவ கும்பல் அம்மணமான அடக்குமுறையில் இறங்கியது. அரசுக்கு எதிரான மக்கள் போராட்டங்களை ஒன்றிணைத்து தலைமை தாங்க ஒரு புரட்சிகர கட்சி இல்லாத நிலையில், இஸ்லாமிய தீவிரவாதம் அந்த இடத்தைக் கைப்பற்றிக் கொண்டது. துருக்கி, லிபியா, ஈரான், ஆப்கான் முத



படிப்பகம்

www.padippakam.com



லான நாடுகளின் இஸ்லாமிய தீவிரவாதிகளுடன் வலுவான இணைப்பைக் கொண்டுள்ள அல்ஜீரிய தீவிரவாதிகள், அதிநவீன துப்பாக்கிகள், குண்டுகள், ஏவுகணைகளுடன் தாக்குதலை நடத்தி வருகின்றனர். ஆளும் ராணுவ சர்வாதிகார கும்பலுக்கும், மதவெறி பயங்கரவாதிகளுக்கும் எதிராக நாட்டு மக்கள் அணிதிரள வேண்டிய அவசியத்தை உணர்த்திவிட்டு, அல்ஜீரியா குருதிச் சேற்றில் மூழ்கிக் கொண்டிருக்கிறது.

## வஞ்சிக்கப்படும் பழங்குடியினப் பெண்கள்

கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் பல ஆதிவாசிப் பெண்கள், ஆதிவாசி அல்லாத மேல்சாதியினர், எஸ்டேட் முதலாளிகள், வனத்துறை ஊழியர்கள், அரசு அலுவலர்கள் முதலானோரால் வஞ்சிக்கப்பட்டு நிராதரவாக நிற்கின்றனர். திருமணம் செய்து கொள்வதாக ஆசை காட்டி பின்னர் கைவிடப்பட்ட இப்பெண்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்கு தந்தை யார் என்றே தெரியாது. திருநெல்லி பஞ்சாயத்தில், மணமாகாமல் குழந்தை பெற்ற இத்தகைய ஆதிவாசிப் பெண்கள் நூற்றுக்கும் மேற்பட்டோராக உள்ளனர். அட்டப்பாடி வட்டத்தில் மொத்த மக்கட்தொகையில் இவர்கள் 17% பேராக உள்ளனர்.

பார்வதி என்ற பெண்ணுக்கு இது போன்ற கொடுமை நடந்து போலீசில் புகார் செய்த போதிலும் இன்று வரை எந்த நடவடிக்கையுமில்லை. மணமாகாமல் அவருக்குப் பிறந்த குழந்தைக்கு இன்று 15 வயதாகிவிட்டது. 1994-ல் சுமி என்ற ஆதிவாசிப் பெண் மணமாகாத நிலையில் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றுவிட்டு பிரசவத்தின் போது மாண்டு போனார். அப்பெண்ணை வஞ்சித்த குற்றவாளியைக் கைது செய்யக் கோரி பழங்குடி மக்கள் போராடிய பிறகு, அவன் கைது செய்யப்பட்டான். ஆனால் ஈராண்டுகளுக்குப் பிறகு தகுந்த ஆதாரமில்லை என்று கூறி நீதிமன்றம் அவனை விடுதலை செய்தது.



மேல் சாதியினரால் வஞ்சிக்கப்பட்டு, மணமாகாமல் பிறந்த குழந்தையுடன் பரிதவிக்கும் பழங்குடியினப் பெண்

அடியார், பணியார், காட்டு நாயக்கர், கருமார், குரிச்சார் முதலான பழங்குடியினப் பெண்களே இப்பாலியல் கொடுமைக்கு ஆளாகியுள்ளனர். தேயிலை, காபி எஸ்டேட்டுகளில் கூலித் தொழிலாளிகளாகப் பணியாற்றும் இவர்கள், வறுமை காரணமாக விபச்சாரத்துக்குத் தள்ளப்படும் கொடுமையும் நடக்கிறது. ஐ.நா. மன்றத்தின் மக்கட் தொகை ஆய்வு நிதியம், அண்மையில் இப்பகுதியில் நடத்திய மாதிரிச் சோதனை - ஆய்வின் போது பழங்குடி மக்கள் மீது தொடரும் பாலியல் கொடுமைகள் தெரிய வந்துள்ளன. ஐ.நா.குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து, பழங்குடியினப் பெண்களின் வாழ்வை நாசமாக்கிய கயவர்களைக் கண்டறிந்து தண்டிக்கப் போவதாக கேரள அரசு அறிவித்துள்ளது. இதற்காக, குற்றம் சாட்டப்படுபவன், பிறந்த குழந்தை ஆகியோரின் ரத்த மாதிரிகளை வைத்து டி.என்.ஏ. எனப்படும் உயிர்ம மூலக்கூறு அமிலச் சோதனை நடத்தி குற்றவாளியை நிரூபித்து உரிய தண்டனை அளிக்கப் போவதாக அரசு கூறியுள்ளது.

டி.என்.ஏ. சோதனை செய்ய ஒவ்வொரு வழக்கிற்கும் ரூ. 50,000 அளவுக்கு செலவாகும். நூற்றுக்கணக்கில் பாதிக்கப்பட்ட பழங்குடியினப் பெண்கள் உள்ள நிலையில் அரசால் கோடிக்கணக்கில் நிதி ஒதுக்கீடு செய்ய சாத்தியமில்லை. மேலும், குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை, அவரது விருப்பத்துக்கு எதிராக இப்படி சோதனை செய்யவும் சட்டத்தில் இடமில்லை. சட்டத்தில் திருத்தமோ அல்லது நீதிமன்ற உத்திரவோ தேவை. அடுத்து, பழங்குடியின மக்களைவிட, பழங்குடி அல்லாதவர்களே பெரும்பான்மையினராகவும், ஓட்டு வங்கியாகவும் உள்ள நிலையில், ஓட்டுக் கட்சிகளும் ஆட்சிகளும் இவற்றை எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தும் என்று சொல்லத் தேவையில்லை. ஏகாதிபத்திய சீரழிவுக் கலாச்சாரத்தை அரவணைத்துக் கொண்டே இக்கோமாளிகள், பாலியல் கொடுமைகளை ஒழிக்கப் போவதாக சூரத்தனம் காட்டுவது பித்தலாட்டமின்றி வேறென்ன?

## "ஊழலுக்கு உடன்படு!" —'மார்க்சிஸ்டு'களின் ரௌடித்தனம்

கட்சியின் ஊழலுக்கும் கொள்ளைக்கும் உடன்பட மறுத்த குற்றத்திற்காக, ஒரு பெண் பஞ்சாயத்துத் தலைவரையே தாக்கியதோடு, அவரைச் செயல்படவிடாமல் 'மார்க்சிஸ்டு' குண்டர்கள் தொடர்ந்து அச்சுறுத்தி வருகின்றனர். கேரள மாநிலம், காசர்கோடு வட்டத்திலுள்ள புத்திஜி பஞ்சாயத்துத் தலைவராக, 'மார்க்சிஸ்டு' கட்சி ஆதரவாளரான பாத்திமா சுஹரா கடந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது கணவரான அப்துல் சலாம், 'மார்க்சிஸ்டு' கட்சியின் ஆசிரியர் சங்கத்தில் முக்கிய பொறுப்பில் உள்ளார். பாத்திமா பதவியேற்ற பிறகு வளர்ச்சித் திட்டப் பணிகளை 'மார்க்சிஸ்டுகள்' செல்வாக்குள்ள வார்டுகளுக்கு மட்டுமே செய்ய வேண்டும்; இப்பகுதியின் கட்சித் தலைவரான பி.கே. முகம்மது கூறும் காண்டிராக்டருக்கே ஒப்பந்தங்களை வழங்க வேண்டும் என்று கட்சித் தலைமை அவரை நிர்ப்பந்தித்து வந்தது. குறிப்பிட்ட காண்டிராக்டரிடம் ஒப்பந்தங்களை அளித்தால், பாத்திமாவுக்கு 10 சதவீத கமிசன் தருவதாக ரகசிய பேரமும் நடந்தது.



ஊழலுக்கு உடன்பட மறுத்ததால் 'மார்க்சிஸ்டு' குண்டர்களால் தாக்கப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர் பாத்திமாவும் அவரது கணவரும்

இவற்றுக்கு உடன்பட மறுத்த பாத்திமா, 'மார்க்சிஸ்டு' செல்வாக்குள்ள வார்டுகள் மட்டுமின்றி, அனைத்து வார்டுகளுக்கும் வளர்ச்சித் திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியரின் ஆதரவோடு செய்தார். திட்டப் பணிகளை குறிப்பிட்ட ஒப்பந்தக்காரருக்கு மட்டும் அளிப்பதை மாற்றி, பஞ்சாயத்து துணைக்குழு மூலம் தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கினார். இதனால் ஆத்திரமடைந்த 'மார்க்சிஸ்டு' தலைமை, அவரைப் பதவியிலிருந்து விலகுமாறு மிரட்டியது. கட்சி ஆதரவில் வெற்றி பெற்ற ஒருவர் கட்சி கோரும் போது பதவியிலிருந்து விலகவும் முன் வரவேண்டும்.


படிப்பகம்

www.padippakam.com



இதை ஏற்க மறுப்பது கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய செயலாகும் என்று போலிகள் இதற்கு சித்தாந்த விளக்கம் அளித்தனர். பாத்திமா இந்த மிரட்டல்களுக்குப் பணிய மறுத்து, மாநில கட்சிச் செயலாளரான சடையன் கோவிந்தனுக்குக் கடிதம் எழுதினார். ஆனாலும் அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மறுபுறம், உள்ளூர் 'மார்க்சிஸ்டு' தலைவர்கள், குண்டர்களை ஏவி பாத்திமாவின் கணவரையும் மைத்துனரையும் தாக்கியதோடு, பஞ்சாயத்து அலுவலகத்தினுள் பாத்திமா நுழைய விடாமல் முற்றுகைப் போராட்டத்தை நடத்தினர். அதே நாளில் அவரது வீடும் தாக்கப்பட்டு அதன் ஒரு பகுதி இடித்து தள்ளப்பட்டது. அடுத்த பஞ்சாயத்து கூட்டத்தின் போது அவர் மீது அழுகிய முட்டைகள் வீசப்பட்டன. கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில் பாத்திமாவின் கணவர் வழிமறிக்கப்பட்டு, 'மார்க்சிஸ்டு' குண்டர்களால் தாக்கப்பட்டதில் கை எலும்பு முறிந்து போனது.

''பாத்திமாவும் அவரது கணவரும் அதிகார மமதையோடு ஊழல் - மோசடிகளில் ஈடுபடுகின்றனர். இதை சீர் செய்யவே அவரைப் பதவி விலகக் கோருகிறோம், கட்சி ஊழியர்கள் இப்பிரச்சினையில் உணர்ச்சிவசப்பட்டு வன்முறையில் இறங்கிவிட்டனர்'' என்று 'மார்க்சிஸ்டு' தலைமை தன்னிலை விளக்கம் அளிக்கிறது. பாத்திமா, ஊழல் செய்திருந்தால் அதை பகிரங்கமாக மக்கள் முன் அம்பலப்படுத்தி கட்சியிலிருந்து அவரை நீக்குவதை விடுத்து, இப்படி மிரட்டிப் பணிய வைக்கும் உத்திகளிலிருந்தே 'மார்க்சிஸ்டு'களின் யோக்கியதை சந்தி சிரிக்கிறது. எனவேதான் இப்போலி கம்யூனிஸ்டுகளின் அவதூறுகளை உள்ளூர் மக்கள் ஏற்க மறுத்ததோடு, பாத்திமாவுக்குப் பாதுகாப்பு தருமாறு ஆளுநரிடம் எதிர்க்கட்சிகள் முறையிட்டுள்ளன.

பெண்கள் முன்னேற்றத்திலும், சிறுபான்மையோரின் நலத்திலும் அக்கறை கொண்டுள்ள கட்சி என்று 'மார்க்சிஸ்டுகள்' தங்களைப் பீற்றிக் கொள்கின்றனர். ஆனால் இதர ஓட்டுப் பொறுக்கிகளைப் போலவே ஊழல், கிரிமினல் அரசியலில் இறங்கிவிட்ட பிறகு, இவையெல்லாம் வெற்றுச் சவடால்களாகி விட்டதை பாத்திமா விவகாரம் நிரூபித்துக் காட்டுகிறது.

## பஞ்சம் - வறட்சியில் பரிதவிக்கும் வடகொரியா



போலி சோசலிசத்தின் தோல்வி; பஞ்சத்தில் சிக்கி எலும்பும் தோலுமாகி நிற்கும் வடகொரியக் குழந்தைகள்.

போலிக் கம்யூனிஸ்டுகளால் சோசலிச நாடாகச் சித்தரிக்கப்படும் வடகொரியாவில் தொடரும் வறட்சி - பஞ்சத்தால் அந்நாடே பட்டினியால் பரிதவிக்கிறது. சத்துணவின்மையால் அந்நாட்டின் குழந்தைகள் எலும்பும் தோலுமாகக் காட்சியளிக்கின்றனர். நிவாரண உதவிக்காக வடகொரியாவில் நுழைந்துள்ள கத்தோலிக்க சேவை நிறுவனங்கள், ஏறத்தாழ 2 லட்சம் பேர் பட்டினியால் மாண்டுள்ளதாகக் கூறுகின்றன. ஆனால் வடகொரிய அரசோ இத்தகவல் பொய்யானது என்று மறுக்கிறது. பட்டினிச் சாவுகளுக்கு ஆதாரமில்லாத போதிலும், நாடும் மக்களும் பஞ்சத்தில் பரிதவிப்பதை சேவை நிறுவனங்கள் அனுப்பும் புகைப்படங்களே நிரூபித்துக் காட்டுகின்றன.

1995, 96 என அடுத்தடுத்து இரண்டாண்டுகளாக தாக்கிய பெரு வெள்ளமும், இவ்வாண்டில் தொடரும் வறட்சியும் வடகொரியாவைப் பெரிதும் பாதித்துள்ளன. ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 250 கிராம் அளவுக்கே ரேஷன் மூலம் உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. ''நமது வாழ்நாளில் கண்டிராத மிகப் பெரிய துயரம்'' என்று ஐ.நா. மன்றத்தின் உலக உணவுத் திட்ட அதிகாரிகள் முதலைக் கண்ணீர் வடித்த போதிலும், அற்ப அளவுக்கே ஐ.நா. மன்றத்தின் மூலம் உதவிகள் கிடைக்கின்றன. பஞ்சத்தில் சிக்கித் தவிக்கும் வடகொரிய மக்கள் நீண்ட காலம் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள்; ராணுவத்தோடு சேர்ந்து கொண்டு ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கலகத்தில் இறங்குவார்கள் என்ற எதிர்பார்ப்போடு ஏகாதிபத்திய ஓநாய்கள் காத்திருக்கின்றன. அதனாலேயே நிவாரண உதவிகளில் மெத்தனம் காட்டுகின்றன.

அதேசமயம் 40 ஆண்டுகளாகத் தொடரும் வடகொரியாவின் போலி சோசலிசம், இயற்கையின் சீற்றத்தை எதிர்கொள்ள முடியாமல் தோல்வியடைந்துள்ளதையே பெருகிவரும் பஞ்ச நிலைமை நிரூபிக்கிறது. மறைந்த முன்னாள் அதிபர் கிம் இல் சுங் கட்டியமைத்த ''சூசே'' எனப்படும் மண்ணுக்கேற்ற சோசலிசம், போலிக் கம்யூனிஸ்டுகளால் பெருத்த ஆரவாரம் செய்யப்பட்டதற்கு மேல் வேறொன்றையும் சாதிக்கவில்லை. கரடுமுரடான பாறைப் பகுதிகள் நிறைந்த வடகொரியா, விவசாயத்தில் தன்னிறைவு கண்டுவிட்டதாக கூறிக்கொண்டே, தென்கொரியா மற்றும் அமெரிக்காவின் அச்சுறுத்தலைக் காரணம் காட்டி ராணுவத்தை நவீனப்படுத்துவதே நடந்தது. கிம் குடும்பத்தின் தலைமையிலான அதிகார வர்க்க ராணுவ கும்பலின் ஆட்சியாக போலி சோசலிசம் சீரழிந்து, இன்று நாடே நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது.

மக்கள் கலை இலக்கியக் கழகம்
விவசாயிகள் விடுதலை முன்னணி
புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி
இணைந்து நடத்தும்

**சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கம்**

**செப். - நவ.'97**

* தமிழகமெங்கும் பொதுக்கூட்டங்கள்
* 30.10.97 தீபாவளியன்று சாதியத்தைப் போதிக்கும் வேத - புராணக் குப்பைகளைக் கொளுத்தும் போராட்டம்
* தனித் தேநீர்க் குவளை, கோயிலில் நுழையத் தடை போன்ற தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகப் போராட்டங்கள்
* 7.11.97 - நவம்பர் புரட்சி நாளில் விழுப்புரத்தில் சாதி - தீண்டாமை மறுப்பு மணவிழா
* 10.11.97 அன்று மதுரையில் பேரணி மற்றும் பொதுக் கூட்டம்



படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்க சேவைக்காக ரூபாய் மதிப்பு வீழ்ச்சி

இந்திய மக்கள் மீது ஒரே சமயத்தில் இரண்டு பொருளாதா ரத் தாக்குதல்களைத் தொடுத்துள்ளது, மைய அரசு. ஒன்று, ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி; மற்றொன்று விலைவாசி உயர்வு.

ஒரு அமெரிக்க டாலருக்கு, ரூ. 35.65 என்றிருந்த இந்திய ரூபா யின் மதிப்பு ஆகஸ்டு மாத இறுதியில் சடசடவெனச் சரிந்து, ரூ. 36.70 ஆகக் குறைந்து போனது. இரண்டே நாட்களுக்குள் ஏற்பட்ட இவ் வீழ்ச்சியைக் கண்டு ஆட்சியாளர்கள் அதிர்ச்சியடையவில்லை; மாறாக, ஆனந்தம் கொண்டார்கள். இவ்வீழ்ச்சி தேவையானதுதான் என நியாயப்படுத்தினார்கள். ஏனெனில், இந்திய ரூபாயின் மதிப்பை, அரசின் தலையீடின்றி சந்தையில் புழக்கத்தில் இருக்கும் அமெரிக்க டாலர் தீர்மானிக்க வேண்டும் என்பதுதான் இவர்களின் நோக்கம். ஏகாதிபத்தியங்களின் விருப்பமும் இதுதான்.

ஆகஸ்டு மாதத் துவக்கத்தில் தாய்லாந்து, மலேசியா போன்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பணத்தின் மதிப்பு சரிந்த பின், இந்திய ரூபாயின் மதிப்பையும் குறைக்க வேண்டும் என்று கூக்குரல்கள் எழ ஆரம்பித்தன. குஜ்ரால், சிதம்பரம், நிதித்துறை அதிகாரிகளும் பத்தி ரிகை நேர் காணலிலும், செய்திகளிலும் இதையே கூறினர். ஆனாலும் ரூபாயின் மதிப்பை அதிகாரபூர்வமாக குறைக்கவில்லை. மாறாக, சந்தையில் ரூபாயின் மதிப்பு ரூ. 35.65-லிருந்து ரூ. 36.70 ஆகச் சரியும் வரை அரசு தலையிடாது ஒதுங்கிக் கொண்டு, புறக்கடை வழியாக ரூபாயின் மதிப்பைக் குறைத்துள்ளது.

95-ஆம் ஆண்டு இறுதியில் ரூபாயின் மதிப்பு ரூ. 31.37-லிருந்து ரூ. 35.90 ஆகச் சரிந்தது. அப்பொழுது 45 நாட்களில் இந்திய ரூபா யின் மதிப்பு 13 சதவீதம் வீழ்ந்தது. இப்பொழுதோ இரண்டே நாட்க ளுள் 2.4 சதவீதம் வீழ்ந்துள்ளது. தாராளமயமாக்கல் தீவிரமடைய, தீவிரமடைய ரூபாயின் மதிப்பு எதை நோக்கி நாலுகால் பாய்ச்சலில் சென்று கொண்டிருக்கிறது என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ள லாம்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக இந்திய ரூபாயின் மதிப்பு பெரி தும் வீழ்ந்து விடாமல், தற்காலிகமாகவாவது நிலையாய் இருந்ததற்கு அரசின் தலையீடுதான் காரணம். ஆனால், தற்பொழுதோ இத்தலை யீட்டை நீக்கி, ரூபாயின் மதிப்பை சந்தை தீர்மானிக்கும் வண்ணம் வரையறைகளை வரைவதற்கு நிதித்துறை அதிகாரிகள் கொண்ட குழு வொன்றை ஏற்படுத்தவுள்ளது, மைய அரசு. ரூபாயின் மதிப்பு அதல பாதாளத்தை நோக்கிச் சரியும் பொழுது மட்டுமே இனி அரசு தலையி டும். அச்சமயத்தில் அரசு, தன் கையிருப்பிலுள்ள அமெரிக்க டாலரை சந்தைக்குள் செலுத்தி, ரூபாயின் மதிப்பு அதல பாதாளத்தில் விழாது தடுத்துவிடும் என்று கூறுகின்றனர்.

கிட்டத்தட்ட 70,000 கோடி ரூபாயாக உள்ள அந்நியச் செலா வணி கையிருப்பைக் காட்டி, மக்களிடம் இந்த நம்பிக்கையை ஏற்ப டுத்த முனைகின்றனர், ஆட்சியாளர்கள். சொந்த நாட்டு ரூபாயின் மதிப்பை சந்தையின் பிடிக்குத் தாரை வார்த்த மெக்சிகோ, தாய்லாந்து போன்று நமது நாட்டுப் பொருளாதாரமும் போண்டியாகிவிடாது என்பதற்கு இக்கையிருப்பை ஆதாரமாகக் கூறுகின்றனர்.

மைய அரசின் வசமுள்ள இந்த அந்நியச் செலாவணி கையிருப்பு ஏற்றுமதி வர்த்தகத்தின் மூலம் ஈட்டப்பட்டதல்ல; மாறாக, இதில் பெரும்பகுதி இந்தியப் பங்குச் சந்தையில் சூதாட வந்த அந்நிய முத லீட்டாளர்களுக்குச் சொந்தமானதாகும். ரூபாயின் மதிப்பு மோசமான சரிவைச் சந்திக்குமானால், தாங்கள் முதலீடு செய்துள்ள கோடிக்கணக் கான டாலர்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, இம்முதலீட்டாளர் கள் ஓடிவிடுவார்கள். அப்பொழுது அந்நியச் செலாவணி கையிருப் பும், ரூபாயின் மதிப்பைப் போல அதல பாதாளத்திற்குள் வீழ்ந்து விடும்.

மெக்சிகோவில் இதுதான் நடந்தது. ரூபாயின் மதிப்பை சந்தை தீர்மானிக்க விடுவதால் இந்தியாவிலும் இது போல் அபாயகரமான விளைவுகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமுண்டு. அந்த இக்கட்டான நேரத்தில் மெக்சிகோவிற்கும், தாய்லாந்திற்கும் கடன் தர முன் வந்த ஏகாதிபத்தியங்கள், இந்தியாவிற்கும் கடன் கொடுக்கும் என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை.

வழமை போலவே, ரூபாயின் மதிப்பு சரிந்த பின், "இனி ஏற்று மதி பெருகும்" என்று கீறல் விழுந்த பழைய பல்லவியை பாடத் துவங்கிவிட்டது மைய அரசு. ஆனால், சர்வதேச ஏற்றுமதி வர்த்தகத் தில் 1 சதவீதமாக இருந்த இந்தியாவின் பங்கு, 0.6 சதவீதமாக வீழ்ந்து விட்டது என்பது தான் உண்மை. ஏகாதிபத்தியங்கள், உலக வர்த்தகக் கழகத்தின் மூலம் இந்திய ஏற்றுமதிக்கு அடுத்தடுத்து விதித்து வரும் தடைகளால், ஏற்றுமதி வர்த்தகம் தடுமாறி நிற்கிறது. குறிப்பாக, இந் திய ஏற்றுமதியில் முக்கியப் பங்கு வகிக்கும் ஜவுளிக்கு, மேற்குலக நாடுகள் அளவு ரீதியான கட்டுப்பாடுகளை விதித்துள்ளன.

சர்வதேச வர்த்தகத்தில் நிலவி வரும் தேக்கம், ஏகாதிபத்தியங்க ளின் தடைகள் காரணமாக கடந்த இரண்டு மாதங்களில் இந்திய ஏற்றுமதி வர்த்தகம், சென்ற ஆண்டை ஒப்பிடும்பொழுது 1.63 சதவீ தம் வீழ்ந்து போயுள்ளது. இந்நிலையில் "பணத்தின் மதிப்பு வீழ்ந்த தால், ஏற்றுமதி பெருகும்" என்ற பொதுவான பொருளாதார சூத்திரத் தைக் கூறி, பொதுமக்களை ஏய்க்கப் பார்க்கிறது மைய அரசு.

பணத்தின் மதிப்பு வீழ்ந்தாலே பொதுச் சந்தையில் பல பொருட்க ளின் விலைகள் தானாக உயர்ந்துவிடும். இச்சமயத்தில் மைய அரசும் தனது கட்டுப்பாட்டில் உள்ள பெட்ரோலியப் பொருட்களின் விலையை உயர்த்தியதன் மூலம், இத்தாக்குதலை மேலும் கூர்மைப்ப டுத்தியுள்ளது. பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வினால் மட்டும் மைய அரசுக்கு கிடைக்கக் கூடிய வருமானம் 10,000 கோடி ரூபாய். இவ்வுயர்வைக் காரணம் காட்டி தமிழ்நாடு - ஆந்திர மாநிலங் களில் பேருந்து கட்டணம் உயர்ந்துள்ளன. இதோடு, நியாய விலைக் கடைகளில் வழங்கப்பட்டு வந்த சர்க்கரை விலை உயர்வு; சில மக்கள் நலத் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டில் 3,000 கோடி ரூபாய் குறைப்பு எனக் கூடுதலாக மக்கள் மீது சுமையை ஏற்றி, தனக்கு வருமானம் தேடிக் கொண்டுள்ளது, மைய அரசு.

எண்ணெய் தொகுப்புக் கணக்கில் (Oil Pool Account) 18,200 கோடி ரூபாய் பற்றாக் குறை ஏற்பட்டதால்தான், பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வைத் தவிர்க்க முடியவில்லை எனக் கூறுகிறது ஐ.மு. அரசு. ஆனால் இப்பற்றாக்குறை எண்ணெய் தொகுப் புக் கணக்கில் உபரியாக இருந்த 27,842 கோடி ரூபாயை மைய அரசு எடுத்துக் கொண்டதால் ஏற்பட்டதாகும். சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் மலிவாக கிடைக்கும் பொழுது, இந்தியாவிலோ பெட்ரோ லியத் துறையில் தனது ஏகபோகம் காரணமாக விலையைத் தன்னிச் சையாக உயர்த்தியுள்ளது, மைய அரசு. அனைத்தையும் சந்தை தீர்மா னிக்கட்டும் என்ற தாராளமய முழக்கத்தை, அரசு ஏகபோகம் மூலம் கிடைக்கும் கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் மறைத்து விட்டது போலும்.

தாராளமயமாக்கம் என்ற பெயரில் தரகு முதலாளிகளுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் வழங்கியுள்ள தொழில் வரி, மூலதன வரி, சுங்கத் தீர்வை சலுகைகளை ரத்து செய்து, தனது நிதி நெருக்கடி யைச் சமாளித்துக் கொள்ள மைய அரசு தயாராக இல்லை. மாறாக, மானியங்களை வெட்டியும், கூடுதலாக வரி விதித்தும், கட்டணங்கள் - விலைகளை உயர்த்தியும், கல்வி, சுகாதாரம், மருத்துவம் போன்ற மக்கள் நலத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைத்தும் தான் தனக்கு வருமானம் தேடிக் கொள்கிறது. நவீன ஷைலாக்குகளாக மாறிவிட்ட இந்த ஆளும் கும்பலுக்கு, இனி 'சேம நல அரசு' என்ற பட்டமெதற்கு?

• ரஹீம்


படிப்பகம்

www.padippakam.com

# பின்னோடிகளான "முன்னோடி"கள்

**முற்போக்கு இளைஞர் அணியும் அதன் சகபாடி அமைப்புகளும் தன்னார்வக் குழுக்களுடன் இணைந்து பணியாற்றுவது ஏன் என்ற கேள்விக்கு கடந்த மே மாதம் புதிய ஜனநாயகம் இதழில் பதிலளித்திருந்தோம். அதற்குப் பதில் என்கிற பெயரில் "மாணவர் - இளைஞர் முன்னோடி" என்னும் பத்திரிகையில் நமது விமர்சனங்களை உறுதிப்படுத்தியும், அதற்கு ஈடுகட்டும் வகையில் பு.ஜ. மீது அவதூறுகளும் எழுதியுள்ளனர்.**

### "தன்னார்வக் குழுக்களுடன் கூட்டு" — சவடால்களால் மறுப்பு

மு.இ. அணியும் அதன் சகபாடி அமைப்புகளும் தன்னார்வக் குழுக்களுடன் சேர்ந்து கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் அதை நியாயப்படுத்துவதையும் குறித்த பு.ஜ.வின் குற்றச்சாட்டை அவர்கள் மறுக்கவில்லை. மாறாக உறுதிப்படுத்தும் வகையிலேயே எழுதியுள்ளனர், ஒன்றே ஒன்றைத் தவிர. "அதன் மூலம் தன்னார்வக் குழுக்கள் புரட்சிகர இயக்கங்களுக்குள் ஊடுருவி, சீர்குலைப்பதைத் தடுத்துவிட முடியும், புரட்சிகர சக்திகளை வென்றெடுத்து வளர்க்கவும் முடியும்" என்று மு.இ.அ. வாதிடுவதாக பு.ஜ. எழுதியதைத்தான், பு.ஜ.வினரின் சொந்தக் கற்பனை என்று சொல்லி மறுத்துள்ளனர். இதிலும், "புரட்சிகர சக்திகளை வென்றெடுத்து வளர்க்க முடியும்" என்பதை வெற்றிகரமாகச் சாதித்திருப்பதாக உரிமை பாராட்டிக் கொள்கின்றனர்.

தன்னார்வக் குழுக்களுடன் நேரடியாக கூட்டு நடவடிக்கைக்குப் போகாமல், மறைமுகமாகவும் மற்ற அமைப்புகளுடன் சேர்ந்தும் போவதற்கான காரணம் அவை புரட்சிகர இயக்கங்களுக்குள் ஊடுருவி, சீர்குலைப்பதைத் தடுப்பதற்காக அல்லவாம். மக்கள் பிரச்சினையிலிருந்து விலகி ஓடிவிடக்கூடாது என்பதால்தானாம். ஊடுருவி விடுமோ என்ற அளவுக்கு அமைப்பின் மீதும் அரசியல் மீதும் நம்பிக்கை இல்லாமலில்லையாம். இதெல்லாம் சவடால் இல்லை, உண்மைதானென்றால், தன்னார்வக் குழுக்கள் மட்டும் தனியே மக்கள் பிரச்சினைகளைக் கையிலெடுக்கும் விவகாரங்களில் மட்டும் விலகி ஓடலாமா? அப்போதும் இவர்களது அமைப்பின் மீதும் அரசியலின் மீதும் நம்பிக்கை வைத்து நேரடியாகவே கூட்டு நடவடிக்கைக்குப் போகவேண்டியதுதானே!

ஒரு குறிப்பான பிரச்சினையில் தனித்தோ, பிற அமைப்புகளோடு சேர்ந்தோ தன்னார்வக் குழுக்கள் செயல்படும் விவகாரங்களில் எல்லாம் அவற்றோடு இணைந்து செயல்பட வேண்டும்; இல்லையென்றால், மக்கள் பிரச்சினையில் இருந்து விலகி ஓடுவது ஆகிவிடுமா? புரட்சிகர அமைப்பு தன் சொந்த பலத்தின் மீதும் அரசியலின் மீதும் நம்பிக்கை வைத்து தனித்தோ, பிற ஜனநாயக சக்திகளோடு இணைந்தோ, தன்னார்வக் குழுக்களைத் தனிமைப்படுத்தி, மக்கள் பிரச்சினைகள் மீது போராடுவதைத் தடுப்பது எது?

தன்னார்வக் குழுக்கள் ஏகாதிபத்திய ஏஜெண்டுகள் என்பதில் அவர்களுக்கு எந்தக் கருத்து வேறுபாடும் கிடையாதாம். இருந்தும் அவற்றுடன் கூட்டு நடவடிக்கைக்குப் போவதற்கு அவர்கள் கூறும் காரணங்கள், அடிக்கும் சவடால்கள் ஒன்றும் புதிதல்ல. இந்த முன்னோடிகளுக்கும் முன்னோடிகளான வினோத் மிஸ்ரா குழுவினர் முன் வைத்தவைதாம். 15 ஆண்டுகளுக்கு முன்பு அந்த அமைப்பில் சுற்றி வரும் தூதராகப் பணியாற்



றிய அறிவுப்பிழைப்புவாதி டி.எஸ்.எஸ். மணி, இதே சவடால்களை அடித்துக் கொண்டுதான் தன்னார்வக் குழுக்களுடன் கூடிக் குலவித் திரிந்தார். இன்று என்னவானது? அந்த முடிவை எட்டத்தானே ஒன்றுக்கு மூன்று பேராய் சுற்றிவரும் தூதர்களை ம.யு. குழு நியமித்துள்ளது.

இங்கு மட்டுமல்ல, கர்நாடகம், கோவா, மராட்டியம், ஆந்திராவில் கூட மு.இ. அணியும் அதன் சகபாடிகளும் தன்னார்வக் குழுக்களுடன் உறவு கொண்டிருப்பதாக பு.ஜ. ஆதாரமின்றி எழுதுவதாகவும், நேரடியாக சுட்டிக்காட்டாமல் வெளிப்படையாக எழுதுவதாகவும், இதை நேர்மையற்ற செயல் என்றும் "முன்னோடி" எழுதுகிறது. நேரில் பல முறை சுட்டிக் காட்டப்பட்டுவிட்டது. தொடர்ந்து மழுப்புவதாகவே உள்ளதால் எழுதித்தான் தீர வேண்டும்.

கர்நாடகாவில் மக்கள் திரள் நடவடிக்கை என இவர்கள் உரிமை பாராட்டிக் கொள்வதெல்லாம் தன்னார்வக் குழுக்களால் நடத்தப்படுவதாகவே உள்ளன. மராட்டியத்திலும் கோவாவிலும், குறிப்பாக லாட்டூர் பூகம்ப நிவாரண நிதி விவகாரத்திலும் தன்னார்வக் குழுக்களுடன் இவர்களது அமைப்பினர் சம்பந்தப்பட்டு, அது அமைப்பே பிளவுபடும் நிலைக்குப் போகவில்லையா? ஆந்திராவில் தன்னார்வக் குழுக்களுடன் உறவு வைத்துக் கொண்டு, இங்கே அப்படிப்பட்ட நபர்களை விமர்சிப்பது என்ற இரட்டை வேடத்தை, முன்பே ராயன் என்பவர் அம்பலப்படுத்திய போது வாய்மூடிக் கிடக்கவில்லையா?

### "நீ மட்டும் யோக்கியமா?" என்ற எதிர்க் குற்றச்சாட்டு

ஓட்டுப் பொறுக்கித் தலைவர்கள் மீது ஊழல் புகார்கள் கூறப்படும் போது, "நீ மட்டும் யோக்கியமா?" என்கிற எதிர்க் குற்றச்சாட்டு வீசப்படுவது வழக்கம். தன்னார்வக் குழுக்களுடன் மு.இ. அணி கூட்டு நடவடிக்கைக்குப் போவது பற்றிய பு.ஜ. விமர்சனத்திற்கு, அதே பாணியை "முன்னோடி" கையாண்டுள்ளது. இதன் பொருள் என்ன? "நான் மட்டுமா ஊழல் செய்தேன், நீயும்தான் ஊழல் செய்தாய்! என் விசயத்தைச் சொன்னால் உன் விசயத்தைச் சொல்வேன். கண்ணாடி அறையில் இருந்து கல்லெறியாதே!" என்று மிரட்டுவதும், "என் விவகாரத்தைக் கிண்டாதே, நான் உன் விவகாரத்தைக் கண்டு கொள்ள மாட்டேன்" என்று ஒருவருக்கு ஒருவர் சமரசம் பேசுவதும், தன் தவறை மூடி மறைக்க அடுத்தவர் தவறைப் பயன்படுத்துவதும் ஆகும்.

ஐயா! முன்னோடியாரே, நாங்கள் உங்கள் பின்னோடி வரமாட்டோம். எங்கள் மீது எதிர்க் குற்றச்சாட்டு வீசுவது எந்த வகையிலும் உங்கள் தவறுகளை நியாயமென்றாக்கி விடாது. தன்னார்வக் குழுக்களுடன் நாங்களும் தான் தொடர்பு வைத்திருக்கிறோம், நீங்களும்தான் தொடர்பு வைத்திருக்கிறீர்கள் என்கிற தோரணையில் எதிர்க் குற்றச்சாட்டுக்களை வைத்திருக்கிறீர்கள். ஆனால் அதற்கான அடிப்படையோ, ஆதாரமோ எதுவுமில்லாத நிலையில், தன்னார்வக் குழுக்களின் நிகழ்ச்சிகளில் பங்கேற்ற கலைக் குழுவினர், பேச்சாளர்கள் எமது நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டதைச் சான்றாகக் காட்டுகிறீர்கள்.

முதலாவதாக, தன்னார்வக் குழுக்களுடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ நமது அமைப்புகள் கூட்டு நடவடிக்கைகளுக்குச் சென்றதில்லை. அவற்றை எதிர்த்து பத்திரிகைகளில் மட்டுமல்ல, சுவரொட்டிகள், பிரசுரங்கள் மூலம் அவர்களின் நிகழ்ச்சிகளின் போதே - நேரடியாகவே அம்பலப்படுத்திப் போராடி வருகிறோம். அதற்காகத் தன்னார்வக் குழுக்கள் நம்மீது ஆத்திரத்தோடு எதிர்ப் பிரச்சாரமும், சில சமயம் தாக்கவும் ஆட்களை ஏவி விடுகின்றன. இத்தகைய பகைமையான அணுகுமுறையை மு.இ.அ. உட்பட வேறு எவருடனும் அக்குழுக்கள் கொண்


படிப்பகம்

www.padippakam.com

டிருக்கவில்லை. "முன்னோடி"யே கூட "அவர்களை அம்பலப்படுத்தி, தனிமைப்படுத்த கூட்டமைப்பில் தொடர்ந்து போராடுவோம்" என்றுதான் எழுதுகிறது.

இரண்டாவதாக, சில நாட்டுப்புறக் கலைக் குழுவினர் தொழில் ரீதியாகவும், வயிற்றுப் பிழைப்புக்காகவும் ஊதியம் பெற்றுக் கொண்டு அரசு மற்றும் தனியார் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதைப் போல, தன்னார்வக் குழுக்களின் நிகழ்ச்சிகளுக்கும் போகிறார்கள். அந்த நாட்டுப்புறக் கலைக் குழுக்களே தன்னார்வக் குழுக்கள் அல்ல; அவற்றால் இயக்கப்படுபவையும் அல்ல. அப்படிப்பட்ட நாட்டுப்புறக் கலைக் குழுக்களை நமது நிகழ்ச்சிகளுக்கு அழைப்பது எப்படித் தன்னார்வக் குழுக்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வதாகும்?

இத்தகைய கலைக் குழுக்களையும், தன்னார்வக் குழுக்களோடு இணைந்து தமது வாழ்வை வளப்படுத்திக் கொள்ள முயலும் அறிவு ஜீவிகளையும் நாம் வேறுபடுத்தியே அணுகுகிறோம். அத்தகைய அறிவுஜீவிகளால் இயக்கப்படும் கலைக் குழுவினர்கள், பேச்சாளர்கள், நமது நிகழ்ச்சிகளிலும் பங்கேற்பதற்கு முன் நிபந்தனையாக, தன்னார்வக் குழுக்களை நிராகரித்துப் பகிரங்கமாக அறிவிக்கும்படி வலியுறுத்தி வருகிறோம்.

மூன்றாவதாக, தன்னார்வக் குழுக்களின் சம்பளப் பட்டியலில் உள்ள ஒரு சில நபர்களைப் பற்றி முழுமையாக அறிந்திராத நிலையில் நமது நிகழ்ச்சிக்கு அழைத்ததுண்டு. ஆனால் அந்த விவரத்தை அறிந்தவுடன் தவறை ஒப்புக் கொண்டு, சுய விமர்சனம் ஏற்று, அப்படிப்பட்ட நபர்களைப் புறக்கணித்து விட்டிருக்கிறோம்.

"முன்னோடி"யே கூட, "தன்னார்வக் குழுக்களுடன் தொடர்பு கொண்ட இசைக் கலைஞர்களையும், கவிஞர்களையும் பயன்படுத்தி"க் கொள்வதாகவும், "மதுரை - தன்னார்வக் குழுக்கள் நடத்திய தலித் கலைவிழாவில் கலந்து கொண்ட குழுவையே அழைத்த'
'தாகவும்தான் ஆதாரம் காட்ட முடிகிறது. இதன் மூலம் நமது அமைப்புகள் மீது வீண் சந்தேகம், அவதூறு பரப்பிடவே "முன்னோடி" முயன்றுள்ளது.

இந்த "முன்னோடி"யின் சகபாடியான மக்கள் பண்பாட்டுப் பேரவை, "தென் தமிழகத்தில் தலித் மக்களின் எழுச்சிப் போர்" என்று ஒரு பிரசுரம் வெளியிட்டுள்ளது. அதில் பின்வருமாறு எழுதியுள்ளது;

"தலித் எழுச்சியில் தன்னார்வக் குழுக்களின் அணுகுமுறைகளாக இருப்பவைகள்: 1. மக்கள் போராட்டங்களை எடுத்து இடையில் நிறுத்தித் திசை திருப்பிக் காயடிப்பது (கரணை பஞ்சமி நில மீட்புப் போராட்டம் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு). 2. உறுதியான வலுவான அமைப்பிற்கு மாறாக, தொள தொளப்பான ஒருங்கிணைப்பை - கூட்டமைப்பை உருவாக்குவது. 3. உரிமைகளுக்குப் போராடும் செயல் வீரர்களுக்குக் கூலி கொடுத்து, அவர்களிடம் குட்டி முதலாளிய சிந்தனையைத் தூண்டி, அவர்களின் போராட்ட உணர்வைக் காயடிப்பது. 4. மார்க்சிய தத்துவத்திற்கும், மார்க்சிய - லெனினிய அமைப்புகளுக்கும் எதிரான சிந்தனையை விதைப்பது; பின் நவீனத்துவம், நுண் அரசியல் போன்ற கோட்பாடுகளைப் பரப்பி திசை திருப்புவது 5. தலித் மக்கள் ஏனைய சாதிகளில் உள்ள உழைக்கும் மக்கள், ஜனநாயக சக்திகளுடன் இணைந்து போராடாமல் தடுப்பது. இப்படியே தன்னார்வக் குழுக்களின் நய வஞ்சகங்களை விவரித்தால் பக்கங்கள் போதாது. எனவே, தலித் மக்களும், செயல் வீரர்களும் தன்னார்வக் குழுக்களிடம், அவைகள் ஊடுருவி செயல்படும் தலித் மற்றும் ஏனைய அமைப்புகளுடன் மிகவும் எச்சரிக்கையாக இருந்து அவைகளைப் புறக்கணிக்க வேண்டும்" (பக் 12-13) என்று அறிவுறுத்துகிறார்கள்.

இதையும், "முன்னோடி" பு.ஜ.வுக்கு எழுதியுள்ள பதிலையும், அவர்களது நடைமுறையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் எவரும் எளிதில் புரிந்து கொள்ள முடியும். "ஊருக்குத்தான் உபதேசம்; உனக்கும் எனக்கும் இல்லையடி" என்பதுதான் அவர்களுடைய கொள்கை.

தன்னார்வக் குழுக்களிடம் எச்சரிக்கையாக இருந்து புறக்கணிக்க வேண்டும் என்று பிற அமைப்புகளுக்கு உபதேசம் செய்கிறார்கள். ஆனால் இவர்களோ மக்கள் பிரச்சினை



யிலிருந்து விலகி ஓடமாட்டோம்; தங்கள் அமைப்பின் மீதும் அரசியல் மீதும் நம்பிக்கை இருக்கிறது என்று சவடால் அடித்துக் கொண்டு அக்குழுக்களுடன் கூட்டு வைப்பதை நியாயப்படுத்துகிறார்கள்.

உறுதியான, வலுவான அமைப்பிற்கு மாறாக, தன்னார்வக் குழுக்கள் தொள தொளப்பான ஒருங்கிணைப்பை - கூட்டமைப்பை உருவாக்குவதாக பிற அமைப்புகளுக்கு எச்சரிக்கை விடுகிறார்கள். ஆனால், மூன்று மந்திரக் கோல்களில் ஒன்றாக மாவோ சொன்ன ஐக்கிய முன்னணி பொதுவான நோக்கத்துக்கானது; தன்னார்வக் குழுக்களுடன் இவர்கள் நடத்தும் கூட்டு நடவடிக்கைகள் குறுகிய இலக்குகளுக்காக, சிறிய அளவிலான ஐக்கிய முன்னணிகள் என்று கோட்பாட்டு விளக்கமளிக்கிறார்கள்.

உரிமைகளுக்குப் போராடும் செயல் வீரர்களுக்குக் கூலி கொடுத்து, குட்டி முதலாளியச் சிந்தனையைத் தூண்டி, போராட்ட உணர்வைக் காயடிப்பார்கள் எனத் தன்னார்வக் குழுக்களின் நயவஞ்சகங்களை விவரிப்பார்கள். ஆனால், அரசியல் ஆளுமையின் மீது தன்னம்பிக்கையும் அணிகள் மீது நம்பிக்கையும் இருக்கும் போது, எத்தகைய சக்திகளுடனும் கூட்டு நடவடிக்கையில் இணைந்து தமது அரசியலை நிலைநிறுத்தமுடியும் என்று சவடால் அடிப்பார்கள்.

மார்க்சியத் தத்துவத்திற்கும், மார்க்சிய - லெனினிய அமைப்புகளுக்கும் எதிரான சிந்தனையை விதைத்து, பின் நவீனத்துவம், நுண் அரசியல் கோட்பாடுகளைப் பரப்பி திசை திருப்புவதாகத் தன்னார்வக் குழுக்களை மற்றவர்களுக்கு இனம் காட்டுவார்கள். ஆனால் நுண் அரசியலுக்காக இவர்களின் முன்னாள் சகபாடிகளுடன் கூடிக் குலாவுவார்கள்; அந்தப் பின்நவீனத்துவவாதிகளின் கருத்தரங்குக்குத் தலைமையேற்கவும் ஆளனுப்புவார்கள். இதுதான் "முன்னோடி"களின் இலட்சணம்.

**"பயன்படுவதும் பயன்படுத்துவதும்"**
**— "முன்னோடி"களாக நடிக்கும் பின்னோடிகள்**

பிற அமைப்புகளுடன் கூட்டு நடவடிக்கைக்குப் போவது பற்றி பின்வரும் அவதூறுகளை நம்மீது விமர்சனமாக "முன்னோடி"யினர் வைத்துள்ளனர்:

"கூட்டு நடவடிக்கைகளுக்குச் செல்லவே பயம்; அரசியல் மீதும் அணிகள் மீதும் நம்பிக்கை கிடையாது; மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் மீது அணிகள் சுயமாக முடிவெடுத்து கூட்டு நடவடிக்கைகளுக்குச் செல்லாது, தலைமையிடம் கேட்க வேண்டும் என நிரந்தர பதில் சொல்வது; பெயர்பலகை அமைப்புகளுடன் கூட்டு நடவடிக்கை கிடையாது; முதலாளியக் கட்சிகளுடனும் திரிபுவாதக் கட்சிகளுடனும் கூட்டு நடவடிக்கையை வரவேற்பதாகக் கூறினாலும், இன்று அவர்களுடனும் முடியாது. புரட்சிகர அமைப்புகளோடு மட்டுமே முடியும்; ஆனால் அவர்களுடைய அணுகுமுறையும் சரியில்லை" — இவைதான்.

கூட்டு நடவடிக்கையும் ஐக்கியமும் பற்றியும், இந்த விவகாரங்களில் பிற அமைப்புகள் கடைப்பிடிக்கும் சந்தர்ப்பவாதம் பற்றியும் சில ஆண்டுகளுக்கு முன்பு சிறு பிரசுரம் ஒன்று வெளியிட்டுள்ளோம். அதன்படி, புரட்சிகர அமைப்புகளுக்கிடையே கூட்டு நடவடிக்கைக்குத்தான் முதல் முக்கியத்துவமளிக்க வேண்டும் என்று முடிவு செய்தோம். புரட்சிகர அமைப்புகள் சிறியனவாகவும், பலவீனமாகவும் உள்ள நிலையில், இவை முதலில் தமக்குள் எந்தவொரு கூட்டு நடவடிக்கைக்கும் ஒன்று சேர்ந்து போகும் போதுதான், பிற அமைப்புகளுடன் வலுவான நிலைப்பாட்டை முன் வைத்துப் போராட முடியும். இல்லையானால் தீர்மானிக்கும் சக்தியாக இல்லாமல், முன் முயற்சியை புரட்சிகரமல்லாத அமைப்புகளிடம் இழந்து விடுவோம்.

இதற்கு மாறாக, மு.இ.அ., ம.ஜ.இ.க. ஓடுகாலிகள், செங்கொடிக் குழு போன்றவர்கள் எந்தவொரு பிரச்சினையிலும் பிற குட்டி முதலாளித்துவ குழுக்களுடன் முதலில் ஒரு சுற்றுபேசி, முடிவு செய்து விட்டு, அதன்பின் நடத்தும் 'ஆலோசனை'க் கூட்டங்களுக்கு நமது அமைப்பினரை அழைப்பதுண்டு. அங்கு கூட்டு நடவடிக்கைக்கான பிரச்சினை மீது அரசியல் - கொள்கை ரீதியிலான விவா


படிப்பகம்

www.padippakam.com

தங்கள் எழுப்புவதை, இவர்கள் ''கோஷ்டி'' சேர்ந்து கொண்டு அடாவடியாகத் தடுப்பதே நாம் கண்ட அனுபவம். ''கூடி விட்டோம், விவாதம் தேவையில்லை, ஏதாவது செய்வோம்'' என்பது தான் முடிவாக இருக்கும்.

தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கான அம்பேத்காரிய, பெரியாரிய, ''மண்ணுக்கேற்ற'' மார்க்சிய, தமிழினவாத, திராவிட இனவாத அமைப்புகள் உள்ளன. அவை பெரும்பாலும் பெயர்ப் பலகை அமைப்புகளாகவே உள்ளன. ஒரு தனிநபர், அவரைச் சுற்றி நான்கைந்து பேர்தான் அமைப்பு. அந்தக் குழுக்கள் தாம் அறிவித்த கொள்கைகளுக்கே கூட விசுவாசமாக இருந்து மக்களைத் திரட்டுவது கிடையாது. சென்னை போன்ற பெரு நகரங்களிலேயே கூட இந்த அமைப்புகளின் தனித்த, அல்லது 30, 40 அமைப்புகளின் கூட்டு நிகழ்ச்சிகளிலே கூட அதிகபட்சம் 60 பேருக்கு மேல் திரண்டதில்லை; எல்லா நிகழ்ச்சிகளிலும் பார்க்கும் அதே முகங்கள். கூட்டு நடவடிக்கைகளுக்கு ஒப்புக் கொண்டு கையொப்பமிடும் அமைப்பின் பிரதிநிதிகள் கூட கலந்து கொள்வதில்லை. சுயவிளம்பரத்துக்காகவும், பிழைப்புவாதத்திற்காகவும் அமைப்புகளை வைத்துக் கொண்டு, கூட்டு நடவடிக்கைகளைப் பயன்படுத்திக் கொண்ட அத்தகைய குழுக்கள் புதிது புதிதாகத் தோன்றுவதும் மறைவதுமாக உள்ளன.

''முன்னோடி''களோடு கூட கூட்டு நடவடிக்கைகள் வைத்துக் கொண்ட அமைப்புக்கள் - நபர்கள், அவர்கள் இணைந்து உருவாக்கிய கூட்டமைப்புகள் பலவும் இப்போது எங்கே உள்ளன? குறிப்பிட்ட பிரச்சினைக்காக ஏற்பட்ட கூட்டமைப்புகள் அதோடு கலைந்து விட்டன என்று கூறி மழுப்புகிறார்கள். கருத்துரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்பு போன்றவை தமது நோக்கத்தை அடைந்துவிட்டா கலைந்தன? இல்லை; அவ்வப்போது பெய்யும் மழைக்குக் காளான்களாகத் தோன்றி மறைந்தன.

''முன்னோடி''யினர் கதைப்பதைப் போல, இந்தப் பெயர்ப் பலகை அமைப்புகளின் வர்க்கத் தன்மையையும் அரசியல் நிலைப்பாடுகளையும் நாம் மதிப்பிடாமல் இல்லை. இவை குட்டி முதலாளியப் பிழைப்புவாதக் குழுக்கள்.

''பு.ஜ.வின் கூட்டு நடவடிக்கைக்கு லாபநட்டக் கணக்குதான் அடிப்படை'' என்கிறது, முன்னோடி! ஆம்! அதில் என்ன தவறு! எந்தப் பிரச்சினைக்காகக் கூட்டு நடவடிக்கைக்குப் போகிறோம்? அதற்கு உண்மையான பலம் சேர்க்கத்தானே? அந்தப் பிரச்சினை மீது அக்கறையின்றி, பிழைப்புவாத நோக்கோடு சேரும் குழுக்கள், அதற்குப் பலம் சேர்ப்பதில்லை; அதற்கான ஆள்பலமும் இல்லாத போது, கூட்டு நடவடிக்கை என்பது நமது சக்தியை வீணடிக்கிறது என்று லாபநட்டக் கணக்குப் பார்ப்பதில் என்ன தவறு?

ஆனால் ''முன்னோடி''களுக்கு இந்தக் கணக்கெல்லாம் தேவையில்லைதான்! தலைமையிடமிருந்து ஆள், நிதி உதவி பெற்றுக் கொண்டு, தாமும் இயக்கம் நடத்துவதாகக் காட்டும் கணக்கு இருந்தாலே போதும்!

மேற்கண்டவாறான பெயர்ப்பலகை அமைப்புகளைவிட, மக்கள் திரள் தன்மையுள்ள முதலாளியக் கட்சிகள், திரிபுவாதக் கட்சிகளுடன் கூட்டு நடவடிக்கை என்பது குறிப்பிட்ட நோக்கத்திற்கு பலம் சேர்ப்பதாக அமையும்; புரட்சிகர அமைப்புகளையும் இத்தகைய கட்சிகளையும் மக்கள் வேறுபடுத்திப் புரிந்து கொள்வதும் எளிதானது, சாத்தியமானது.

மேலும், அரசியல் என்றால் என்னவென்றே தெரியாத நிலையிலும், தமது ''அரசியல்'' மீது நம்பிக்கை இருப்பதாக மீண்டும் மீண்டும் பீற்றிக் கொள்ளும் இந்த ''முன்னோடி''கள் கடந்த 17 ஆண்டுகளாகப் புரிந்து கொள்ள மறுக்கும் அரசியல் விசயம் இதில் உள்ளது. மார்க்சிய - லெனினிய போர்த் தந்திரத்தின் (அவர்கள் மொழியில் மூலஉத்தியின்) முக்கிய அம்சம் தாக்குதல் திசைவழியாகும். அதாவது புரட்சியின் சமரச, ஊசலாட்ட சக்திகளைத் தனிமைப்படுத்துவதாகும். ஆகவே சமரச, ஊசலாட்ட வர்க்கங்களின் அரசியல் பிரதிநிதிகளாக உள்ள முதலாளியக் கட்சிகளுடனும், திரிபுவாதக் கட்சிகளுடனும் கூட்டு நடவடிக்கைக்குப் போவது இந்த நோக்கத்தை நிறைவேற்றுகிறது.



கூட்டு நடவடிக்கைகள் என்ற பெயரில் ''முன்னோடி''கள் நடத்தும் கேலிக் கூத்தில் நமது அணிகள் பங்கேற்க மறுப்பதால், ஆத்திரத்தில் பிதற்றும் வகையில் நமது அணிகள் மீது தலைமைக்கு நம்பிக்கையில்லை, அணிகளும் சுயமாக முடிவெடுக்காமல் ''தலைமையிடம் கேட்க வேண்டும்'' என்று நிரந்தரப் பதிலளிப்பதாகக் கூறுகின்றனர். ''முன்னோடி''கள் புளுகுவதைப் போல அன்றாடப் பிரச்சினைகளில் மட்டுமல்ல, சர்வதேசப் பெண்கள் தினம், நக்சல்பாரி எழுச்சிநாள், எலிசபெத் ராணி வருகை, பெரு - நேபாளப் புரட்சியாளர்களுக்கு ஆதரவு, சாதி - சமத்துவ மாநாடு என மைய ரீதியிலான பிரச்சினைகளுக்கும் தங்கள் வசதிக்கேற்ற பகுதிகளில் மட்டும் கூட்டு நடவடிக்கைக்கு அழைப்பதை ஒரு வாடிக்கையாக வைத்திருக்கிறார்கள்.

புரட்சிகர அமைப்பு, தகுதியான அமைப்பு என்கிற முறையில் அல்லாது, எந்த வித யோக்கியதையும் இல்லாத அமைப்புகளையும் இழுத்து வரும் அணுகுமுறை வைத்தனர். கூட்டு நடவடிக்கை மட்டுமல்லாது, ''முன்னோடி''களின் இயக்க நடவடிக்கைகள் (பேருந்துகளைக் கொளுத்துவது, கூட்டத்தில் இருந்து கொண்டு கல்லெறிவது, வங்கி நடவடிக்கை, பேரணியில் தமது கட்சி முழக்கங்கள் போடுவது, ஏற்றுக்கொள்ளும் பணிகளையேகூடச் செய்யாது, பெயருக்கு மட்டும் பங்கேற்பது) மீதான மதிப்பீடு அடிப்படையில், ''முன்னோடி''களுடன் கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்று அமைப்பு ரீதியான முடிவெடுத்தோம்.

இதைப் பலமுறை தெரிவித்தும், கூட்டு நடவடிக்கைக்கு அணிகளிடம் அணுகுவதும், 2, 3 பேர் இரயில் மறியல், பேருந்து எரிப்பு போன்ற ''சாகசங்களை'' நடத்தி விட்டு அமைப்பு உதவி கேட்டு வருவதும் வழக்கமாக வைத்திருக்கும் போது வேறெப்படிப் பதில் சொல்ல முடியும்! கூட்டு நடவடிக்கைகளுக்கு சுயமாக முடிவெடுத்து அணுகுபவர்களும் ''முன்னோடி''களின் அணிகள் அல்ல; அவர்களுடைய அமைப்பின் சுற்றிவரும் தூதர்கள்தாம்!

மேலும் முன்னோடிகளைப் போல அவ்வப்போது எழும் பிரச்சினைகள் மீது கூட்டு நடவடிக்கைகள் எடுப்பதையே ''அரசியல்'' பணியாக நாம் கொண்டிருக்கவில்லை. குறிப்பிட்ட காலகட்டம் முழுவதற்குமான அரசியல் இயக்கத்துக்கான திட்டம் வகுத்துக் கொண்டு அமைப்பு முழுவதும் ஈடுபடுகிறது. மற்றவர்கள் இழுத்த இழுப்புக்கோ, மற்ற அமைப்புகளின் திட்டத்துக்கோ நமது அமைப்பு செயல்படமுடியாது. ஆகவே, பயம் - அச்சம், நம்பிக்கையின்மை, வறட்டுத்தனம், குறுங்குழுவாதம், மலட்டுத்தனம் என்கிற வசவுகளால் நமது புரட்சிப் பாதையைத் திசை திருப்பிவிட முடியாது.

திருப்பூரில் பா.ம.க:வினைரையும், செங்கல்பட்டில் விடுதலை சிறுத்தையினரையும் பயன்படுத்தி நாம் பொதுக் கூட்டங்கள் நடத்தியது குறித்து குறை கூறுகின்றனர். ஆம். ஒவ்வொரு முறை மைய இயக்கங்கள் எடுக்கும்போதும், அரசியல் பிரச்சாரத்திற்காக திருத்தணி முதல் குமரிவரை, கோவை முதல் நாகை வரை நமது மையக் கலைக்குழு பல ஊர்களிலும் பொதுக் கூட்டங்களையும் கலை நிகழ்ச்சிகளையும் நடத்தி மக்கள் பேராதரவைத் திரட்டி வருகிறது. பிற அமைப்புகளின் கருத்துக்களையும் சேர்த்து முன்வைக்கும் மேடையாக அல்லாது, புரட்சிகர இயக்கக் கருத்தை மட்டுமே பிரச்சாரம் செய்வதற்காக மேடை அமைத்துக் கொடுக்கும் பொது மக்கள், தனிநபர்களின் ஆதரவை பெறுவதில் என்ன தவறு!

குறிப்பாக நமது கருவறை நுழைவு இயக்கத்தின் சரியான முழக்கத்தினை தி.மு.க. கூட ஏற்று, ஆதரித்து பல கட்டுரைகளும் தலையங்கங்களும் தீட்டின. அது போன்று ஒவ்வொரு இயக்கத்துக்கும் அவர்களாகவே முன்வருகின்றனர். இது நமது அரசியலுக்கு கிடைத்துள்ள வெற்றி இல்லையா! இந்த அடிப்படையில்தான் பெரியார் தி.க., திருவையாறு போராட்டத்தைப் பாராட்டிய விழாவும் ஏற்கப்பட்டது. இதன் பொருள் அந்தக் கட்சிகளின் கொள்கை பற்றிய நமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டோம், ஏற்றுக் கொண்டோம் என்றாகாது.

தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

# இராஜஸ்தான்: தலைவிரித்தாடும் பாலியல் வன்முறை

கடந்த செப்டம்பர் 5-ம் தேதி இராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரிலுள்ள இராஜஸ்தான் பல்கலைக் கழக வளாகத்தில் நடந்த கும்பல் பாலியல் வன்முறையால் இராஜஸ்தான் மாநிலமே கொந்தளித்துப் போயுள்ளது. தெரு முனைகள், டீக்கடைகள், பேருந்து நிறுத்தங்கள் என எல்லா இடங்களிலும் இக்கொடுமை பற்றியே மக்களிடம் பேச்சாயிருந்தது.

செப்டம்பர் 7 மற்றும் 9 தேதிகளில் சட்டமன்றமே செயலிழந்து போனது. செப்டம்பர் 7-ல் ஜெய்ப்பூர் நகரில் முழு கடையடைப்பு, வேலை நிறுத்தம் நடந்தது. போக்குவரத்தை மாணவர்கள் பல இடங்களில் தடுத்து, பேருந்துகள் மீது கல்வீசித் தாக்கினர். இராஜஸ்தான் பல்கலைக் கழக மாணவர் சங்கத் தலைவர் சியாம் சர்மா பதவி விலகினார்.

நடந்த கொடுமை இதுதான். 25 வயது பெண் ஜெய்ப்பூரிலுள்ள கோபல்பூர் பேருந்து நிறுத்தத்தில் பேருந்துக்காக காத்திருக்கிறார். சந்தீப் தாஹியா என்கிற மாணவர் அவரைப் பார்த்து மிரட்டி, தனது இரு சக்கர வாகனத்தில் ஏற்றி, இராஜஸ்தான் பல்கலைக் கழக வளாத்திலுள்ள ஜே.சி. போஸ் மாணவர் விடுதிக்குக் கொண்டு செல்கிறான்.

அங்கு 7 பேர் சேர்ந்து அப்பெண்ணை கும்பல் பாலியல் வன்முறைக்கு ஆளாக்குகின்றனர். அறைக்கு வெளியே பத்து, இருபது மாணவர்கள் கூடி வெறியேற்றுகின்றனர். அப்பெண்ணிடமிருந்த சம்பள பணம் ரூ. 2000/= ஐயும் அம்மிருகங்கள் பறித்துக் கொண்டன. அதோடு மட்டுமின்றி திரும்பவும் இது நடக்கும் என மிரட்டுகின்றன.

கையில் பைசா இல்லாத நிலையில் விடுதிக் காப்பாளரான பல்கலைக் கழக ஆசிரியரிடம் சென்று உதவி கேட்கிறார் அந்த அபலைப் பெண். ஈவிரக்கமற்ற அவன் உதவ மறுக்கவே வேறு வழியின்றி நடக்க முடியாத நிலையிலும் 3 கி.மீ. நடந்து அருகிலுள்ள காவல் நிலையத்தில் முறையிடுகிறார்.

கௌரவமிக்க பத்திரிக்கையாளரின் மகளான அப்பெண், ஜாட்சாதி மாணவர் விடுதிக்கு எதிரே உள்ள வீட்டில் பெற்றோருடன் வளர்ந்து வந்தாள். அப்போது ஓம் பிஜார்னியம் என்னும் மாணவனுடன் பழகி, அது காதலாக மலர்ந்தது. அந்த ஓம் மிருகமோ அவளை மணப்பதாக வாக்குறுதி தந்து, எல்லை மீறினான். அதன் பின் தனது நண்பர்களுக்கும் அவளை இரையாக்கினான்.

அதன் பின் கடந்த ஏழு ஆண்டுகளாக இதை வைத்து மிரட்டி அம் மாணவ மிருகங்கள் அப்பெண்ணை தொடர்ந்து கும்பல் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியுள்ளன. தற்போது இனியும் தாங்க முடியாது என்ற நிலையில்தான் அப்பெண் காவல் நிலையத்தில் முறையிட்டார். இதற்கு முன் மிரட்டி பாலியல் வன்முறை செய்த மேலும் 11 பேர் மீதும் காவல் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

பாலியல் வன்முறை செய்த ஏழு பேரில் ஒருவன் மாநில அமைச்சரின் நெருங்கிய உறவினன். மற்றொருவன் பரத் பூஷன் பரீக் என்ற வழக்கறிஞன். இன்னொருவன் பயிற்சியிலுள்ள காவல் நிலைய அதிகாரி. பிறர் மாணவர் தலைவர்கள். இக்கட்டுரை அச்சாகும்வரை இதில் இரண்டு பேர் மட்டுமே கைதாகியுள்ளனர். தலைமறைவாயுள்ள பிறரால் அப்பெண்ணின் குடும்பத்திற்கு ஆபத்து வரலாம் என்பதாலேயே அவரது விவரங்கள் இரகசியமாக பாதுகாக்கப்படுகிறது.

மக்கள் கொந்தளிப்புக்கு முக்கிய காரணம் அங்கு பெண்கள் மீது தொடர்ந்து நடைபெற்று வரும் தாக்குதல்களும் பாலியல் வன்முறைகளும் தான்.

- 1992-ல் பன்வாரி தேவி 5 மேல்சாதி வெறியர்களால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டார். இளம் வயது திருமணத்தை தடுத்து நிறுத்தியதுதான் இச் சமூக சேவகி செய்த 'குற்றம்'. மாவட்ட நீதிமன்றமோ மேல் சாதியினர் இதைச் செய்ய மாட்டார்கள் என குற்றவாளிகளை விடுவித்தது. வழக்கு உயர்நீதி மன்றத்திலுள்ளது.
- 1993-ல் ஆஜ்மீரில் ஒரு கும்பல் பெண்களை மயக்கி, நிர்வாணப் படமெடுத்து, தொடர்ந்து அதை வைத்து மிரட்டி பாலியல் வன்முறை செய்து வந்தது. பாதிக்கப்பட்ட பெண்கள் 60 பேர். வழக்கு சிறப்பு நீதி மன்றத்திலுள்ளது. குற்றவாளிகள் இன்னும் தண்டிக்கப்படவில்லை.
- 1995-ல் நேத்ரி தேவி நான்கு பேரால் கும்பல் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டார். நால்வரும் கைதாயினும் வழக்கு நிலுவையிலுள்ளது.
- 1996-ல் ஆல்வார் நகர பள்ளி ஆசிரியர் ரச்னா குப்தா, பா.ஜ.க. தலைவர்கள் பலரால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டார். பா.ஜ. கட்சிக்காரரான இவரது பள்ளி முதல்வரும் அவளது கணவரும், மற்றும் ஆறு பேரும் ரச்னாவை மிரட்டிப் பணிய வைத்தனர். இதுவரை பா.ஜ.க.வினர் யாரும் கைதாகவில்லை. வழக்கு மட்டும் பதிந்துள்ளனர்.
- பா.ஜ. கட்சியில் செல்வாக்குள்ள நால்வர் 1996-ல் மைனா நாயக் என்ற பெண்ணை நிர்வாணமாக்கி, படமெடுத்து அதை வைத்து மிரட்டியே அவரை பாலியல் வன்முறைக்கு ஆளாக்கினர். வழக்கு மட்டும் பதிவாகியுள்ளது.
- 1996-ல் தாபுபாய் மீனா என்பவரை ஒன்பது பேர் கும்பல் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கினர். மீனாவின் பாலுறுப்பை சேதப்படுத்தி, தடயத்தையும் அழிக்க முயன்றனர். அம்மிருகங்கள் தற்போது பிணையில் வெளி வந்து விட்டன. வழக்கு மட்டுமே பதிவாகியுள்ளது.
- கடந்த ஜூன் 1997-ல் அரசியல் செல்வாக்

**இராசஸ்தான் பல்கலைக்கழக மாணவர் விடுதியில் நடந்த கும்பல் பாலியல் வன்முறையை எதிர்த்துப் போராடும் பெண்கள்.**





படிப்பகம்

www.padippakam.com

குள்ள நான்கு இளைஞர்கள் சிவானி ஜடேஜா என்ற பள்ளிச் சிறுமியின் முகத்தில் திராவ்கம் வீசி கோரப்படுத்தினர். இரு கொலைகாரர்களின் சாதியத் தலைவர்களின் பயமுறுத்தலால் மற்ற இருவர் மீது மட்டும் புகார் செய்தார் சிவானியின் தந்தை. வழக்கு பதிவாகியுள்ளது.

• ஜூலை 1997-ல் ஷாலினி தன்வர் என்ற இளம் பெண் மும்முறை கடத்தப்பட்டு கும்பல் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டார். இருவர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டில் தொடரும் அடுத்தடுத்த கும்பல் பாலியல் வன்முறையால் மக்கள் அனைவரும் ஆவேசமடைந்தனர். இராஜஸ்தான் பல்கலைக்கழக மாணவர் விடுதியில் பாலியல் வன்முறைக்கு ஆளான பெண்ணுக்கு ஆதரவாக மாநிலம் முழுவதும் தொடர்ந்து ஒரு வாரம் ஆர்ப்பாட்டமும், தொடர் முழக்கப் போராட்டங்களும் நடந்தன.

உள்துறை அமைச்சர் கைலாஷ் மெகாவல் பெண்களால் கெரோ செய்யப்பட்டார். அவருக்கு வளையல் மாட்டிவிட முயன்றனர்.

மாநிலம் முழுதும் உள்ள மக்களின் கோபாவேசத்திற்குப் பணிந்தே நடவடிக்கை சற்று வேகமானது.

குற்றவாளிகள் ஜாட் சாதியினர் என்பதால் அச்சாதி எம்.எல்.ஏக்கள் கட்சி கடந்து குற்றவாளிகளைக் காக்க முயன்றனர். காங்கிரசு எம்.எல்.ஏ. ஜக்தீப் தங்கர், ''அப்பெண் சம்மதித்தே சம்பவம் நடந்துள்ளது; எனவே பாலியல் வன்முறையில்லை'' என கூச்ச நாச்சமின்றி சட்டமன்றத்திலேயே வாதிட்டார். இன்னொரு பா.ஜ.க. பெண் எம்.எல்.ஏ.வோ ஒரு படி மேலே போய் 'ஏழு ஆண்டுகள் அப்பெண் மௌனமாயிருந்ததால் அவரும் குற்றத்திற்கு உடந்தை தான்' எனப் பேசி வாங்கிக் கட்டிக் கொண்டார்.

முதல்வர் ஷெகாவத்தோ, சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டு பிரச்சினையை 6 மாதம் தள்ளிப் போடுவதோடு கை கழுவி விடவும் முயன்றார். ஆனால் மூத்த வழக்கறிஞர்களால் அது முறியடிக்கப்பட்டது. உயர் நீதி மன்றமே வழக்கை கண்காணிப்பது என ஏற்றுக் கொண்டுள்ளது.

இராஜஸ்தான் மாநிலத்தில் பெண்கள் மீதான தாக்குதல்களும் பாலியல் வன்முறைகளும் எல்லை மீறிப் போகின்றன. இதில் நீதிபதிகள் ஆணாதிக்க வெறியுடன் செயல்படுகின்றனர். தவிர காவல் நிலைய காக்கிச் சட்டை கயவர்கள் குற்றவாளிகளைத் தண்டிக்க தக்க நடவடிக்கை எடுப்பதில்லை.

ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகள், அவர்களின் வாரிசுகள், காவல் துறையினர், உயர் அதிகாரிகள், சாதியத் தலைவர்கள் என சமூகத்து மேட்டுக் குடியினர்தான் குற்றவாளிகள். அவர்களுக்காக உள்ள இந்த அரசு, பின் யாருக்காக வாதாடும்?

பதிவான பாலியல் வன்முறை வழக்குகள் 100-ல் 6 வழக்கில் மட்டுமே குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதாக புள்ளி விவரம் கூறுகிறது. பல வழக்குகள் விசாரணைக்கே வருவதில்லை.

• முத்து

# காமுகர்களுக்கு எதிராகத் திரண்டெழுந்த பஞ்சாப் மக்கள்

பஞ்சாபில் நடந்த கும்பல் பாலியல் வன்முறையைக் கேட்கையில் நெஞ்சம் பதறுகிறது.

சாங்ரூர் மாவட்டத்திலுள்ள மெகல்கலன் என்ற சிறுநகரம். அங்கு 11-வது பயிலும் பள்ளிச் சிறுமி கிரண்ஜித் கவுர். அந்த வட்டார அகாலிதளம் கட்சித் தலைவரின் மகன் அப்பெண்ணையே சுற்றி வருகிறான். அப்பெண்ணோ அவனைப் புறக்கணித்து விடுகிறார். ஆத்திரமுற்ற அப்பொறுக்கி, தனது சகாக்கள் 6 பேரைச் சேர்த்துக் கொண்டு பள்ளி சென்று சைக்கிளில் திரும்பிய கிரண்ஜித் கவுரை சுற்றி வளைத்து தாக்கி, ஒரு போராட்டத்துக்குப் பின் கடத்திச் செல்கிறான். 7 பேரும் கும்பலாக பாலியல் வன்முறை செய்து கொலை செய்து உடலை மறைத்து விடுகின்றனர்.

மகளைக் காணாத தந்தை தர்சண் சிங் தேடியலைந்து கிரண்ஜித் கவுரின் சைக்கிளையும், உள்ளாடையையும் கண்டெடுத்து காவல் துறையில் முறையிடுகிறார். காவல் துறையோ வழக்கைப் பதிவு செய்யவே மறுக்கிறது. உள்ளூர் மக்கள் காவல் நிலையத்தை முற்றுகையிட்டு போராடவே, வேறு வழியின்றி ஒரு வாரத்திற்குப் பின் வழக்கு பதிவு செய்தனர்.

சாங்ரூர் தொகுதி அகாலிதளம் எம்.எல்.ஏ. இப்பிரச்சினையை எடுக்க மறுத்த பின், மக்களே திரண்டு கிரண்ஜித் கவுர் நடவடிக்கை குழு என அமைத்து போராடினர். வழக்கு பதிந்த ஒரு வாரம் கழித்தே கிரண்ஜித்தின் உடல் கண்டெடுக்கப்பட்டது. மற்ற பிற தடயங்களை போலீசு மறைத்ததை மக்கள் அம்பலமாக்கினர்.

ஆகஸ்ட் 20-ம் தேதி கிரண்ஜித் சாவுக்கான இரங்கல் கூட்டத்திற்கு ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் திரண்டனர். பிரார்த்தனைக்குப் பின் அகாலிதள அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டமாக அது மாறியது.

இன்றைக்கும் குற்றவாளிகளுக்கு ஆதரவாக சில அமைச்சர்கள் செயல்படுகின்றனர். அவர்கள் மீதும் வழக்கு பதிய வேண்டுமென மக்கள் போராடி வருகின்றனர்.

மக்கள் கிரண்ஜித் வழக்கை சி.பி.ஐ.யிடம் ஒப்படைக்கக் கோரிய மறுநாள், அமிர்தசரஸ் மாவட்டத்தில் பக்கா பிண்ட் கிராமத்தில் மேல்சாதி வெறியர்கள் 14 வயது தாழ்த்தப்பட்ட சாதி பெண்ணை நிர்வாணமாக்கி, ஊரைச் சுற்றி ஊர்வலம் விட்டனர்.

இச்சம்பவங்கள் பஞ்சாபில் பெருகிவரும் பாலியல் வன்முறைகளை அம்பலப்படுத்துகின்றன.

# சென்னை தீ விபத்து நிவாரணம் கேட்டவர்கள் மீது கொலை வழக்கு

கடந்த ஐந்து மாதங்களில் சென்னையில் பத்து குடிசைப் பகுதிகளில் பெரும் தீ விபத்துகள் ஏற்பட்டு உயிர்ச் சேதமும், பெருமளவில் பொருள் இழப்பும் ஏற்பட்டுள்ளன.

இதில் பெரும் இழப்பு கீழ்ப்பாக்கம் மருத்துவமனை அருகிலுள்ள சாஸ்திரி நகரில் ஏற்பட்ட தீ விபத்தில் தான். 22.8.97 அன்று பிற்பகல் 1.50 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது. ஆனால் சாஸ்திரி நகருக்கு எதிர்ப்புறம் உள்ள தீயணைப்பு நிலையத்தில் இருந்து மூன்று மணி நேரம் கழித்தே தீயணைப்பு வண்டிகள் வந்தன. மூன்று பெண்கள் உட்பட 5 பேர் தீயில் வெந்து இறந்தனர். 700 குடிசைகள் சாம்பலாயின. லட்சக்கணக்கான மதிப்புள்ள பொருட்கள் சாம்பலாகி மண்ணோடு கலந்தன.

இதனால் ஆத்திரமுற்ற மக்கள் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள கீழ்ப்பாக்கம் காவல் நிலையம், எதிரே சுமார் 5 மணி நேரத்திற்கு மேல் சாலை மறியலில் ஈடுபட்டனர். பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாறாக காவல் துறை உதவி ஆணையாளர் ராதாகிருஷ்ணன் தலைமையில் 300 போலீசார் மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமாகப் பாய்ந்து அடித்து நொறுக்கி, தீ விபத்து பகுதிக்குள்ளேயே துரத்தினர்.

தடியடியில் பரமானந்தம், பரமசிவம் இருவரும் படுகாயமுற்று, உயிருக்கு ஆபத்தான நிலையில் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் உள்ளனர்.

இதற்குப் பின் கண்துடைப்புக்காக அமைச்சர் ஆற்காடு வீராச்சாமி வந்து, உடனே ஓடிவிட்டார். மறுநாள் மதியம் 1 மணிக்கு மாநகரத் 'தந்தை' ஸ்டாலின் இதே போல வந்து ஓடினார். அதன் பிறகு நடந்த பார்டர் தோட்டம் பகுதி தீவிபத்தில் மக்கள் அடிக்காத குறையாக ஸ்டாலினை விரட்டினர்.

மக்களுக்கு கட்டத் துணியில்லை, தண்ணீர் குடிக்கக் கூட பாத்திரமில்லை, பள்ளிக் குழந்தைகளின் நோட்டுப் புத்தகங்கள், குடும்ப ரேசன் அட்டை, பட்டா - சாதிச் சான்றிதழ்கள், மின்சார இணைப்புகள் என அனைத்தும் சாம்பலாகி விட்டன.

இவை எதையும் சரி செய்ய வக்கற்ற இந்த அரசு அப்பாவிகள் 10 பேரைப் பிடித்து, கொலை செய்ய முயன்றதாக பொய் வழக்குப் போட்டு, பிணையில் கூட வெளிவர இயலாதவாறு சிறையிலடைத்துள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கக் கோரியும் இழந்த பொருட்களுக்கு மாற்று வழங்கும்படியும், பொய் வழக்கை திரும்பப் பெறக் கோரியும் அன்றே ம.க.இ.க. சார்பில் சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டன.

தகவல் :
ம.க.இ.க., சென்னை



படிப்பகம்


www.padippakam.com

# தனியார்மயப் 'புரட்சி' சீனப் போலிகளின் நாடகம்

சீனாவின் போலி கம்யூனிசப் பேரரசராகத் திகழ்ந்த டெங் ஷியாவோ பிங்கின் சாவுக்குப் பிறகு, அவரது சீடர்கள் சீனப் போலி கம்யூனிஸ்ட் கட்சியின் 15-வது தேசிய மாநாட்டை அண்மையில் நடத்தி முடித்துள்ளனர். டெங் தொடங்கி வைத்த முதலாளித்துவ மீட்சிப் பாதையில் நாலு கால் பாய்ச்சலில் முன்னேறும் தீர்மானத்துடன், அரசுத் துறை நிறுவனங்களை தனியார்மயமாக்கப் போவதாக பகிரங்கமாக அறிவித்துள்ளனர். "இடதுபுறம் கைகாட்டிக் கொண்டே வலதுபுறம் வாகனத்தைத் திருப்பும் கோமாளித்தனமான செயல்" என்று முதலாளித்துவப் பத்திரிகைகளே பரிகசிக்கும் அளவுக்கு, சீனப் போலிக் கம்யூனிசத் துரோகிகளின் சந்தர்ப்பவாத பித்தலாட்டங்கள் உலகெங்கும் நாறிப் போயுள்ளன.

"சீனாவின் சிறப்புத் தன்மைகளுக்கேற்ற சோசலிசம்" என்ற பெயரில் ஏறத்தாழ 4 லட்சம் அரசுத் துறை நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்யப் போவதாக சீனாவின் அதிபரும், கட்சியின் பொதுச் செயலாளருமான ஜியாங் ஜெமின் அறிவித்துள்ளார். அரசுத் துறை நிறுவனங்களைக் கூட்டுப் பங்கு நிறுவனங்களாக, பங்குதாரர்களைக் கொண்டதாக மாற்றுவது அல்லது அதன் சொத்துக்களை விற்பது என்று தனியார்மயத்துக்கு சிவப்புக் கம்பளம் விரித்துள்ளார். "சீனாவில் சோசலிசம் ஆரம்ப நிலையில் உள்ளது; அது இறுதி வெற்றியைச் சாதிக்க பல்லாண்டுகள் பிடிக்கும்; அந்நிய தொழில் நுட்பத்தின், அந்நியக் கலாச்சாரத்தின் ருசிமிக்க பழங்களை சீன சோசலிசம் கிரகிப்பதில் தவறேதுமில்லை" என்று இதற்கு சித்தாந்த விளக்கமும் அளித்துள்ளனர்.

சீனாவில் அரசுத் துறை நிறுவனங்களே நகர்ப்புற வேலை வாய்ப்பில் மூன்றில் இரு பங்கை வகிக்கின்றன. நாட்டின் சொத்து மதிப்பில் ஏறத்தாழ 50%-க்கு மேலாக அரசுத் துறை நிறுவனங்களே அங்கம் வகிக்கின்றன. இந்நிறுவனங்கள் தனியார் - அந்நியமயமாக்கப்பட்டால் இவற்றில் பணியாற்றும் 10 கோடி தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு பறிபோகும். மேலும், இத்தொழிலாளர்கள் இதுவரை அனுபவித்து வந்த மருத்துவம், ரேஷன், குடியிருப்பு, குழந்தைநலம், கல்வி வசதி முதலான அனைத்து சலுகைகளும் தனியார்மயமாக்கலினால் பறிக்கப்படும். அரசு தனது சமூகப் பொறுப்புகளைக் கைவிடுவதையே ஜியாங் தனது மாநாட்டு உரையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.




ஏற்கனவே டெங் காலத்தில், சோசலிசக் கூட்டுப் பண்ணைகளை உடைத்து தனியார்மயமாக்கியதன் விளைவாக, 2 கோடிக்கும் மேலான விவசாயிகள் வேலையிழந்து நகரங்களில் குவிந்துள்ளனர். இதோடு, நகர்ப்புற வேலையின்மையும் சேர்ந்து ஏற்கனவே சிறியதும் பெரியதுமான பல தொழிலாளர் போராட்டங்கள் நடந்துள்ளன. தற்போது அரசுத்துறை நிறுவனங்களும் தனியார்மயமாக்கப்படுவதன் விளைவாக தொழிலாளர் போராட்டங்கள் மேலும் தீவிரமடையவே செய்யும். ஆளும் போலி கம்யூனிசத் துரோகிகள் இவற்றைக் கடுமையாக ஒடுக்கத் தயங்க மாட்டார்கள்.

ஏனெனில் நாட்டின் அதிபர், கட்சியின் பொதுச்செயலாளர் பதவியோடு இராணுவக் கமிஷனின் தலைவர் பதவியையும் ஜியாங் கைப்பற்றிக் கொண்டுள்ளார். இதுதவிர, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பதவியை மீண்டும் உருவாக்கி, அதை தானே அடையவும் முயற்சித்து வருகிறார். இம்மாநாட்டில் எதிர்ப்பாளர்களை ஓரங்கட்டியிருப்பதும், அவரது விசுவாச ஷாங்காய் கும்பலை முக்கிய பதவிகளில் அமர்த்தியிருப்பதும், அரசியல் தலைமைக் குழு தேர்வின் போது ஓட்டுக் கட்சிகளின் வழியில் பேரங்கள் - சமரசங்கள் நடத்தியிருப்பதும் பெயரளவிலான ஜனநாயக முறையையும் ஜியாங் கும்பல் ஒழித்துக் கட்டி விட்டதை நிரூபித்துக் காட்டுகின்றன.

இத்தனைக்கும் பிறகும், "இதுவும் சோசலிசம் தான்!" என்று இந்தியப் போலிக் கம்யூனிஸ்டுகள் தமது கட்சி அணிகளையும் மக்களையும் ஏய்க்கக் கிளம்பிவிட்டனர். "ஜியாங்கின் கொள்கைகள் இடதுசாரி சிந்தனையின் புதிய புறப்பாடு; எதார்த்த நிலைமைக்கேற்ற மாற்றங்கள்; இன்றைய உலகில் சந்தைப் பொருளாதாரத்தை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. லெனின் கூட இத்தகைய கொள்கையை ஏற்றுள்ளார்" என்று துதிபாடுகிறார், வலது கம்யூனிஸ்ட் கட்சியின் எம்.பி.யான குருதாஸ் தாஸ்குப்தா. "ஆட்சியதிகாரம் கம்யூனிஸ்டுகளிடம் உள்ள நிலையில், நாட்டின் முன்னேற்றத்துக்காக அவசியமான துறைகளில் தனியார்மயமாக்குவதில் தவறில்லை" என்று நியாயவாதங்களை அடுக்குகிறார், 'மார்க்சிஸ்டு' தொழிற்சங்கமான சி.ஐ.டி.யு.வின் பொதுச் செயலாளர் சிட்டப் பிரதா மசும்தார்.

"தனியார்மயமாக்கலை முறியடிப்போம்; அரசுத் துறையைப் பாதுகாப்போம்!" என்று தொழிலாளர்களைத் திரட்டிப் போராட்டம் நடத்தி சவடால் அடிக்கும் இப்போலிகள் தான், இப்போது தனியார்மயமாக்கலும் சரியானதுதான் என்று வெட்கமின்றி பேசுகிறார்கள். மன்மோகன் சிங்கும் சிதம்பரமும் அரசுத் துறை நிறுவனங்களை ஒழித்துக் கட்டினால் அது தொழிலாளர் விரோதமானது; அதே கொள்கையை சீனாவில் செயல்படுத்தினால் அது தொழிலாளருக்கும் நாட்டுக்கும் சாதகமானது என்பதுதான் இப்போலிகளின் பித்தலாட்டக் கொள்கை. தனியார்மய - தாராளமயக் கொள்கையை முதலாளித்துவ அரசுகள் பின்பற்றினால் அது பிற்போக்கு; அதையே போலி சோசலிச அரசுகள் செயல்படுத்தினால் அது முற்போக்கு என்பதே இந்தியப் போலிக் கம்யூனிசத் துரோகிகளின் சந்தர்ப்பவாதக் கொள்கையாகி விட்டது.

• மனோகரன்


படிப்பகம்

www.padippakam.com

# ஜெர்மனியின் மூளைச் சுரண்டல்

இன்றைக்கு ஜெர்மனியில் வேலையற்றோர் எண்ணிக்கை சுமார் 40 லட்சம் பேர். நவீனமயமாக்கலே இதற்கு முக்கிய காரணம். மேலும், வளர்ந்து வரும் நாடுகளில் குறைந்த கூலிக்கு நவீன தொழில் நுட்ப அறிவுடைய தொழிலாளர்களும் குறைந்த விலையில் மூலப்பொருட்களும் கிடைப்பதால் தேசங் கடந்த தொழில் கழகங்கள் தமது நிறுவனங்களை இந்த நாடுகளில் நிறுவி, தமது சுரண்டலைத் தொடர்கின்றன.

இந்நிலையில் ஜெர்மனியிலிருந்து வெளிவரும் 'பில்ட்-சி சைய்டுங்' மே 11, 1997 நாளிதழின் வார மலரில் வந்துள்ள ஒரு கட்டுரை கவனிக்கத்தக்கது.

அந்த வாரமலர் கட்டுரையின் தலைப்பே 'இங்கே ஜெர்மனியர்களின் வேலையிடங்கள்'. ஜெர்மனியில் கணிப்பொறி பொறியாளர்கள் 20,000 பேர் மிக நீண்ட காலமாக வேலையற்றவராயுள்ளனர். இதற்கு காரணம் என்ன என ஆய்வு செய்த போது, பெங்களூரின் கணிப்பொறி பொறியாளர்கள் தான் காரணம் என கண்டுபிடித்ததாக எழுதுகிறது.

ஆனால் ஜெர்மானிய நிறுவனங்கள் இந்திய கணிப்பொறி பொறியாளர்களை எந்த அளவு கொடூரமாகச் சுரண்டிக் கொழுக்கின்றன என்பதைத்தான் கட்டுரை அம்பலப்படுத்துகிறது. ஜெர்மானியச் சுரண்டலுக்கு இந்திய அரசு எவ்வளவு சலுகைகளை வாரியிறைக்கிறது என்பதும் அம்பலமாகிறது.

இதில் இன்னொரு கொடுமை என்னவென்றால், பெங்களூரிலுள்ள ஜெர்மானிய நிறுவனங்களில் வேலை செய்யும் இந்திய நிர்வாகிகள் நேர்காணலின் போது தமது அடிமைத்தனத்தையே மிகப் பெரும் சாதனை போல பறைசாற்றுகின்றனர். ஜெர்மானியர்கள் எம்முடன் போட்டி போட முடியாது என பெருமிதமடைகின்றனர். தமது மீதான சுரண்டலைப் பற்றியும் பெருமிதமடைகின்றனர். இதுதான் அடிமை மனோ நிலை.

ஜெர்மன் மின்னணு கூட்டு நிறுவனம் 'சீமன்ஸ்'சின் அதிகாரி திரு. ஹைன்ரிக் - வான் - பீப்பர் இந்தியாவில் தொழில் தொடங்கியதற்கான காரணங்களை பட்டியலிடுகிறார்.

நான்கு சதுர மீட்டர் கூண்டில் அடைக்கப்பட்டு, ஏகாதிபத்தியங்களால் சுரண்டப்படும் பெங்களூர் கணிப்பொறியாளர்கள்.



சீமன்ஸ் நிறுவனம் தொலை பேசி உபகரணங்களை பெங்களூரில் உற்பத்தி செய்கிறது. தொழிலாளி செய்யும் பொருட்களை பரிசோதிக்க வேண்டியதில்லை. அவ்வளவு தரமாக தயாரிக்கின்றனர். இந்தியாவில் மொத்த தயாரிப்பு செலவு ஜெர்மனியில் ஆவதைக் காட்டிலும் கால்வாசி தான்.

இந்தியாவில் உயர்ந்த தொழில்நுட்ப பட்டதாரிக்கு 400 மார்க் (ஜெர்மன் பணம் 1 மார்க் மதிப்பு சுமார் 20 ரூபாய்) லிருந்து 1600 மார்க் தான் மாதச் சம்பளம். இது ஜெர்மனியில் 6300 மார்க்-கிலிருந்து 12,000 மார்க். அதாவது சுமார் 10 மடங்கு வரை அதிகம்.

தவிர ஜெர்மனியில் எல்லா வகை வரிகளையும் கட்ட வேண்டும். இந்தியாவிலோ எந்த வரியும் கிடையாது. இதனால் உலக சந்தையில் மலிவான விலையை நிர்ணயிக்க முடிகிறது. இந்த சீமன்ஸ் நிறுவனம் 1993-ல் ஜெர்மன் ஆலையில் சுமார் 28,000 தொழிலாளிகளை வீட்டிற்கு அனுப்பியது. தற்போது அங்கு பணிபுரிவோர் 2,11,000 பேர்தான்.

தற்போது பெங்களூரிலுள்ள சீமன்ஸ் நிறுவனத்தின் சகோதர நிறுவனம் எஸ்.சி. எஸ்.சில் 300 இந்தியர்கள் வேலை செய்கின்றனர். இது 2000 ஆண்டு வாக்கில் 1000-க்கும் மேற்பட்டவரைக் கொண்டு விரிந்து பரவும்.

இந்தியத் தொழிலாளிகள் இந்த உழைப்புச் சுரண்டலை எதிர்க்க மாட்டார்களா என்பதற்கு பெங்களூரிலுள்ள 'டெய்மிலர் பென்ஸ்' ஆய்வு மைய இயக்குனர் திரு. செஸ்கு பகவத்துல்லா பதில் கூறுகிறார்.

''நான் எப்போதாவது கவனக் குறைவாக இருந்தால் இந்திய பொறியாளர்கள் வாரத்திற்கு 60 மணி நேரம் உழைப்பார்கள். (நிர்வாகி வீட்டிற்கு போ என்றால்தான் போவார்கள். இல்லை எனில் எவ்வளவு நேரமும் வேலை செய்வார்கள்). ஆனால் ஜெர்மனியிலோ, வாரத்திற்கு 40 மணி நேரம் வேலையே அதிகம் என குரல் எழும்பியுள்ளது'' என்கிறார்.

இவர் தனது 30 பொறியாளர்களுடன் 'டெய்மிலர் பென்ஸ்'சின் வார்த்தைகளால் கட்டளையிட்டு இயக்கும் கார்கள் தயாரிப்பான எதிர்கால தொழில் நுட்பத்திற்கும் அதோடு ஜெர்மனி வானவியல் நிறுவனத்திற்கும் வேலை செய்கிறார்.

இவரும் குறைந்த கூலிக்கு தரமான பொறியாளர் கிடைக்கிறார் என பெருமையுடன் கூறுகிறார். நிர்வாகியான இவருக்கு என அலுவலகத்தில் தனியறை கூட இல்லை. இது பற்றிய கேள்விக்கு, 'எல்லோருடனும் சேர்ந்து வேலை செய்யும் போது உற்சாகமாயுள்ளது' என்கிறார்.

1982-ல் 300 டாலர் மூலதனத்துடன் துவங்கப்பட்டது 'இன்ஃபோ சிஸ் டெக்னாலஜிஸ்' என்ற நிறுவனம். இன்று மிகப்பெரிய பரப்பளவுடன் 900 தொழிலாளர்களுடன் ஆண்டுக்கு 3.5 கோடி மார்க் லாபத்துடன் இயங்குகிறது. தெற்காசியாவிலேயே மிகப் பெரிய கணிப்பொறி மையமாகியுள்ள இதன் இன்றைய மூலதனம் 21 கோடி மார்க்.

ஜெர்மன் கணிப்பொறி பொறியாளர்களின் வேலையில்லாத் திண்டாட்டம் 5 ஆண்டுகளில் குறைய வாய்ப்பு உள்ளதா என்பதற்கு 'இன்ஃபோ சிஸ் டெக்னாலஜிஸ்' நிறுவன நிர்வாகி திரு. மாலிஸ் டாண்டன் கூறுகிறார். ''ஜெர்மனியால் முடியாது. எப்படி அது முடியும்? நாங்கள் பெங்களூரில் மிக மலிவானவர்கள்; படைப்பாற்றலுடன் சிறப்பான வேலையாட்கள்''.

அதாவது குறைந்த கூலிக்கு மிகத் திறமையாக உழைப்பதையே தமது கூடுதல் தகுதியாக கருதும் அடிமை மனோ பாவத்தையே வெளிப்படுத்துகிறார்.

இவர்களுக்கு (பெங்களூரிலுள்ள பொறியாளர்கள்) மருத்துவ விடுப்பு கிடையாது. தொழிற்சங்க உரிமைகளைப் பற்றிய அறிவும் அறவே கிடையாது. எனவே வலுவான தொழிற்சங்க இயக்கம் இல்லை.

இந்திய அரசோ 100 சதவீத அந்நிய நிறுவனங்களுக்கு ஏற்றுமதி, இறக்குமதி வரி விதிப்பதேயில்லை. 5 ஆண்டுகளுக்கு வரி கூட கிடையாது. அதன் பின் வெறும் 5 சதம் மட்டுமே வரி விதிக்கிறது.

எனவே ஐ.பி.எம்., சீமன்ஸ், ஆப்பிள், போச், மோட்டாரோலா, மைக்ரோ சாஃப்ட், டெய்மிலர் - பென்ஸ் என சுமார் 550 சர்வதேச உயர்தர உற்பத்தி நிறுவனங்கள் பெங்களூரில் குவிந்துள்ளன. இங்கு உழைப்பைச் சுரண்டி இப்பன்னாட்டு நிறுவனங்கள் ஊதிப் பெருகுகின்றன.

அதே நேரம் உலகச் சந்தையிலிருந்து நம்மை விரட்டியடிக்க உலக வர்த்தக கழகம் (WTO) மூலம் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்திய அரசோ தெண்டனிட்டு, அடிபணிந்து ஏகாதிபத்தியங்களிடம் கெஞ்சுகிறது.

ஜெர்மனியிலிருந்து
பி.வி. சிறீரங்கன்



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள்  கவனிக்கட்டும்

## பா.ஜ.க.வின் என்ரான் விசுவாசம்

என்ரான் நிறுவனத்திற்கும் அதன் எதிர்ப்பாளர்களுக்கும் நடந்த பேச்சு வார்த்தையின் படி, ''இத்திட்டத்தால் பாதிப்படைந்தவர்களுக்கு என்ரான் தலா ஒரு லட்ச ரூபாய் வழங்கும்; மீனவர்களுக்காக குளிர் பதன நிலையம் ஒன்றை அமைத்துத் தரும்'' என்று சிருங்கார்தலி என்ற ஊரில் நடந்த பொதுக்கூட்டத்தில் மகாராஷ்டிர மாநில துணை முதல்வர் முண்டே அறிவித்தார். ஆனால் இந்த பேச்சு வார்த்தையே மோசடியானது என்று குற்றஞ் சுமத்தியுள்ளனர் என்ரான் எதிர்ப்பாளர்கள். ஏனெனில் என்ரான் நிறுவனம் குஹாகர் பகுதியைச் சேர்ந்த பா.ஜ.க. தலைவர்களுடன் தான் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது. மேலும், எதிர்ப்பாளர்கள் முண்டேயின் பொதுக் கூட்டத்தில் நுழைந்து விடாமல் தடுப்பதற்காக, குஹாகர் - சிருங்கார்தலி இடையே ஓடிய அரசு பேருந்துகளையும் பொதுக் கூட்டம் நடந்த அன்று ரத்து செய்து விட்டது, மாநில அரசு.

## ஊதாரிகள்

பஞ்சாப் மாநிலத்தில் சமீபத்தில் நடந்த சில குண்டு வெடிப்புகளைக் காட்டி, அம்மாநிலத்தின் அனைத்து சட்டசபை உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக, ஒவ்வொருவருக்கும் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட ''டாடா சுமோ'' எனும் காரை வழங்கப் போகிறது மாநில அரசு. இந்த இலவசக் கார் திட்டம் 3.5 கோடி ரூபாயை விழுங்கவுள்ளது. இந்த ஊர்திகளைச் சிறப்பாகப் பராமரிக்க எம்.எல்.ஏ.க்களுக்கு கடன் வசதியும் உண்டு. சீக்கியத் தீவிரவாதிகளைவிட, இந்த ஊதாரிகள்தான் பஞ்சாப் மக்களின் முதல் எதிரிகள்!

## நாஜிக் கலைஞருக்கு அமெரிக்க விருது

லெனி ரீஃபன் ஸ்டால் - நாஜி ஜெர்மனியின் மிக முக்கிய புகைப்படக் கலைஞர் மற்றும் திரைப்பட இயக்குநர். ஆரிய இனத்தின் மேலாண்மையைப் போற்றும் விதமாக 1934-ஆம் ஆண்டில் ஜெர்மன் நூரம்பர்க் நகரில் நடந்த நாஜிக்களின் ஊர்வலத்தினை, இவர் ''விருப்பத்தின் வெற்றி'' (Triumph of the will) என்ற பெயரில் திரைப்படமாக எடுத்தார். கடந்த ஆகஸ்டு மாதம் ஹேம்பர்க் நகரில், ஜெர்மன் மக்களின் பலத்த எதிர்ப்பையும் மீறி இவர் புகைப்படக் கண்காட்சி ஒன்றினை முதன் முறையாக நடத்தினார். இக்கண்காட்சியில் நூரம்பர்க் ஊர்வலப் புகைப்படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. ''இது நவீன நாஜிக்களுக்கு டானிக் கொடுத்தது போல'' என எதிர்ப்பாளர்கள் அம்பலப்படுத்தினர். இது ஒருபுறமிருக்க, அமெரிக்காவில் செயல்படும் ''சினிகான்'' எனும் அமைப்பு, 95 வயதான இப்பெண்மணிக்கு, இந்த வருட திரைப்படச் சாதனையாளர் பட்டத்தினை வழங்கியுள்ளது.

## மனித மிருகங்கள்

போலீசின் வக்கிர புத்திக்கும், மனித உரிமை மீறலுக்கும் இது இன்னுமொரு உதாரணம்: சண்டிகர் நகரில், தொலைபேசித் துறையில் கடைநிலை ஊழியராக வேலை பார்க்கும் விதவைத் தாயையும், அவரது மகனையும் இழுத்துச் சென்ற போலீசு, தாயையும் மகனையும் நிர்வாணப்படுத்தி, காவல் நிலையத்தினுள் ஓட ஓட விரட்டித் தாக்கியது. நிர்வாண உடம்பெங்கும் மின்சார அதிர்ச்சி கொடுத்து, சித்திரவதை செய்துள்ளது. தாயும் மகனும் அவமானத்தால் கூசிப் போய் கூனிக் குறுகி நின்றதையும் வலியால் துடித்து அலறியதையும் ரசித்து மகிழ்ந்துள்ளது போலீசு கும்பல். அவ்விதவைத் தாயின் மற்றொரு மகன், தான் காதலித்தப் பெண்ணை, அவர் வீட்டிற்குத் தெரியாமல் கூட்டிச் சென்று விட்டார். அப்பெண் எங்கிருக்கிறார் என்ற உண்மையை(!)க் கண்டுபிடிக்கத்தான் இந்த வெறியாட்டம்.


பம்பாய் திலக் நகரில் சோட்டா ராஜன் மாஃபியா கும்பலால் அமைக்கப் பெற்ற ரணாக்பூர் ஜைனமதக் கோயில் மாதிரி

## விநாயகர் சதுர்த்தியும், மாஃபியா கும்பலும்

இந்து மதப் பண்டிகையான விநாயகர் சதுர்த்தியையொட்டி பம்பாய் நகரில் தெருவுக்குத் தெரு வெகு ஆடம்பரமாக நடைபெற்று வரும் கணேஷோத்ஸவ் விழா, பல்வேறு மாஃபியா - கிரிமினல் கும்பல்களின் பிடிக்குள் சென்று விட்டது லால்பாக், பரேல், தாதர் பகுதிகளில் அருண் காவ்லி, அஸ்வின் நாயக் கும்பலும், திலக் நகரில் சோட்டா ராஜன் கும்பலின் தலைமையில்தான் விழா வருடா வருடம் நடைபெற்று வருகிறது. இவ்வருடம் திலக் நகரில், புகழ் பெற்ற ரனாக்பூர் ஜைன மதக் கோயிலின் மாதிரியை அரங்கமாக அமைத்துள்ள சோட்டா ராஜன் கும்பல், அரங்கம், அழைப்பிதழ்கள், பூஜை, பிரசாதம் என எல்லாவற்றுக்குமாகச் சேர்த்து இருபது லட்ச ரூபாயை வாரியிறைத்துள்ளது. மாஃபியாக்களின் இந்த ஊடுருவலை எந்தச் சட்டத்தைக் கொண்டு தடுத்து நிறுத்துவது என தலையைப் பிய்த்துக் கொண்டு திரிகிறது அதிகார வர்க்கம்.

## 'தேசிய' வெறியே 'தேச'ப் பற்று!

''பாகிஸ்தான்: ஐம்பது வருட சுதந்திரம்'' என்ற நூலினை, கர்நாடக மாநில நூலக இயக்குநர் அம்மாநில நூலகங்களுக்காக வாங்கியிருந்ததால், அவர் மீது நடவடிக்கை எடுக்கப் போவதாக மாநில முதல்வர் சட்டசபையில் உறுதியளித்துள்ளார். ''இந்தியா சுதந்திர தினப் பொன்விழா கொண்டாடும் பொழுது, பாகிஸ்தானின் பொன் விழாவைப் பற்றி நூல் வாங்குவதா?'' என பா.ஜ.க. உசுப்பி விட்ட தேசிய வெறிக்கு, ஜனதா தளம் போட்ட சலாம்தான் இந்த அறிவிப்பு!

## அமெரிக்காவின் கவலை

அமெரிக்காவில் 1995-ஆம் ஆண்டில் மட்டும் 9,600 கோடி பவுண்டு எடையுள்ள உணவுப் பொருட்கள் வீணாகக் குப்பைத் தொட்டிகளில் தூக்கி எறியப்பட்டுள்ளன. இது, அமெரிக்காவில் கிடைக்கும் மொத்த உணவுப் பொருளில் 27 சதவீதமாகும். இப்படி ஆண்டுதோறும் வீணடிக்கப்படும் உணவுப் பொருட்களில் ஐந்து சதவீதத்தைச் சேமித்தாலே அமெரிக்காவில் வீடற்றும், பஞ்சைப் பராரிகளாகவும் சுற்றித் திரியும் நாற்பது லட்சம் மக்களின் பசியினைப் போக்கிவிட முடியும். 'அமெரிக்கர்களின் இந்த நாசுக்கு கலாச்சாரத்தை மாற்றி, மீதமாகும் உணவைத் தானமாகக் கொடுக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க நாடெங்கும் கருத்தரங்குகளை நடத்தவுள்ளது, அமெரிக்க நிர்வாகம்.


## ஐ.எம்.எஃப் கட்டளை அடிபணிந்தது பாகிஸ்தான்


பாகிஸ்தானின் முக்கிய அரசு வங்கியான ''ஹபிப் வங்கி'', தனது நிர்வாகத்தில் 25 வருடங்களாக வேலை பார்த்து வருபவர்கள் அல்லது 55 வயதை எட்டியவர்கள் அனைவருக்கும் ஒட்டு மொத்தமாகக் கட்டாய ஓய்வு கொடுத்து வீட்டிற்கு அனுப்பி விட்டது. ஐ.எம்.எஃப். சொன்னான்; நவாஸ் செரீப் செஞ்சான்!

Published and Owned by A. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: A. SHANMUGA RAJ

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 Regd. No. TN/MS(S) 622 / 97





# இதுதான் இன்றைய இந்தியா

இங்கே பிரசுரமாயிருக்கும் படங்களுள், ஒன்றில் சென்னை கிண்டியில் முன்னாள் தமிழக முதல்வர் பக்தவச்சலத்துக்கு நினைவு மண்டபம் கட்டுவதற்கு முதல் கட்டப் பணிகள் நடைபெற்று வருவதைக் காணலாம். மற்றொன்று, புதுப் பொலிவுடன், கண்ணைப் பறிக்கும் அழகுடன் முற்றிலும் புதுவிதமாக மாற்றியமைக்கப்படவுள்ள அண்ணா சமாதியின் முகப்புத் தோற்றத்தின் வரைபடம்.

1965களில் நடந்த தமிழ் மொழி உரிமைக்கான போராட்டத்தைக் கொடூரமாக ஒடுக்கிய தமிழினத் துரோகி பக்தவச்சலம். இருந்தாலென்ன, பக்தவச்சலத்தின் மகள் தன்னைச் சந்தித்த மறுநிமிடமே, பத்தாண்டுகளாகத் தூசி படிந்து கிடந்த இந்தத் திட்டத்திற்கு உயிர் கொடுத்து, 25 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, தனது பரந்த மனப்பான்மையைக் காட்டிக் கொண்டுள்ளார், திடீர் 'தேசிய'வாதி கருணாநிதி.

இது ஒருபுறமிருக்க, அண்ணா சமாதியை 2.44 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கும் திட்டமும் தயாராக உள்ளது. சமாதியெங்கும் பளிங்குக் கல், சலவைக் கற்களைப் பதித்து, கொலு மண்டபங்கள் அமைத்து, புல்வெளிகள் - நீரூற்றுகளால் எழிலூட்டி, ஆசியாவிலேயே எந்தவொரு அரசியல் தலைவனுக்கும் இதுபோன்று நினைவு மண்டபம் அமைக்கப்பட்டதில்லை எனும் வண்ணம் அழகுபடுத்தப் போகிறது, கலைஞர் அரசு.

இதோ இந்தப் படத்தின் வலது புறத்தில் குப்பைக் கூளங்களுக்கு நடுவே சென்னை மாநகராட்சியின் குடிநீர்த் தொட்டி இருப்பதைக் காணலாம். கால் வைக்கவே அருவருப்பாகத் தெரியும் இந்த இடத்தில் இருந்துதான், வட சென்னையில் உள்ள சி.பி.நகர், கொல்லாபரி நகர்களில் வாழும் மக்கள் குடிநீர் எடுத்துச் செல்கிறார்கள். முறையான குடியிருப்பு வசதிகள் இல்லாததால், குடிநீர்த் தொட்டி இருக்குமிடமே துணி துவைக்கும் இடமாகவும் மாறிப் போனது.

அடிப்படை சுகாதார வசதி ஏதுமின்றி, குடலைப் புரட்டி எடுக்கும் நாற்றத்தின் நடுவே, கொசுக்களும், ஈக்களும் மொய்த்துத் திரியும் இந்த இடத்தில் தான் இப்பகுதி மக்கள் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வருகின்றனர். சேரும் சகதியும், சாக்கடை நீரும் நிறைந்து கிடக்கும் மாநகராட்சி சாலைகள் தான் இவர்கள் குழந்தைகளின் விளையாட்டுத் திடல். இச்சுகாதார கேட்டால் காலரா, மலேரியா, மூளைக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்களுக்கு முதல் பலியாவதும் வட சென்னையில் வாழும் இந்த உழைப்பாளி மக்கள்தான்.



இறந்து போன அரசியல் தலைவனின் சமாதி கோடிக்கணக்கான ரூபாய் செலவில் கொலு மண்டபமாக மாறும் அற்புதம் ஒருபுறம்; ஆட்சியாளர்களின் அலட்சியத்தால், உழைக்கும் மக்களுக்கு குடியிருக்கும் இடமே சமாதியாக மாறும் அவலம் மறுபுறம். இந்த ஓரவஞ்சனை இனியும் நீடிக்கலாமா?